விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆவணி 30 வெள்ளிக்கிழமை (15.09.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 270

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

## சட்டமா அதிபருக்கு நீதிமன்று அழைப்பாணை

(கொழும்பு)

எதிர்வரும் 20 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு சட்டமா அதிபர் ஜயந்த ஜயசூரியவிற்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தால் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்க மற 23

## 30 ஆண்டுகள்
## தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)



இந்திய அரசிடம் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து தியாகதீபம் திலீபன் 30 ஆண்டுகளுக்கு முன்னர் இன்றைய தினமே உண்ணாவிரதத்தை ஆரம்பித்த 23

## தென் அமெரிக்கா கோரினால் ஜகத்தை கையளிக்க வேண்டுமாம்!
### விமல் கண்டுபிடிப்பு

(கொழும்பு)



பலவந்தமாக காணாமலாக்கப் பட்டவர்களுக்கு பாதுகாப்பளிப்பது தொடர்பான சர்வதேச பிரகடனம் அங்கீகரிக்கப்பட்டால் தென் அமெரிக்காவின் ஏதாவது ஒரு 23


# கிழக்கு விளங்காத்தன்மையால் ஆதரவு!

# வடக்கில் அதை செய்யமாட்டோம்

## 20ஆம் திருத்தம் குறித்து முதல்வர் நிலைப்பாடு

(யாழ்ப்பாணம்)

திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதாக விளங்காத்தன்மையால் தமது ஆதரவை கிழக்கு மாகாண சபை தெரிவித்திருக்கக் கூடும். ஆனால் 20ஆம் திருத்தச்சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொண்டு முறைப்படி எமக்கு அறிவிக்காவிட்டால் 20ஆவது திருத்தத்தை வடக்கு மாகாணசபையில் அங்கீகரிக்கப்போவதில்லையென வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)



## மர்மக் காய்ச்சல்
## 11 மாத குழந்தை உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

மர்மக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு, பதினொரு மாதங்களேயான பெண் குழந்தை ஒன்று நேற்று முன்தினம் யாழ் போதனா 23

## பாதுகாப்பு துறைக்கு இம் முறையும் அதிக நிதி ஒதுக்கீடு - நிதியமைச்சர்

(கொழும்பு)

எதிர்வரும் நவம்பர் 9ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ள 2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கே அதிக நிதி ஒதுக்கப்படவுள்ளதாக



நிதியமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இதன்படி ரூ.1,583,507,600 அதாவது ரூ.158.83 பில்லியன் அல்லது 15 ஆயிரத்து 883 கோடி ரூபாய் ஒதுக்கப்படவுள்ளது. (மு)

## கொழும்பில் அம்மன் சிலை உடைப்பு

(கொழும்பு)

கொழும்பு கதிரேசன் வீதியில் உள்ள அம்மன் கோவிலின் வாயில் பகுதியிலுள்ள சிலை ஒன்று விசமிகளினால் உடைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு மழை பெய்து கொண 23

## தேர்வான தொண்டர் ஆசிரியர் விபரம் இன்னும் இரு வாரங்களில்

(யாழ்ப்பாணம்)

வட மாகாண தொண்டர் ஆசிரியர்களிற்கு இடம்பெற்ற நேர்முகத் தேர்வின் அடிப்படையின் தேர்வானவர்களின் பட்டியல் செப்ரெம்பர் மாதம் முடிவதற்கு முன்பாக அனுப்பிவைக்கப்படும் என மத்திய கல்வி அமைச்சர் வட மாகாண அதிகாரிகளிடம் உறுதியளித்தார்.

யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் மத்திய கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் இடம்பெற்ற தேசிய அஞ்சல் ஓட்டப் போட்டி நிகழ்விற்கு வருகை தந்த மத்திய கல்வி அமைச்சின் செயலாளருக்கும் மாகாண அதிகாரி 23

## காணாமல் போனோர் அலுவலகம் இன்று முதல் செயற்படும்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கையொப்பமிட்ட காணாமல் போனவர்கள் தொடர்பான அலுவலகத்தை ஸ்தாபிக்கும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இதன் நடைமுறைகள் இன்று 15ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வருவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

எனவே காணாமல் போனவர்களின் உறவுகளுக்கு அங்கு முறைப்பாடுகளை சமர்ப்பிக்க முடியும் என குறிப்பிடப்படுகிறது.

காணாமல் போனவர்கள் தொடர்பான அலுவலகத்தை 23

## நம்பகமான ஆட்களை நியமிக்க வேண்டும் — மேற்குலகு

(கொழும்பு)

காணாமல் போனோர் பணியகத்தை உருவாக்கும் வர்த்தமானி அறிவித்தலை வரவேற்றுள்ள மேற்குலக நாடுகள் இந்த பணியகத்துக்கு நம்பகமான ஆணையாளர்களை நியமிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளன.

(விரிவான செய்தி 15ஆம் பக்கம்)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் கொலை; 5 பொலிஸாருக்கும் 11 மாதங்களின் பின் பிணை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்கள் இருவர் சுட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் இருந்த ஐந்து பொலிஸாரும் 11 மாதங்களின் பின்னர் நேற்றைதினம் யாழ் மேல் நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். கொக்குவில் குளப்பிட்டிச் சந்திக்கு அண்மையில் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதி இரவு யாழ். பல்கலைக்கழக மூன்றாம் வருட கலைப்பீட மாணவர்களான விஜயகுமார் சுலக்சன்; நடராஜா கஜன் ஆகியோர் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த போது பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி பலியாகியிருந்தனர்.

இந்த நிலையில் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களான 5 பொலிஸார் கைது செய்யப்பட்டு கடந்த 11 மாதங்களாக தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டு விசாரணைகள் மேற் 23

## அமரர் ஊர்திச் சாரதி விபத்தில் சிக்கி அமரரானார்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டச் செயலகத்துக்கு அண்மையில் நேற்றைய தினம் அதிகாலை இடம்பெற்ற விபத்தில் அமரர் ஊர்தி ஒன்றின் சாரதி ஒருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார்.

வவுனியாவை சேர்ந்த கிறிஸ்கோ ஜெயராஜ் (வயது 70) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார்.

இவர் யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியாவுக்கு சடலம் ஒன்றை கொண்டு சென்றுவிட்டு பின்னர் வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த போது அவர் பயணம் செய்த அமரர் ஊர்தி வேகக்கட்டுப்பாட்டை இழந்து மாவட்ட 02

After A/L's Join PLATINUM PARTNER No.1 BTEC Centre in Sri Lanka

Pearson BTEC WOLVERHAMPTON RICS CIOB

20 வருடகால தொழிற்துறை சார்ந்த உயர்கல்வித்துறையில் நம்பகமும், சிறப்புமிக்கதுமான BCAS Campus உடன் இணைந்து UGC அங்கீகாரம் கொண்ட UK பட்டப்படிப்புகளை தொடருங்கள்...



BTEC HND in Quantity Surveying Civil Engineering

MSc or MEng

BSc (Hons) BEng (Hons)

BTEC HND in QS / Civil

UGC Recognised TVEC Approved

After A/L

- நவீன கற்கை வசதிகளுடன் கூடிய பிரத்தியேக Civil Engineering, QS கற்கை நிலையத்தில் வழங்கப்படும் பாட நெறி
- பல்கலைக்கழக விரிவுரையாளர்களையும் அனுபவமிக்க Civil Engineering, QS நிபுணர்களையும் கொண்ட முழுநேர விரிவுரையாளர்கள்
- அங்கீகரிக்கப்பட்ட Laboratory களில் Material, Hydraulic, Soil நடைமுறைப்பயிற்சிகள்

(சி-9647)

BCAS CAMPUS BRITISH COLLEGE OF APPLIED STUDIES

Tenny 0766 693 681 Sanchu 0777 102 131 INTAKE NOW ON


20 YEARS

BCAS Jaffna Campus, #. 16, Point Pedro Road, Jaffna

Best Employer Brand Award 2017 | No.1 BTEC Centre in Sri Lanka 2016 | Best Academic & Industry Interface 2016 | Academic Impact Winner 2016 | No.1 Higher Education Provider 2014 | BTEC Gold Partner 2013 | Performance Excellence Award 2011 | Fastest Growing BTEC Centre 2010

0212219910 | 0112597217 | info@bcas.lk | www.bcas.lk


# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 18.08.2017 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்.

## அமரர் மகாலிங்கம் புஷ்பலிங்கம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 16.09.2017 நாளை சனிக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெறும். மறுநாள் 17.09.2017 ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்

அத்துளு அம்மன் கோவிலடி, கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

இங்ஙனம் குடும்பத்தினர். (C-9644)

## அமரர் ஊர்திச் சாரதி...

செயலகத்துக்கு அண்மையில் உள்ள மதிலுடன் மோதுண்டு விபத்துக்குள்ளது.

இதில் சாரதியின் நித்திரைக் கலக்கத்தினாலேயே மேற்படி விபத்து இடம்பெற்றுள்ளதென்பதுடன், இவர் விபத்துக்குள்ளர்கிய நேரம் அதிகாலை என்பதால் நீண்ட நேரத்துக்கு பின்னரே விபத்து இடம்பெற்றதை பொதுமக்கள் அவதானித்துள்ளனர். பின்னர் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதை அடுத்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (மு-9,30)


WESTERN UNION WU

moving money for better

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப நாடுங்கள்

உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.

இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை

Authorised Agent

SRI MURUGAN

TELE COMMUNICATION & AGENCY POST OFFICE

# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

(சி-9578)


## ஆங்கிலம், சிங்களம்

அடிப்படை தொடக்கம் O/L பரீட்சை வரை கற்பிக்கப்படும். துரித பேச்சுப் பயிற்சி.

தொடர்பு:- K.சோமசுந்தரம் (J.P)

சந்தை முன் ஒழுங்கை சாத்தாவத்தை, வைரவ கோவிலடி, மானிப்பாய்-T.P:-0774041904 (367)

## கார், வான் வாடகைக்கு தேவை

நிறுவனத்திற்கு கார்கள், வான்கள் மாத வாடகைக்கு தேவை.

தொடர்பு:- 0764481101 (374)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

கனகலிங்கம் திலகவதி முகவர் ஊடாக 13.09.2017 விற்பனை செய்யப்பட்ட அபிவிருத்தி லொத்தர் தசலக்ஷபதி (Cau Plus) லொத்தர் மூலம் ரூபா ஒரு இலட்சம் (100000) பணப்பரிசை ஒரு அதிர்ஷ்டசாலி பெற்றுள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்து கொள்கின்றோம்.

நீங்களும் அதிர்ஷ்டசாலியாக கனகலிங்கம் திலகவதி லொத்தர்களைப் பெற்று பண பரிசை வெல்லுங்கள்.

வளமான வாழ்வுக்கு அபிவிருத்தி லொத்தர்.

**கனகலிங்கம் திலகவதி அபிவிருத்தி லொத்தர்**

**முகவர், வைரவ கோயிலடி யாழ்ப்பாணம்.** (371)



குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

யாழ்.மனவளக்கலை மன்ற அறக்கட்டளை பெருமையுடன் வழங்கும் பிறப்பின் நோக்கம் மனிதன் முழுமை அடைதல் அதற்கான ஆரம்ப ஆளுமை திறனூக்கப் பயிற்சிகள்

- எளியமுறை உடற்பயிற்சிகள்
- காயகல்ப பயிற்சி
- எளியமுறை தியானப் பயிற்சிகள்
- அகத்தாய்வு பயிற்சிகள்

**இடம்: யாழ்ப்பாணம், அறிவுத்திருக்கோவில்**

**காலம்: 16.09.2017 (சனி) மாலை 05.00 மணி**

அகத்தாய்வு-01

16.09.2017-17.09.2017 காலை 09.00 மணிக்கு நடைபெறும். மீள்பயிற்சி அன்பர்களும் கலந்து கொள்ளலாம்

வழங்குபவர்

தமிழகத்திலிருந்து வருகை தந்திருக்கும் மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி இந்திரா சண்முகசுந்தரம் அவர்கள்.

விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் 0212222772, 0714403268, 0771235646.

*வாழ்க வளமுடன*

யாழ்.அறிவுத்திருக்கோவில்

மனவளக்கலைமன்ற அறக்கட்டளை

இல.81 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-9645)

## மரண அறிவித்தல்

திருமதி

### நமலேஸ்வரி கத்தறீன் சூசைப்பிள்ளை



ஏழாலை தெற்கு, சூராவத்தை சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நமலேஸ்வரி கத்தறீன் சூசைப்பிள்ளை அவர்கள் 13.09.2017 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அதிபர் பேனாட் சூசைப்பிள்ளையின் மனைவியும், காலஞ்சென்ற அப்பாதுரை-தங்கம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற பேனாட் கிறீஸ்ரீனா தம்பதியினரின் மருமகளும், ஜோசவ் தயாநிதி, ஜோசவ் தவராஜா காலஞ்சென்ற ஜோசவ் செல்வராஜா, கத்தறின் ஜெயவதி, ஜோசவ் சாந்தகுமார், அஞ்சலா, திலகவதி, எறின் வளர்மதி ஆகியோரின் பாசமிகு தாயும், சாந்தி, டெய்சி, எழில், நேசன், பொன்ராஜ், தயாபரன் ஆகியோரின் மாமியாரும், தஸ்மின், யாழினி, அமல்ராஜ், அமல்தாஸ், பேனாட் ஆகியோரின் அம்மம்மாவும், துஸ்மின், யாழினி, உசாந்தினி, தயாளன், தயாபரன், கரன், றூபினி, மரினா, மீறுஜா, செல்வராஜ், சயுபா ஆகியோரின் அப்பம்மாவும், யூலியாவின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (16.09.2017) சனிக்கிழமை பி.ப 3 மணிக்கு சூராவத்தை துய திரேசம்மாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு ஏழாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:-சூ.ஜோ.தவராஜா (தவா) (மகன்) T.P:-0774424335**

"நமலவாசா" சூராவத்தை, சுன்னாகம். (372)




# இன்னிசையுடன் பாராட்டு விழா

ஏழாலை மண்ணின் மைந்தன்

## சிவலிங்கம் சிவகாந்தன்



தென்னிந்திய பிரபல பாடகர்கள்
சந்தோஷ், பூஜா

ராஜன் இசைக்குழுவின் இன்னிசையுடன்

காலம் 16.09.2017

சனிக்கிழமை மாலை 4.00 மணி




இடம்: விழிசிட்டி பாடசாலை மைதானம், ஏழாலை தெற்கு, ஏழாலை

அனைவரையும் வருக வருகவென வரவேற்கின்றோம்...

(355) தமிழ் பொதுப்பணி மன்றம், ஏழாலை தெற்கு.


## பருத்தித்துறை நகரிலுள்ள காட்சியறை உடைத்து திருட்டு



(கரணவாய்)

பருத்தித்துறை நகரிலுள்ள அப்பான்ஸ் காட்சியறை உடைக்கப்பட்டு அங்கிருந்த பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

நேற்று வியாழக்கிழமை காலையிலேயே காட்சியறை உடைக்கப்பட்டு பொருட்கள் திருடப்பட்டமை தெரியவந்தது.

பருத்தித்துறை நகரின் பிரதான வீதியில் அமைந்துள்ள இக்காட்சியறையின் முன்பாக இரவுவேளையில் வீதிவிளக்குகள் எரிந்துகொண்டிருப்பதாகவும் அப்படி இருந்தும் முன்பக்க கதவினையும் முன்பக்கத்திற்கு பொருத்தப்பட்டிருந்த கண்ணாடியையும் உடைத்து உள்நுழைந்துள்ளனர்.

இதுதொடர்பில் பருத்தித்துறை பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. (இ-60)


வாத நோய்களுக்கு சிறப்புச் சிகிச்சை

Special Treatment for Rheumatism

கழுத்துப்பிடிப்பு (Cervical spondylosis), தோள் மூட்டு வாதம் (Frozen shoulder), கீழ்முதுகு வலி (Law back pain), நாரிப்பிடிப்பு (Lumbago), முள்ளெலும்பு இடைத்தட்டு நழுவல் (Nerve root compressed by the Disc Hernia), இடுப்பு, தொடை, பாதம் வரை தாக்கும் தீவிர நரம்பு வலி (Sciatica) மற்றும் மூட்டுக்களை பாதிக்கும் முடக்கு வாதம் (Rheumatic arthritis), முழந்தாள் மூட்டுத்தேய்மான வாதம் (Destruction of knee cartilage; Synovial fluid damage & Ligament loosening), குதிவாதம், நரம்பு, தசை, மூட்டுக்களின் (Neuro-mascular problems), பிரச்சனைகள், பிரசவத்தின் பின்பும், மாதவிலக்கு ஓய்வு காலத்தின் பின்பும் (Post caesarean & menopause) ஏற்படும் தசை - மூட்டு வலிகள் (Masculer & joint pain), சிறுவர் வாதம் (Juvenile arthritis), பாரிசவாதம் (Paralysis), எலும்பு முறிவின் பின் சீரமைப்பு போன்ற நோய்களுக்கு விசேட சித்த-ஆயுள்வேத சிகிச்சைகள் பெறலாம்.

சிகிச்சைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (ind)
Regd - (7966,Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதியின் உள்ளே)
நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel. 021 205 4066 / 077 872 5251


## 'சாட்சியமளிக்க விருப்பமில்லை'

### அர்ஜூன் அலோசியஸ் அறிவிப்பு

(கொழும்பு)

சர்ச்சைக்குரிய பிணை முறி விநியோகம் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக் குழுவில் சாட்சியமளிக்க தான் விருப்பமில்லை என பேர்பெச்சுவல் ட்ரஷரிஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் அர்ஜூன் அலோசியஸ் குறித்த ஆணைக்குழுவில் நேற்று முன்னிலையான போது தெரிவித்துள்ளார்.

பேர்பெச்சுவல் ட்ரஷரிஸ் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் - வாங்கல்கள் தொடர்பிலும் தன்மீது முன் வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களைத் தெளிவுபடுத்தும் நோக்கிலும் விசேட அறிக்கையொன்றை வழங்கவும் நேற்று அவர் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் முன்னிலையில் ஆஜராகியிருந்தார். இதன்போதே அர்ஜூன் அலோசியஸ் ஆணைக்குழுவினரிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)



## கூட்டுறவு வைத்தியசாலை திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை திறப்பு விழா நாளை 16 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு வைத்தியசாலை வளாகத்தில் கூட்டுறவு வைத்தியசாலை சங்கத் தலைவர் இ.சேதுநாதன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் கருந்தகுமாரன், வலி.வடக்கு பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீ, யாழ்.போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் டாக்டர் க.ஸ்ரீபவானந்தராஜா, தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை அத்தியட்சகர் டாக்டர் யோ.திவாகர், கௌரவ விருந்தினர்களாக கூட்டுறவு உதவி ஆணையாளர் ஏ.பா.மோகன், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன், சட்டத்தரணி சா.செ.சந்திரகாசன், செல்வி கனகரத்தினம் மகேஸ்வரி ஆகியோர் கலந்து கொள்வர். (இ-7)

## வரலாற்றை புரியாதவர்களாக அரசியல்வாதிகள் உள்ளனராம்

### மேர்வின் வருத்தம்

(கொழும்பு)

எமது நாட்டிலுள்ள சிங்களவர்களுக்கும் பௌத்தர்களுக்கும் எதிராக முன்னெடுக்கப்படும் நடவடிக்கையின் ஆரம்பகட்டமாகவே மகா சங்கத்தினரின் கௌரவத்தை குறைக்கும் செயல்களைத்தான் கருதுவதாக முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்தார்.

தற்போதுள்ள சில அரசியல்வாதிகள் சமயத்தை அறியாதவர்களாகவும், நாட்டு வரலாற்றைப் புரியாதவர்களாகவும் இருக்கின்றனர். பௌத்த மத குருமார்களுக்கு எதிராக மிக மோசமான முறையில் பேசுவதை நாம் ஊடகங்கள் ஊடாக பார்க்கின்றோம்.

அதேபோன்று, நீதிமன்றத்துக்கு, நீதிபதிகளுக்கு, சட்டத்தரணிகளுக்கு எதிராக பேசுவதையும் காண்கின்றோம். இவற்றை அரசாங்கம் அறிந்த நிலையில் மேற்கொள்ளப்படுவதாயின், இப்படியானவர்களுக்கு தண்டனை அவசியமில்லை. மாறாக, அரசாங்கம் அறியாத நிலையில் முன்னெடுக்கப்படுகிறதாயின் இவர்களுக்குத் தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நேற்று ஒருவர் பேசினார். இன்று இன்னுமொருவர் பேசுகின்றார் என்றால் அது தவறாகும் எனவும் மேர்வின் சில்வா மேலும் தெரிவித்தார். (இ-7)

# குரு பட்டாபிஷேக நிறைவு நாள்

# வாழ்த்துக்கள்



**34ம் வருஷ நிறைவு**

**சைவ சித்தாந்த பண்டிதர்**
**சிவாகம உபதேச வாசஸ்பதி**
**சிவாகம வித்தியாபூசணம்**

**சிவஸ்ரீ. தியாக.**
**சோமாஸ்கந்தராஜாக் குருக்கள்**
B.A.Dip in Edu.M.A பிரதியதிபர்
**நெல்லண்டைப் பத்திரகாளியம்மன்**
**தேவஸ்தானம் (ஆதீன ஹர்த்தா)**

**3ம் வருஷ நிறைவு**

**சிவாகம கிரியாக்கிரமஜோதி**
**தற்புருட சிவாச்சாரியார்**

**சிவஸ்ரீ. சோமாஸ்கந்த**
**தனஞ்செயன் குருக்கள்**
**நெல்லண்டைப்**
**பத்திரகாளியம்மன்**
**தேவஸ்தான பரம்பரை அர்ச்சகர்**



அன்னை அம்பிகைக்கும் ஐங்கரற்கும் ஆறுமுகற்கும்
முன்னை அடிபணிந்து முறைசார் கிரியைகளை – பின்னமிலான்
சோமாஸ்கந்தராச குரு தருகின்றான்
மாமாயி மாகாளி துணை
எல்லாமா யொன்றாகி எங்கும் நின்று இருள் கெடுக்கும் பரஞ்சுடராம் ஈசனுக்கு
ஒல்லாதே தீபங்கள் கையிற் கொண்டு ஓங்கார வடிவாகச் சிரசு நெற்றி
நல்லாரம் திகழ் மார்பு நளின பாதம் நவிலுமிந்த அங்கங்கள் நேர்முன்னாகச்
சொல்பொருளாஞ் சுருதி மணியோசையோடும்
சுற்றுகின்ற சோமாஸ்கந்தராஜாக் குரு வாழி! வாழி!!
குணமென்னும் குன்றேறி நின்று குருவாய் மணம் வீசும் மைந்தன்
தனஞ்செயனுடன் ஒருங்கிருந்து கணமும் கவலைகளற்றுப் பெருவாழ்வு
வாழ்கவென குணமனையாட்டி விஜிதா ராமனோடு உமை வாழ்க தினமே

வாழ்த்துவோர்:
அன்புடன் சிவத்திரு தம்பு இராமச்சந்திரன் – தும்பளை
வில்வளை ஸ்ரீ மஹாபிரத்தியங்கிரா காளி அம்மன் தேவஸ்தானம்
தும்பளை நெல்லண்டை இலட்சுமணன் தோட்டம் வீரமாகாளியம்மன் வட பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம்

(C-9650)

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

## Faculty of Arts

University of Jaffna will entertain applications from qualified persons for the undermentioned posts:

**i. Temporary Assistant Lecturer/Temporary Tutor/Temporary Instructor /Temporary Demonstrator**

Archeology /Art & Design/ Christian Civilization/Drama & Theatre Arts / Economics /English Literature /English Language Teaching / Fine Arts /Geography/Hindu Civilization/Hindu Philosophy / History/Home Economics / Information and Communication Technology/Linguistics/Media Studies/ Planning /Philosophy / Political Science/ Psychology /Sanskrit /Sociology / Tamil / Translation Studies

Minimum Requirements/Qualifications for the posts:

1. A Degree with specialization in the relevant subject with First or Second Class (Upper Division) Honours;
   OR
2. A Degree with specialization in the relevant subject with Second Class (Lower Division) Honours;
   OR
3. (a) A Degree with specialization in the relevant subject without Honours or any other degree with at least Second Class Honours, and (b) a recognized postgraduate degree in the relevant subject

**Notes: Candidates awaiting the results of the final degree examination may also apply for Temporary Tutor /Instructor/Demonstrator**

**ii. Temporary Instructor /Visiting Instructor**

English Language Teaching

Minimum Requirements/Qualifications for the posts:

1. A Special Degree in English;
   OR
2. A General Degree with English Language as a subject;
   OR
3. A Special /General Degree with a Diploma in English of not less than 18 months duration obtained from a University or UGC recognized other Higher Educational Institution
   OR
4. The Postgraduate Diploma/Masters m in Teaching of English as a Second Language from the University of Colombo/Open University of Sri Lanka or an equivalent qualification of not less than one year duration obtained from a University or UGC recognized other Higher Educational Institution

**iii. Visiting Lecturer/ Visiting Instructor in Media Studies**

**Minimum Requirements/Qualifications:**
A special degree in the relevant field with at least five years' experience in teaching/professional experience

- Preference will be given to those who have postgraduate degree (MPhil/PhD.) in the relevant degree/subject along with the required experience

**Salary:**

| | |
|---|---|
| Temporary Assistant Lecturer | Rs. 35,556/- per month fixed |
| Temporary Tutor /Instructor/Demonstrator | Rs. 29,190/- per month fixed |
| Visiting Lecturer (lecture) | Rs. 1,500/- per hour |
| Visiting Lecturer (practical) | Rs. 600/- per hour |
| Visiting Instructor | Rs. 600/- per hour |
| Visiting Instructor in English | Rs. 750/- per hour |

**Closing date: 29.09.2017 (application should reach us on or before the given date)**

Application forms and other details may be obtained from the office of the Deputy Registrar/ Academic Establishments,University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form at People's Bank, University of Jaffna Branch or at the Shroff's counter of the University of Jaffna. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/ Postal Order drawn in favour of the Bursar, University of Jaffna together with a self-addressed stamped envelope 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website www.jfn.ac.lk. Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/Postal Order for Rs.100/- drawn in favour of the Bursar, University of Jaffna.

Applications for the above posts should be sent to the Deputy Registrar/Academic Establishments, University of Jaffna.

Applicants from the University System/Government Departments/Corporations and Statutory Board should channel their applications through the Head of the respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for interview.

**Registrar**
University of Jaffna
Jaffna
14.09.2017


(C-9646)

# சிங்கள பௌத்த ஆதிக்கத்தின் நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை

## வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் விசனம்

(கொழும்பு)

**தமிழர்களின் அரசியல் உரிமை தொடர்பில் சிங்கள பௌத்த ஆதிக்கத்தின் நிலைப்பாட்டில் மாற்றங்கள் இல்லை. கொடுப்பதை வாங்கிக்கொண்டு இருக்க வேண்டும் என்றே அவர்கள் இன்னும் கருதுகின்றனர். எனவே நிலையான மாற்றத்திற்காக கடினமாக முயற்சிக்க வேண்டும் என வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.**



மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்கர்களுடனான சந்திப்பு தொடர்பில் தெளிவுபடுத்துகையிலேயே வட. மாகாண முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்க தேரர்களை சந்தித்து கலந்துரையாடுவதற்கான வாய்ப்பு கிடைத்தது. நீண்ட நாட்களாக சந்திக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பிற்கு அமைவாக சிறந்த சந்திப்பை என்னால் முன்னெடுக்க முடிந்தது.

அஸ்கிரிய மகாநாயக்கருடனான சந்திப்பானது தனிப்பட்டதாக அமையவில்லை. மாறாக உத்தியோகபூர்வமானதாக அஸ்கிரிய பீடத்தின் முக்கிய மகாநாயக்க தேரர்கள் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

எவ்வாறாயினும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகள் மற்றும் நிலைப்பாடுகளை மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடங்களுக்கு அறிய கொடுத்தோம். சமஷ்டி என்ற சொல் தொடர்பில் முன்கூட்டியே தீர்மானம் ஒன்றில் உள்ளனர். இலங்கைக்கு எதிரானது, பிரிவினைவாதம் மற்றும் நாட்டை துண்டாடி விடும் என்கின்றது போன்று அவர்கள் சமஷ்டி தொடர்பில் நிலையான தீர்மானத்தை வைத்துள்ளனர்.

இதனூடாக சிங்கள பௌத்த ஆதிக்கத்தின் நிலைப்பாடு வெளிப்பட்டுள்ளது. இந்த நிலைப்பாட்டை மாற்றுவது கடினமானது என்றாலும் இயலுமான தொன்றாகவே உள்ளது.

அரசியல் தீர்வு என்ற விடயத்திற்கு செல்லும் போது ஒற்றையாட்சி என்று கூறுகின்றனர். அதில் தமிழ் மக்களின் தீர்வு விடயம் எவ்வாறு உள்ளது என்பது குறித்து பேசுவதாக இல்லை.

கொடுப்பதை வாங்கிக் கொண்டு தமிழர்கள் இருக்க வேண்டும் என்கின்ற நிலைப்பாடே காணப்படுகின்றது.

எனவே இன்னும் கடினமாக உழைக்க வேண்டியுள்ளது. ஏனைய தரப்புகளையும் சந்தித்து பேசலாம் என்று நினைத்துள்ளேன் என முதலமைச்சர் விக்னேஸ்வரன் மேலும் தெரிவித்தார். (இ-7)

## மணிவிழா

தென்மராட்சி இலக்கிய அணியின் ஏற்பாட்டில் ஆசிரியர் ச.மார்க்கண்டின் மணிவிழா நிகழ்வு நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு சாவகச்சேரி சங்கத்தானை தமிழ்க் கோட்ட கம்பன் கல்லூரி வளாகத்தில் இடம்பெறும். இந்நிகழ்வில் ஆசியுரையை யாழ். டிறிபேக் கல்லூரியின் ஓய்வு நிலை அதிபர் மு.நாகேந்திர ராஜா வழங்குவார்.

வாழ்த்துரைகளை தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன், யாழ். டிறிபேக் கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர் க.அருந்தவபாலன், யாழ்.பல்கலைக்கழக வருகை விரிவுரையாளர் கலாநிதி செ.சேதுராஜா, யாழ். டிறிபேக் கல்லூரி அதிபர் ந.ஜெயகுமாரன் ஆகியோர் வழங்குவர். இந்நிகழ்வில் சிறப்பு அரங்க நிகழ்வாக கம்பவாரிதி இ.ஜெயராஜ் நடுவராகப் பங்கேற்கும் இன்றைய ஆசிரியத்தின் அவசியத் தேவை எனும் தலைப்பில் பட்டிமன்றம் இடம்பெறும். இதில் பேராசிரியர் தி.வேல் நம்பி, கவிஞர் த.நாகேஸ்வரன், கலாநிதி ஶ்ரீ.பிரசாந்தன் அ.வாசுதேவா ஆகியோர் வாதிடுவர். (இ-7)

## சத்தியசாயி நிறுவனத்தில் இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய சர்வதேச சத்திய சாயி சேவா நிறுவன ஏற்பாட்டில் இரத்ததான நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 12.30 வரை சேர்.பொன் இராமநாதன் வீதியிலுள்ள சத்தியசாயி சேவா நிலையத்தில் (யாழ். பல்கலைக்கழகம் முன் பாக) இடம்பெறும். (இ-7)

## பிரதியமைச்சர் ரஞ்சன் பிக்குகளை கண்மூடித்தனமாக விமர்சிக்கிறார்




நாட்டிலுள்ள பௌத்த பிக்குகளையும், நீதித்துறையையும் பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க கண்மூடித்தனமாக விமர்சனம் செய்துவிட்டு, தன்னை முடியுமானால் சிறையில் போடுமாறும் சவால் விட்டுள்ளதானது, அரசாங்கத்தின் போக்கை தெளிவாக எடுத்துக் காட்டுவதாக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

தற்பொழுதுள்ள அமைச்சர்கள் சட்டத்தைக் கையில் எடுத்துக் கொண்டு செயற்படுகின்றார்கள் என்பதற்கு இதுவே வெளிப்படையான ஆதாரமாகும்.

பின்னாசன எம்.பி.க்களை வைத்து நீதித்துறையை நிந்தனை செய்யும் போது நீதித்துறைக்குள்ள கௌரவமும், மகிமையும் இல்லாமல் போகின்றது. அதனையே அரசாங்கம் செய்து கொண்டிருக்கின்றது எனவும் நாமல் விமர்சித்துள்ளார். கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு நாமல் ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்துள்ளார். (இ-7)

## இராசி பலன்

15.09.2017

(ஆவணி 30, வெள்ளிக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு

தசமி முன்னிரவு 7.05 மணிவரை

புனர்பூசம் பின்னிரவு 3.32 மணிவரை

சுபநேரம் 6.03-7.33 மணிவரை

இராகுகாலம் 10.33-12.03 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | சந் |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>மூலம்<br>இரவு 9.45 மணிக்கு<br>கடக-சந் | | ராகு |
| கேது | | | சூரி,சுக்<br>செவ்,<br>புத |
| | சனி | குரு | |

**மீனம்:** மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், வாகன சுகமுண்டு, பூர்வ புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மேடம்:** ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், பயணங்களால் பலனுண்டு.

**இடபம்:** வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, புதிய முயற்சியொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

**மிதுனம்:** ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்லவிதமாக நடைபெறலாம், போசன சுகமுண்டு.

**கும்பம்:** பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் மேலோங்கும், அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள்.

**கடகம்:** அன்றாட பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனைப் பிரார்த்திப்பீர்கள், அலைச்சல்களால் மனச்சோர்வு ஏற்படலாம், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**மகரம்:** கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு.

**சிம்மம்:** தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும் வகையில் அமையும், வருமானம் அதிகரிக்கும் நாள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும் நாள்.

**தனுசு:** பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** குடும்பப் பெரியவர்களின் ஆலோசனைகளை கேட்டு நடப்பது நல்லது, உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**துலாம்:** தடைகளை தகர்த்து தன்னிறைவு காணும் நாள், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்,

**கன்னி:** திறமைகள் வெளிப்படும் நாள், நிலையான வருமானத்துக்கு வழிசமைப்பீர்கள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.

## இன்று யாழில் ஆரம்பமாகும்
# சைவ மாநாட்டின் முதல் நாள் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சைவபரிபாலன சபை நடத்தும் அகில இலங்கைச் சைவ மாநாட்டின் முதல் நாள் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு இல. 66, கல்லூரி வீதி, யாழ்ப் பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள சைவ பரிபாலன சபையின் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திரு முருகன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்துமத அலுவல்கள் அமைச்சர் டிஎம்.சுவாமிநாதன் கலந்து கொள்வார்.

காலை 8 மணிக்கு வண்ணார்பண்ணை சிவன் கோவிலில் வழிபாடுகள் இடம்பெற்று ஊர்வலம் காங்கேசன்துறை வீதி வழியாக விழா மண்டபத்தை வந்தடையும்.

இந்நிகழ்வில் ஆசியுரையினை நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் வழங்குவார். ''வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம்'' எனும் தலைப்பில் திருவாவடுதுறை ஆதீனப் புலவர் ஏ.அனுசாந்தன் சிறப்புரையாற்றுவார். (இ-3)




# ஸ்கந்தவரோதயன்களின் சங்கமமும் கௌரவிப்பும்

யாழ். ஸ்கந்தவரோதயா கல்லூரியின் ஸ்கந்தவரோதயன்களின் சங்கமமும் சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வும் நாளை மாலை 5 மணிக்கு இடம்பெறும். (இ

# கந்தபுராண தொடர் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். கதிர் கலையகத்தின் ஏற்பாட்டில் நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்பாக அமைந்துள்ள செல்லப்பா சுவாமிகள் நினைவாலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணியளவில் சிவஸ்ரீ சபா பாஸ்கரக்குருக்கள் தலைமையில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் நல்லூர் பஜனைக் குழுவினர் வழங்கும் பஜனை நிகழ்வும் சொல்வேந்தர் பொன்.சுகந்தன் வழங்கும் கந்தபுராணம் தொடர் சொற்பொழிவு நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (இ

# கச்சேரிக்கு முன் கவனயீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

மக்கள் குடியிருப்புகளுக்கு மத்தியிலுள்ள மயானங்களை அகற்றி மக்களின் வாழ்விடச் சூழலைப் பாதுகாத்து, கிராமியக் கட்டமைப்பை வலுப்படுத்தக் கோரி கடந்த 12.07. 2017 ஆம் திகதி தொடக்கம் தொடர்ந்து 65 நாட்களாகத் தொடர் சத்தியாக்கிரகப் போராட்டத்தினை புத்தூர் மேற்கு, கலைமதி கிராம மக்கள் மண்டபத்திற்கு முன்னால் மேற்கொண்டு வருகின்ற மக்களுக்குத் தீர்வை வழங் கக்கோரிய கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று இன்று முற்பகல் 10 மணியளவில் யாழ்ப்பாண கச்சேரிக்கு முன்பாக சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் மக்கள் குடியிருப்புக்களுக்கு மத்தியில் அமைந்துள்ள மயானங்களால் பல்வேறு சுற்றுச்சூழல், சுகாதார மற்றும் உளவியற் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் மக்களும் சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பும் ஏனைய அமைப்புக்களுடனும் இணைந்து முன்னெடுக்கவுள்ள இக் கவனயீர்ப்புக்கு ஆதரவு வழங்குமாறு சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு, அனைத்து அரசியல் கட்சிகள், சமூக அமைப்புகள், தொழிற்சங்கங்கள். வர்த்தகர் சங்கங்கள், இளைஞர் அமைப்புக்கள் விளையாட்டுக் கழகங்கள், மாணவர் அமைப்புக்கள், சமூக ஆர்வலர்கள் ஆகியோரைக் கேட்டுக் கொண்டுள்ளது. (இ

# சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் இலவச காட்சிக்கூடங்கள் வழங்கல்

## யாழ். வணிகர் கழகம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் வட பிராந்திய அலுவலகத்தினால் உள்ளூர் பொருட்களை ஏற்றுமதி செய்ய விரும்புவோருக்கும் ஏற்கனவே இவ்வாறு ஏற்றுமதி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோருக்கும் ஊக்குவிப்பு வழங்கும் நோக்கில் 2018 இல் நடைபெறவுள்ள யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தக கண்காட்சியில் இலவச காட்சிக் கூடங்கள் வழங்கப்படவுள்ளன. எனவே இவ்வாய்ப்பினை பெற விரும்பும் உள்ளூர் உற்பத்தியாளர்கள், யாழ். வணிகர் கழகத்தில் விண்ணப் பப்படிவங்களை பெற்று விண்ணப்பிக்கலாம் என்பதை அறியத் தருகின்றோம்.

அனைத்து விண்ணப்பங்களும் 30.09.2017 இற்கு முன்பதாக அனுப்பப்படவேண்டுமாகையால் உற்பத்தியாளர்கள் காலதாமதம் செய்யாமல் உரிய படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

மேலதிக விபரங்களுக்கு 021 222 8593 இலக்க தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளுமாறு யாழ். வணிகர் கழகத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (இ

# நூல் அறிமுக நிகழ்வு

புதிய நீதி வெளியீட்டகத்தின் ஏற்பாட்டில் சி.கா. செந்திவேல் எழுதிய வட்டுக்கோட்டையிலிருந்து முல்லைத் தீவு வரை என்ற அர்சியல் பகுப்பாய்வு விமர்சன நூலின் அறிமுக நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் புத்தூர் மேற்கில் அமைந்துள்ள கலைமதி மக்கள் மண்டபத்தில் இடம்பெறும்.

கா.செல்வம் கதிர்காமநாதன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் வரவேற்புரையை திருமதி லதா உதயனும் நூல் அறிமுக உரையை சட்டத்தரணி சோ. தேவராஜாவும் நூல் மதிப்பீட்டு உரைகளை எழுத்தாளர் க.தணிகாசலமும் த.நவதாஸனும் நூலாசிரியர் பதிலுரையைச் சி.கா. செந்திவேலும் ஆற்றவுள்ளனர். (இ-7)

# மருத்துவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் அரசு உடனடித் தீர்வைக் காணவேண்டும்

## டக்ளஸ் எம்.பி.வலியுறுத்து

மருத்துவர்களது பணிப் பகிஷ்கரிப்புகள் காரணமாக நோயாளர்கள் பாரிய பாதிப்புகளுக்கு உட்பட்டு வருகின்றமையானது அடிக்கடி தொடர்ந்து இடம்பெறுகின்ற ஆபத்தாக உருவெடுத்துள்ளது. இந்த நிலையில், மருத்துவ சங்கத்தினர் முன்வைத்துள்ள கோரிக்கைகள் தொடர்பில் அரசு இழுத்தடிக்கும் போக்குடன் செயற்படாது, அப் பிரச்சினைகளை சுமுகமான முறையில் தீர்ப்பதற்கு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்துள்ள அவர், கடந்த 12ஆம் திகதி வடக்கு, கிழக்கு உட்பட நாட்டில் 9 மாவட்டங்களில் மருத்துவர்களது பணிப் பகிஷ்கரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், இந்த நடவடிக்கைகள் ஏனைய மாவட்டங்களில் நேற்று முன்தினமும் நேற்றும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மருத்துவர்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வின்றேல் மேற்படி பணிப் பகிஷ்கரிப்பானது ஒன்றிணைந்த பணிப் பகிஷ்கரிப்பாக தொடரும் அபாயம் இருப்பதாகவும் தெரிய வருகின்றது.

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில், வைத்தியசாலைகளில் போதிய வைத்தியர்கள் மற்றும் ஏனைய ஆளணியினருக்கான பற்றாக்குறைகள் பல வருட காலமாகத் தொடர்கின்ற நிலையில், நோயாளர்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வரும்போது, இத்தகைய பணிப்பகிஷ்கரிப்புகள் மேலும் அவர்களை கடுமையான பாதிப்புகளுக்கு உட்படுத்தி வருவதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. இதே நிலையை நாட்டில் பெரும்பாலான பகுதிகளிலும் காணக்கூடியதாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அண்மைக் காலத்தில் நாட்டில் எரிபொருள்துறை சார்ந்த பணியாளர்களது பணிப்பகிஷ்கரிப்புகள் இடம்பெற்றிருந்த நிலையில், அதனை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வர அரசால் முடிந்திருந்தது. ஆனால், தொடரும் வைத்தியர்களின் பணிப் பகிஷ்கரிப்புகளை முடிவுக்குக் கொண்டு வருவது அரசால் இதுவரையில் இயலாதிருப்பது கேள்விக்குரிய விடயமாகியுள்ளது. இது, மக்களிடையே பெரும் அதிருப்தி நிலையைத் தோற்றுவித்துள்ளது.

வைத்தியர்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்கென பிரதியமைச்சர் ஹர்ஷ டி சில்வாவின் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ள நிலையிலும், அக் குழு தொடர்பில் மருத்துவத் தரப்பினர் அதிருப்திகளை வெளியிட்டு வருகின்ற ஒரு நிலையே காணப்படுகின்றது.

வைத்தியர்களது பிரச்சினைகளுள் பிரதான பிரச்சினையாக காணப்படுகின்ற மாலபே தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிரான போராட்டங்களில மருத்துவத்துறை மாணவர்களும் ஈடுபட்டு வருகின்றனர். இதனால், அவர்களது கற்கை செயற்பாடுகள் தொடர்ந்தும் பாதிக்கப்படுகின்றன. இன்றைய நிலையில் எமது நாட்டில் வைத்தியர்களுக்கு பாரிய பற்றாக்குறைகள் நிலவும் நிலையில் நாளையவைத்தியர்களாக மாற வேண்டிய இந்த மாணவர்களது கற்கை செயற்பாடுகளும் பாதிக்கப்படுமானால், எமது நாட்டின் எதிர்கால மருத்துவத்துறையானது பாரிய சவாலுக்கு உட்படுத்தப்படுவது நிச்சயமாகும். அதே நேரம் எமது நாட்டில் மருத்துவத்துறையில் கற்கைகளை மேற்கொண்டு வருகின்ற வெளிநாட்டு மாணவர்களை அந்த நாடுகள் திருப்பி அழைக்கின்ற நிலையும் தற்போது ஏற்பட்டுள்ளது.


எனவே, தற்போதைய இந்த நெருக்கடியான நிலையை அவதானத்தில் கொண்டு, அரசு உடனடி நடைமுறைச் சாத்தியமான தீர்வுகளை எட்ட வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)



மருதங்கேணி பிரதேச செயலகத்தின் எழுத்தறிவு தினம் கடந்த 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை குடத்தனை கிறிஸ் நற்தூது நற்பணியகத்தில் மருதங்கேணி பிரதேச செயலகத்தின் சமூர்த்தி தலைமை முகாமையாளர் சி.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. (படங்கள்:-தும்பளைச் செய்தியாளர்)

114

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?




01.06.2015 ஜூன் மாதத்தின் முதல் நாள். காலைப் பொழுது யாழ்ப்பாணம் பண்ணை வீதி தொடக்கம் ஊர்காவற்றுறை நீதிமன்றம் வரை பொலிஸார்



சந்திகள் தோறும் காவலில் ஈடுபட்டிருந்தனர். விசேட அதிரடிப் பொலிஸாரும் தாராளமாகக் குவிக்கப்பட்டனர்.

இதுபோன்ற நிலைமைகள் முன்பும் இருந்ததாயினும் அந் தச் சூழ்நிலையும் இந்தச் சூழ்நிலையும் வேறுபாடானது என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

மாணவி வித்தியாவின் கொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் என்ற சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒன்பது பேரும் சிறைச்சாலை வாகனத்தில் ஊர்காவற்றுறை நீதிமன்றுக்குக் கொண்டு செல்லப்படுகின்றனர்.

காலை 9 மணி. நீதிமன்ற அமர்வு ஆரம்பமாகின்ற வேளை ஊர்காவற்றுறை நீதிமன்றத்தைச் சுற்றி பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் தீவிரமாக இருந்தனர்.

கைதிகள் ஒன்பது பேரையும் பொலிஸார் அழைத்து வருகின்றனர். பலத்த பாதுகாப்புக்களின் மத்தியில் இவை நடக்க, நீதிமன்றத்திற்கு வித்தியாவின் தாயும் சகோதரனும் வந்திருந்தனர்.

## மாணவி வித்தியா கொலை நடந்தது என்ன?



வித்தியாவின் குடும்பம் சார்பில் பிரபல சட்டத்தரணி கே.வி.தவராசா ஆஜராகியிருந்தார். இவரின் முகதாவில் சட்டத்தரணிகளான எஸ். விஜயராணி, கே.சுகாஸ், ரி.அம்பிகா ஆகியோரும் மன்றில் பிரசன்னமாகியிருந்தனர்.

ஊர்காவற்றுறை நீதிபதி செல்வநாயகம் லெனின்குமார் அவர்கள் முன்னிலையில் குறித்த வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, இரண்டு பொலிஸாரின் வாக்கு மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டது.

இதன்போது வித்தியா வின் சடலம் கிடந்த இடம், இடத்தின் அமைப்பு சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸாரின் விபரம் ஆகியன வாக்கு மூலத்தில் பதிவு செய்யப் பட்டன.

வித்தியாவின் குடும்பம் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் தமது தரப்பு வாதங் களை மன்றில் முன்வைத்தனர். இதன்போது சந்தேகநபர்களின் இரத்த மாதிரிகளைப் பரிசோதிப்பதற்கு சிறிதுகால அவகாசம் எடுக்கும் என மன்றில் பிரசன்னமாகியிருந்த குற்றப்புலனாய்வுத் துறை அதிகாரி கூற, அதற்குச் சட்டத்தரணி தவராசா ஆட்சேபம் தெரிவித்தார். மாணவி வித்தியாவின் படுகொலையால் நாடுமுழுவதும் ஆர்ப்பாட்டங்கள் நடந்த வண்ணமுள்ளன. எனவே வழக்கு விசாரணைகளை விரைவுபடுத்த வேண்டும் எனக் கூறினர்.

இந்நிலையில் மன்றில் ஆஜராகியிருந்த சந்தேகநபர்களான,

பூபாலசிங்கம் இந்திரகுமார், பூபாலசிங்கம் உதயகுமார், பூபாலசிங்கம் சசிகுமார், தில்லைநாதன் சந்திரகாந்தன், சிவதேவன் பிரசாந்தன், பரநிருபசிங்கம் குகநாதன், ஜெயரட்ணம் கோகுலன், மகாலிங்கம் சசிகுமார், மகாலிங்கம் சசிந்தன் ஆகியோரிடம் நீங்கள் ஏதேனும் மன்றில் கூற விரும்புகிறீர்களா என நீதிபதி கேட்டார்.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணிகள் எவரும் பிரசன்னமாகாத நிலையில் நான்கு சந்தேக நபர்கள் வித்தியாவின் கொலையில் தமக்கு எந்தத் தொடர்பும் இல்லை எனத் தெரிவித்தனர்.

இதில் சந்தேகநபர் ஒருவர் வித்தியாவின் கொலைச்சம்பவத்துடன் தனக்கு எந்தத் தொடர்பும் இல்லையென்றும் சம்பவம் நடந்த மே 13ஆம் திகதி தான் கொழும்பில் தங்கியிருந்ததாகவும் அன்றையதினம் வெள்ளவத்தையிலுள்ள ஹற்றன் நஷனல் வங்கி யில் (HNB) ஏ.ரி.எம். அட்டை மூலம் பணம் எடுத்ததாகவும் மன்றில் தெரிவித்தார்.

இதனையடுத்து ஊர்காவற்றுறை நீதிபதி செல்வநாயகம் லெனின்குமார் அவர்கள் விடுத்த கட்டளையில், சந்தேக நபர்களை 15.06.2015 வரை விளக்க மறியலில் வைக்கு மாறு உத்தரவிட்டதுடன், சந்தேக நபர்களின் இரத்த மாதிரிகளை யாழ். சிறைச்சாலை அத்தியட்சகர் ஊடாக யாழ். போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் பெற்று அதனை மரபணு பரிசோதனைக்கு அனுப்பி அதன் முடிவுகளை பெற்றுக் கொள்ளுமாறு பொலிஸாருக்கு உத்தர விடுவதாக அறிவித்தார்.

அதேநேரம் சம்பவம் நடந்த அன்று தான் கொழும்பில் நின்றதாக சந்தேக நபர் ஒருவர் மன்றுக்குத் தெரிவித்திருப்பதனால் ஹற்றன் நஷனல் வங்கியின் வெள்ளவத்தைப் பிரிவில் ஏ.ரி.எம். இயந்திரம் இயங்கும் இடத்தில் உள்ள கண்காணிப்பு கமராவின் (CCIV) 13.05.2015-14.05. 2015 வரையான வீடியோப் பதிவை முழுமையாக பெற்றுக் கொள்ளுமாறும் நீதிபதி உத்தரவிட்டார். (திங்கள் தொடரும்)

-புருசோத்தமன்-

# திருநகரில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்த பெண் கைதானார்

## இன்று நீதிமன்றில் ஆஜர்



கிளிநொச்சி, திருநகர் வடக்கு பகுதியில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட பெண் ஒருவர் கைது செய்யப்பட்டதாக, கிளிநொச்சி மாவட்ட உதவி மதுவரி பொறுப்பதிகாரி நியூட்டன் அவுட்ஸ்பேன் தெரிவித்துள்ளார்.

தமக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து நேற்று முன்தினம் பிற்பகல் குறித்த பகுதியில் சுற்றிவளைப்பு தேடுதலை மேற்கொண்ட போது சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவரை தாம் கைதுசெய்ததாக அவர் கூறினார்.

குறித்த நபர் இன்று வெள்ளிக்கிழமை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளதாகவும், கிளிநொச்சி மாவட்ட உதவி மதுவரி பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை, இந்த வருடம் இதுவரையான காலப்பகுதியில் மட்டும் சட்டவிரோத கசிப்பு, கஞ்சா உட்பட்ட குற்றங்களில் ஈடுபட்ட 426 பேர் கைது செய்யப்பட்டு அவற்றில் பலர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டும், இன்னும் பலர் முற்படுத்தப்படவுள்ளதாகவும் கிளிநொச்சி மாவட்ட உதவி மதுவரித்திணைக்கள பொறுப்பதிகாரி நியூட்டன் அவுட்ஸ்பேன் மேலும் தெரிவித்தார். (2-312)

# 186 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள்

(கண்டாவளை)

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளிப்பிரதேசத்தில் மீள்குடியேறிய குடும்பங்களில் 186 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளிப்பிரதேச செயலர் பிரிவில் மீள்குடியேறிய குடும்பங்களுக்கு பல்வேறு திட்டங்கள் ஊடாக வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வாண்டு மீள்குடியேற்ற அமைச்சினுடைய நிதியொதுக்கீட்டின் கீழ் தலா ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவித் திட்டங்களுக்கு 88 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தினால் விவசாயச்செய்கையில் ஈடுபட்டுள்ள 50 பயனாளிகளுக்கும் புனர்வாழ்வளிக்கப்பட்ட 48 பேருக்குமான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு 186 பயனாளிகள் தெரிவு இடம்பெற்று அவர்களுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-315)

# வடக்கு மாகாணசபை உறுப்பினரின் நிதியொதுக்கீட்டில் வேளாண் கருவிகள்

## 26 பயனாளிகளுக்கு வழங்கல்



வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தனக்கு ஒதுக்கப்பட்ட வடக்கு மாகாண சபையின் 2017 ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டில் இருந்து 5 இலட்சம் ரூபாவுக்கு விவசாய வேளாண் கருவிகளை கொள்வனவு செய்து முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 26 விவசாயிகளுக்கு அந்தப் பொருட்களை வழங்கி வைத்துள்ளார்.

இந் நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் முல்லைத்தீவு நகரப் பகுதியில் உள்ள முல்லைத்தீவு மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் ஒன்றுகூடல் மண்டபத்தில் முல்லைத்தீவு மாவட்ட விவசாயத் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் பொ. அற்புதச்சந்திரன் தலைமையில் நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வடக்கு மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் வடக்கு மாகாண சபையின் 2017 ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டில் இருந்து 5 இலட்சம் ரூபாவை விவசாய உபகரணங்களைக் கொள்வனவு செய்து முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 26 பயனாளிகளுக்கு பொருட்களை வழங்கி வைத்துள்ளார்.

இந் நிகழ்வில் துரைராசா ரவிகரன் உரையாற்றும் போது, எமது முல்லைத்தீவு மாவட்டத்தில் வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்ட போரினால் பாதிக்கப்பட்ட விவசாயக் குடும்பங்கள் மிகவும் அதிகமாகவுள்ளன.


இவர்களுக்கான தேவைகள் அதிகமாகக் காணப்படுகின்றன. இந்நிலையில் என்னால் முடிந்தளவு உதவிகளை பாதிக்கப்பட்ட மக்களுக்கு செய்து வருகின்றேன்.

அந்த வகையில் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளாகவுள்ள உங்களுக்கு இன்று வழங்கப்படும் இந்த உதவிப் பொருட்களை கொண்டு எதிர்காலத்தில் நன்கு பயனடைய வேண்டும்.

உங்களுடைய வளர்ச்சியினை வைத்துக் கொண்டு தான் நாம் இத் திட்டங்களை தொடர்ந்தும் வரும் காலங்களில் ஏனைய மக்களுக்கும் முன்னெடுக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315-15-312)




# பாதுகாப்பான புகையிரதக் கடவையை அமைத்துத்தருமாறு பொதுமக்கள் கோரிக்கை



முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மாங்குளம் புகையிரத நிலையத்துக்கும் முறிகண்டி புகையிரத நிலையத்துக்கும் இடைப்பட்ட மக்கள் குடியிருப்புக்களில் புகையிரதக் கடவை அமைக்கப்படாத இடங்களுக்கு விரைவாக புகையிரதக் கடவைகளை அமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இது தொடர்பில் பல்வேறு தரப்பினரிடம் முறையிட்டும் தமக்கான தீர்வு இதுவரை கிடைக்கவில்லையென மக்கள் தெரிவிக்கின்றனர். இறுதியாக மாவட்ட அரசாங்க அதிபர் ஊடாகவும் இரண்டு தடவைகள் புகையிரத திணைக்களத்துக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டும் இதுவரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. எனவே உரிய அதிகாரிகள் விரைந்து செயற்பட்டு பாதுகாப்பான கடவையை அமைத்து தருமாறு பொதுமக்கள் கோருகின்றனர்.

பாதுகாப்பான கடவை அமைக்கப்படாமை காரணமாக பாடசாலை மாணவர்கள் முதல் அனைவரும் பாதிக்கப்படுவதாகவும் உயிர் பயத்துடனேயே அவ்வழியாக நடமாடுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (2-281)

### அவல நிலையை தீர்க்க அரசு முன்வருமா?

# கேப்பாபிலவு மக்களின் போராட்டம் இன்று 200 ஆவது நாளை எட்டியுள்ளது

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாபிலவு பூர்வீகக் கிராமத்திலுள்ள பொதுமக்களுக்கு சொந்தமான காணிகளை விடுவிப்பதற்கு வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தும் பொய்யாகிப்போன நிலையில் நேற்று 199ஆவது நாளாகவும் மக்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இராணுவத்தின் வசமுள்ள தமது பூர்வீக காணிகளை விடுவிக்குமாறு கோரி கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் முன்னெடுக்கும் மக்கள் போராட்டம் நேற்றுடன் 199 ஆவது நாளாகவும் தொடர்கின்றது.

பல்வேறு சந்திப்புக்கள் நடந்தும் விரைவில் விடுவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டாலும் எப்போது விடுவிக்கப்படும் என்பதறியாது மக்கள் முன்னெடுக்கும் போராட்டம் இன்றுடன் 200ஆவது நாளை எட்டியுள்ள நிலையில் கொட்டும் மழைக்கு மத்தியிலும் வாழ்வாதாரங்கள் பாதிக்கப்பட்ட மக்களின் அவல நிலை தீர்க்க இந்த அரசு முன்வர வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (2-15-281)

# லயன்ஸ் கழகத்தினால் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன

(முல்லைத்தீவு)

திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழகத்தினர் கடந்த 11 ஆம் திகதி திங்கட்கிழமையன்று மு/முள்ளியவளைக்கால் மேற்கு கனிஷ்ட உயர்தரப்பாடசாலை, மு/முள்ளிவாய்க்கால் கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மற்றும் மு/வட்டுவாய்க்கால் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியவற்றில் கல்வி பயின்றுவரும் மொத்தம் 370 பிள்ளைகளுக்கும் தலா மூன்று அப்பியாசப்புத்தகங்கள் வீதம் ஆயிரத்து 110 அப்பியாசப்புத்தகங்களை நேரில் சென்று வழங்கினர்.

யுத்தத்தால் மோசமாக பாதிக்கப்பட்டு பல்வேறு இன்னல்களுடன் கல்வி பயின்று வரும் இம் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட உதவி அவசியமானதொன்றாகும் என மேற்படி கல்லூரி அதிபர்கள் தெரிவித்தனர்.

திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழகத்தின் தலைவர் லயன் றீகன் தலைமையில் ஆறு லயன்ஸ் கழக உறுப்பினர்களும் இந்நிகழ்வில் பங்குபற்றியிருந்தனர். (2)

# நெடுங்கேணி-புளியங்குளம் வீதியில் யானைகள் நடமாட்டம்



வீதிக்கு வந்த யானைகளால் நெடுங்கேணி - புளியங்குளம் வீதியில் போக்குவரத்தில் ஈடுபட்டிருந்த பயணிகள் அசௌகரியங்களை எதிர்நோக்கினர்.

நெடுங்கேணி - புளியங்குளம் வீதியில் நான்கு யானைகள் வீதிக்கு வந்தமையால் அவ்வீதி வழியாக பயணித்தோர் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கியதாக கூறுகின்றனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் 4.30 மணிமுதல் 5.20 மணி வரை அப்பகுதியில் யானைகளின் நடமாட்டம் காணப்பட்டதாக அவ்வீதி வழியாக பயணித்தோர் தெரிவித்துள்ளனர். இதனால் அச்சத்துடனேயே பலரும் பயணங்களை மேற்கொண்டதாக தெரிவித்துள்ளதுடன் தற்போது மாலை வேளைகளில் அப்பகுதியில் அடிக்கடி யானைகள் வந்து செல்வதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (2-250)



தென்னை பயிர்ச்செய்கை சபையின் தென்னை தின விழாவை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் கருநாட்டுக்கேணி பொதுநோக்கு மண்டபத்தில் பயனாளிகளுக்கு தென்னங்கன்றுகள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் அப்பிரதேசத்தின் கப்ருக சங்க உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டனர். தென்னை தொடர்பான அறிவுறுத்தல்களும் வளர்ப்பு முறைகளும் கூறப்பட்டு பயனாளிகளுக்கு தென்னங்கன்றுகளும் வழங்கப்பட்டன. இந்நிகழ்விற்கு தென்னை பயிர்ச்செய்கை சபையின் யாழ். பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் கலந்து சிறப்பித்தார்.

# 6 ஆயிரம் 481 குடும்பங்களுக்கு வரட்சி நிவாரணக் கொடுப்பனவுகள்

## புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் அறிவிப்பு

(மல்லாவி)

நாட்டில் கடந்த மாதங்களில் நிலவிய கடும் வரட்சி நிலை காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் அனர்த்த பாதுகாப்பு அமைச்சின் ஊடாக நிதி ஒதுக்கீடு செய்து வரட்சி நிவாரணக் கொடுப்பனவுகளை வழங்கி வரும் நிலையில். புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவில் உள்ள அரச உத்தியோகத்தர் குடும்பங்களுக்கு தவிர்ந்த ஏனைய 6 ஆயிரத்து 481 குடும்பங்களுக்கு 148 இலட்சத்து 15 ஆயிரத்து 500 ரூபாவுக்கான உலர் உணவு பொருட்கள் வரட்சிநிவாரணக்கொடுப்பனவாக வழங்கப்பட்டு வருவதாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் கடந்த மாதங்களில் நிலவிய கடும் வரட்சி நிலை காரணமாக நாடுதழுவிய ரீதியில் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளமையைக் கருத்தில் கொண்டு அரசாங்கம் வரட்சி நிவாரணக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு அனர்த்த பாதுகாப்பு அமைச்சின் ஊடாக அனைத்து மாவட்டங்களினும் உள்ள அரசாங்க அதிபர்களிற்கு நிதியை ஒதுக்கியுள்ளது:

இந்த உலர் உணவு நிவாரண உதவிகளைப் பெற்று வரும் குடும்பங்கள் ஒரு தடவை உதவிப் பொருட்களை பெறும் போது, 5 நாட்கள் தமது கிராமத்தில் உள்ள பொது இடங்களில் சிரமதானப் பணி மேற்கொள்ள வேண்டும்.

இதற்கமைய, முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள புதுக்குடியிருப்புபிரதேசசெயலக பிரிவில் 2 ஆயிரம் ரூபா வரட்சி நிவாரணக் கொடுப்பனவை 2 ஆயிரத்து 892 குடும்பங்களும், 2 ஆயிரத்து 500 ரூபா வரட்சி நிவாரணக் கொடுப்பனவை 3 ஆயிரத்து 589 குடும்பங்களுமாக மொத்தம் 6 ஆயிரத்து 481 குடும்பங்கள் பெறுகின்றன.

இதன் போது, 2 அங்கத்தவர்களுக்கு உட்பட்ட குடும்பம் ஒன்றிற்கு 2 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்களும், 2 அங்கத்தவர்களுக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு தலா 2ஆயிரத்து 500 ரூபாவுக்கான உலர் உணவுப் பொருட்களும்வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த உலர் உணவு பொருட்கள் விநியோகமானது புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட விசுவமடு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் ஊடாக2 ஆயிரம் ரூபா உலர் உணவுப் பொருட்களை 747 குடும்பங்களும்2 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்களை 346 குடும்பங்களுமாக மொத்தம் ஆயிரத்து 93 குடும்பங்களுக்கு வழங்கப்படுகின்றது.

இதேபோன்று புதுக்குடியிருப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் ஊடாக 2 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்களை 2 ஆயிரத்து 138 குடும்பங்களும் 2 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்களை 3 ஆயிரத்து 243 குடும்பங்களுமாக மொத்தம் 5 ஆயிரத்து 378 குடும்பங்களுக்கு வழங்கப்படுகின்றது.

இவர்களுக்கு முதலாம் கட்டத்திற்குரிய உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் வாரத்தில் 2 ஆம் கட்டத்திற்குரிய உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்படவுள்ளது.

இந்த உலர் உணவு பொருட்கள் விநியோகத்தின் போது சில பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் தரக் குறைவான பொருட்களை விநியோகிப்பதுடன், நிறை குறைவாகவும் விநியோகம் செய்யப்படுவதாக பொது மக்கள் தரப்பில் இருந்து கிடைக்கப் பெற்ற குற்றச்சாட்டை அடுத்து கிராம அலுவலர்கள் மற்றும் பிரதேச செயலக அதிகாரிகள் அடங்கிய குழுவினர் திடீர் பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும்அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளார். (2-15-315)

# கமநலசேவை உத்தியோகத்தர்களுக்கு உரமானிய கணனி பயிற்சிநெறி






வடக்கு மாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களிலும் கடமையாற்றுகின்ற மாவட்டம் மற்றும் பிரதேசங்களைச் சேர்ந்த கமநல உத்தியோகத்தர்களுக்கான உரமானியப் பயிற்சி நெறி நேற்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெற்றது. கமத்தொழில் அமைச்சின் ஏற்பாட்டில் உரமானியத்தினை பணமாக கொடுக்கும் நடைமுறைக்குரிய கணனிப் பயிற்சி நெறியில் வட மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் கடமையாற்றும் கமநல சேவை உத்தியோகத்தர்கள் பங்குபற்றியிருந்தனர்.

இப்பயிற்சிநெறியில்தேசிய உரமானிய செயலகத்தை சேர்ந்த உதவிப்பணிப்பாளர் கபில திசநாயக்க, தேசிய உரமானிய செயலகத்தின் வவுனியா மாவட்ட உதவிப் பணிப்பாளர் விஜயவர்த்தன ஆகியோர் கலந்து கொண்டதுடன் கொழும்பு பல்கலைக்கழக கணனி மென் பொருள் பொறியியலாளர் திலீப் வளவாளராகவும் கலந்துகொண்டிருந்தார். (2-312)

வன்னி வலம்

# காலபோக நெற்செய்கை கூட்டங்களின் அட்டவணை

## பூநகரி கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் அறிவிப்பு

(பூநகரி)

பூநகரி கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட கமக்கார அமைப்புக்களுக்கான 2017- 2018 ஆம் ஆண்டுக்கான காலபோக நெற்செய்கை தொடர்பான அறிவுறுத்தல் கூட்டங்கள் நடைபெறவுள்ள கால, நேர அட்டவணையை பூநகரி கமநல சேவை நிலைய உத்தியோகத்தர் மு. இரகுநாதன் அறிவித்துள்ளார்.

இதன்படி நல்லூர் கமக்கார அமைப்பிற்குட்பட்ட விவசாயிகளுக்கு எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கும் சாமிபுலம் கமக்கார அமைப்பிற்குட்பட்ட விவசாயிகளுக்கு முற்பகல் 10.30 மணிக்கும் நேரடம்பண் கமக்கார அமைப்பிற்குட்பட்ட விவசாயிகளுக்கு பிற்பகல் 2மணிக்கும் முக்கொம்பன் கமக்கார அமைப்பிற்குட்பட்ட விவசாயிகளுக்கு பிற் பகல் 2 மணிக்கும் அந்தந்தப் பகுதிகளில் உள்ள பொது மண்டபங்களில் நடைபெறுமென அவர் அறிவித்துள்ளார்.

ஆதலால் வெளி மாவட்டங்களில் வசிக்கின்ற நெற்செய்கையாளர்களும் தங்கள் காணிகள் அமைந்துள்ள பகுதி கமக்கார அமைப்பின் கூட்டங்களில் கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (2-84)




முல்லைத்தீவு உடையார்கட்டு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் 4 ஆவது சிமாட் வகுப்பறை கட்டடம் கடந்த 12ஆம் திகதி வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரனால் திறந்து வைக்கப்பட்டது. பாடசாலை அதிபர் அமிர்தநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சிறப்பு விருந்தினராக யாழ். கல்வியியற் கல்லூரியின் முதன்மை விரிவுரையாளர் வேலாயுதம் நந்தகுமாரும் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண அமைச்சர் அனந்தி சசிதரன் ஆகியோர் கலந்து கொண்டனர். உடையார் கட்டு கோட்டக்கல்வி அதிகாரி சி.சுப்பிரமணி கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார்.(படங்கள்: பனிக்கன்குளம் செய்தியாளர்)

# த.தே.கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தை கூட்டுமாறு ஆனந்தன் எம்.பி.கடிதம்

(குருமன்காடு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தை கூட்டுமாறு கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு ஈ.பி.ஆர்.எல்.எப்.கட்சியின் செயலாளரும்வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் அவசர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அவர் நேற்று அனுப்பி வைத்துள்ள அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பாராளுமன்ற குழு கூட்டம் தொடர்பான உங்களது அறிவித்தல் கடிதம் கிடைத்தது. அரசியல் யாப்பின் 20 ஆவது திருத்தம் தொடர்பாகவும் வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை தொடர்பாகவும் விவாதிக்க உள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு புதிய அரசியல் யாப்பு வரவிருக்கின்ற சூழலில் தேர்தல் சீர்திருத்தம் தொடர்பில் 20ஆவது திருத்தம் மற்றும் வழிநடத்தும் குழுவின் இடைக்கால அறிக்கை ஆகியவை கொள்கை முடிவுடன் தொடர்புபட்டிருப்பதால் பாராளுமன்ற குழுக்கூட்டம் கூடுவதற்கு முன்பாக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தைக் கூட்டி அங்கத்துவக் கட்சிகளின் கருத்தறிந்து அதற்கேற்ப முடிவெடுப்பதே சிறப்பானதாக இருக்கும்.

ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் எட்டப்படுகின்ற முடிவுகளுக்கேற்ப பாராளுமன்ற குழுவைக்கூட்டி அனைவரும் ஒரு நிலைப்பாட்டிற்கு வருவதே சரியானதாகவும் சிறந்த ஜனநாயக செயல்முறையாகவும் இருக்கும். ஆகவே தாங்கள் விரைவாக ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தை கூட்டுமாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி கோருகிறது.

எமது கோரிக்கையை ஏற்று செயற்படுவீர்கள் என்று எதிர்பார்க்கிறோம் என அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இதன் பிரதிகள் பங்காளிக்கட்சித் தலைவர்களான மாவை சோ. சேனாதிராஜா, செல்வம் அடைக்கலநாதன், த.சித்தார்த்தன் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (2-250)

# அந்தோனியார் திருச்சொரூபம் விசமிகளால் உடைப்பு

மன்னாரில் மீண்டும் ஒரு திருச்சொரூபம் விசமிகளால் உடைத்து சேதப்படுத்தப்பட்டுள்ளதாக மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மன்னார் - யாழ்ப்பாணம் பிரதான வீதிநாயாற்று வெளி பகுதியில் வீதிக்கு அருகில் கண்ணாடிப் பெட்டியினுள் வைக்கப்பட்டிருந்த புனித அந்தோனியார் திருச் சொரூபமே இவ்வாறு நேற்று அதிகாலை உடைக்கப்பட்டுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த முறைப்பாடு ஆக்காட்டி வெளி பங்குத்தந்தை அருட்தந்தை டெஸ்மன் அஞ்சலோவினால் அடம்பன் பொலிஸ் நிலையத்தில் நேற்று காலைபதிவுசெய்யப்பட்டுள்ளது.



அந்த பகுதிக்கு விரைந்த விசமிகள்கண்ணாடிபெட்டியை உடைத்து உள்ளே இருந்த புனித அந்தோனியாரின் திருச் சொரூபத்தை வெளியில் எடுத்து உடைத்து சேதப்படுத்தியுள்ளனர்.

முறைப்பாட்டையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த அடம்பன் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் பொலிஸார் உடைத்து சேதமாக்கப்பட்ட அந்தோனியார் சொரூபத்தை பார்வையிட்டதோடு, மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். இதே வேளை, மன்னார் - சிறுநீலா சேனை கிராமத்திலுள்ள புனித யாகப்பர் திருச்சொரூபம்நேற்று முன் தினம்இரவு அடையாளம் தெரியாதோரால் உடைத்துச் சேதமாக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2)

# பாரியகுழிகள் ஏற்பட்டு நீர்வரத்து நிறுத்தம்

வவுனியா வடக்கு கனகராயன் குளம் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற கிரவல் மண் அகழ்வினால் பல விவசாயக்குளங்கள் பாதிக்கப்பட்டுவதாக இப்பகுதிவிவசாயிகள் குற்றம் சாட்டடியுள்ளனர்.

கனகராயன் குளம் பகுதியில் கிரவல் அகழ்விற்கான அனுமதிகள் வழங்கப்பட்டு கிரவல் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன் முன்று விவசாயக்குளங்களுக்கு நீரைக் கொண்டு வருகின்ற பகுதிகளிலும்இந்தக்கிரவல் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் பாரிய குழிகள் ஏற்பட்டு குளங்களினுடைய நீர் வரத்தும் நிறுத்தப்படுவதாக விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (2-315)



## தியாகத்தின் உறைவிடம் திலீபன்

நல்லூரின் வடக்கு வீதியில்
அவன் எரிந்து கொண்டிருந்தான்.
மெழுகுவர்த்தி தன் முடி மேல்
ஒரு சுடரேந்தி
தன்னையே எரித்து அழிவது போல,
அவனும் தன்னை அழித்து தீயிடை
உருகிக்கொண்டிருந்தான்.
அழிவற்ற "ஜோதியாக" அவன் வல்லமை
தேசம் எங்கும் பரவிக்கொண்டிருந்தது
அவன் ஆன்மா நாட்டையே
ஆகர்ஷித்துக்கொண்டிருந்தது.
அடக்குமுறைக்கெதிரான
முதல் தமிழ் புரட்சிக்காரன்.
வீரன் "முருகன்" சாட்சியாய் வீற்றிருக்க,
பார்த்தீபன் அகிம்சை எனும் நாணேற்றி
விடுதலைக்காய் "விரதம்" பூண்டுவிட்டிருந்தான்.
உலகின் ஐந்தாவது வல்லரசு என்றும்,
அகிம்சையின் "நதிமூலம்" என்றும்,
மார்தட்டிக்கொள்ளும் இமயத்தின்
முகடுகளை தன் சாத்வீக போரால்
ஒவ்வொன்றாக உடைத்துக்கொண்டிருந்தான்.
பாரதத்தின் ஆட்சிநெறி தவறிய
செயலுக்கெதிராக திலீபன்
போராடிக்கொண்டிருந்தான்.
ஆகக் குறைந்தது வாழ்வதற்கு ஐந்து வீடாவது
தாருங்கள்,
பாண்டவர்கள் கேட்டார்கள்
துரியோதனன் வழங்க மறுத்தான்
குருசேத்திர போர் வெடித்தது.
தமிழர்கள் வாழ்வதற்காய்
ஐந்து அம்ச கோரிக்கைகளையாவது
நிறைவேற்றித் தாருங்கள்
பார்த்தீபன் கேட்டான்
மறுத்தது இந்திய அரசு.
அறையப்பட்டான் திலீபன் சிலுவையில்.
மரித்த மறுநாளே தமிழர் மனங்களில்
எல்லாம் நெருப்பென மீண்டும்
உயிர்த்தெழுந்தான்.
யூதர்களின் ஆன்ம விடுதலைக்காக கிறிஸ்து
சிலுவை சுமந்தார்,
உலகின் கொடூரமான இறப்பு கிறிஸ்துவுடையது.
அகிம்சை போராட்டத்தில் வீழ்ந்த முதல் உயிர்
இழப்பு அது!
தன் இனத்தின் விமோசனத்திற்காக அவர்
முட்கிரீடம் சூடி கல்வாரி மலை மீதேறி உயிர்
துறந்து போனார்.
தமிழரின் வாழ்வுரிமைப் போர் மரபிலும்
பன்னிரெண்டாம் நாள் திலீபன்
மரித்துப்போனான்.
எவரும் உடைக்கமுடியாத தமிழர்
"மன உறுதியின்" அடையாளமாக
அவன் வடிவமெடுத்துக்கொண்டான்.
பூக்களையும் இலைகளையும் விட வேர்
"நோக்கத்தால்"
எப்போதும் உயர்ந்தது,
ஆயுள் அதிகமானது.
பூக்களும் இலைகளும் நாட்களில் உதிர்ந்து தீரும்.
அவற்றின் நோக்கமும் எல்லைக்குட்பட்டது.
ஆனால் இவன் "வேராக" வாழ்பவன்,
என்றும் உற்றுழிந்து தீரா தமிழர் விடுதலை
தாகத்திற்காய் பலியான ஆன்மசஞ்சீவி!
வேம்பிலிருந்து உதிர்ந்த பூவொன்று திலீபன்
பாதங்களில் வீழ்ந்தது
அழிவற்ற எம் ஆன்மீக 'வேர்' மீது வேம்பு பூச்சொரிந்து
கண்ணீர்மல்க பிரார்த்தனை செய்தது.

துரோணர்

# தியாக தீபமே எங்கள் திலீபா

# நீங்கிடுமோ உன் நினைவுகள்!

இந்த உலகத்தில் எத்தனையோ தியாகிகள் தோன்றியிருக்கலாம். ஒவ்வொருவரும் ஒவ்வொரு கோரிக்கைகளுக்காக எதை எதை எல்லாமோ தியாகம் செய்திருக்கலாம். ஆனால் தனது சமூகத்திற்காக, தனது இனத்தின் விடிவுக்காக உயிரையே தியாகம் செய்தவர்களின் தியாகங்களை உலகம் என்றும் போற்றி நிற்கின்றது. உலக வரலாற்றிலே போற்றப்பட வேண்டிய திலீபனின் தியாகம் பயங்கரவாதம் என்று நோக்கப்படுவது வேதனையானா ஒன்று. சரி யார் இந்த திலீபன் எதற்காக இவன் தன் உயிரையே தியாகம் செய்தான் என்பதை இன்றைய இளைசமுதாயம் அறிந்திருக்குமா என்பது சந்தேகமே.

எனவே அவர்களுக்காக அந்த தியாக தீபத்தின் சிறப்பினை இங்கே தெளிவுபடுத்த வேண்டும்.

யாழ்ப்பாணம் ஊரெழுவிலே பிறந்த இவரது பெயர் இராசையா பார்த்தீபன். கார்த்திகை 27.1963 இல் பிறந்த பார்த்தீபன் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆரம்ப கால முக்கிய உறுப்பினராக செயற்பட்டவர். யாழ் மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளராக செயற்பட்டவர். 1987 புரட்டாதி 15ஆம் திகதி ஐந்து அம்சக் கோரிக்கையினை இந்தியாவிடம் முன்வைத்து காந்தியின் வழியிலே நீர்கூட அருந்தாது உண்ணா விரதம் இருந்து தனது உயிரையே தியாகம் செய்தவர். அகிம்சை ரீதியான போராட்டங்களில் துளி அளவு நம்பிக்கை கூட இல்லாது ஈழத் தமிழர்களை ஆயுத பிரியர்களாக மாற்றியதோடு மட்டும் அல்லாது இந்திய வல்லாதிக்க இராணுவத்திற்கெதிராக தமிழர்களை களமுனை நோக்கி நகர்த்தியதும் இந்த திலீபனின் இழப்பே. தனது வாழ்விலே எந்த ஒரு சந்தோசத்தையும் அனுபவிக்காத வெறும் இருபத்து நான்கு வயதான அந்த இளம் தளிர் பட்டினியால் கருகிப் போனதை எளிதில் மறக்குமா. தமிழினம்? எனவேதான் அதற்கான பல விளைவுகளை இந்திய வல்லாதிக்க இராணுவம் சந்திக்க நேர்ந்தது.

அமைதிப்படை என்ற பெயரிலே தமிழர் தாயகங்களை ஆக்கிரமிப்பு செய்த இந்தியாவின் கொடிய இராணுவம் இன்றுவரை மறந்திருக்காது. ஈழ மண்ணிலே புலிகளிடம் வாங்கிய அடிகளை அகிம்சையின் ஆசனமாக விளங்கும் இந்தியா ஈழத்தமிழர்களுக்கு இழைத்த அநீதிகள் ஏராளம். ஓராயிரம் சகுனியாகவும் பல்லாயிரம் கூனியாகவும் ஈழத் தமிழர் விடயத்தில் செயற்பட்டு தமிழினத்தின் இன விடுதலை போராட்டத்தை அழித்தொழித்த பெருமை இந்த இந்தியாவையே சாரும்.



இதுபோலவே இந்த தியாக தீபத்தின் இழப்பிற்கும் இந்தியாவே முழு பொறுப்பும். சுருக்கமாக கூறப் போனால் திலீபனை இந்தியா கொலை செய்தது என்றே கூறலாம். அவனது நியாயமான கோரிக்கைகளை இந்தியா நிறைவேற்றி இருந்தால் வாழ வேண்டிய அந்த இளம்தளிர் பட்டினித்தீயிலே பொசிங்கியிருக்காது.

அப்படி அவன் எதை கேட்டான். அவனது ஐந்து கோரிக்கைகளை அன்று நிறைவேற்ற முடியாத காரணம் என்ன?

❖ மீள் குடியேற்றம் என்ற பெயரிலே வடக்கு கிழக்கில் புதிதாக திட்டமிடும் சிங்களக் குடியேற்றங்கள் நிறுத்தப்பட வேண்டும்.

❖ சிறைக் கூடங்களிலும் இராணுவ, பொலிஸ் தடுப்பு முகாம்களிலும் தடுத்து வைக் கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் யாவரும் விடு தலை செய்யப்பட வேண்டும்.

❖ அவசரகால சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும்.

❖ ஊர்காவற்படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாக களையப்பட வேண்டும்.

❖ தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படுவதை தடுத்து நிறுத்த வேண்டும் என்ற ஐந்து கோரிக்கையே ஆகும்.

ஆனால் இன்றுவரை அந்த தியாக திலீபன் கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை. காந்திய தேசத்திடம் காந்திய வழியிலே போராடி தோற்றுப்போன்து திலீபனது அகிம்சை. இதற்காக இந்தியா இதுவரை சிறு வருத்தமோ ஆதங்கமோ காட்டிக் கொள்ள வில்லை. மாறாக அவனை தீவிரவாதியாகவும் வன் முறையாளனாகவுமே சித் தரிக்கின்றது.

ஈழத்தமிழர்களின் வரலாற்றிலே ஒரு பாரிய சோகத்தினையும் ஈழ விடுதலைப் போராட்டத்தின் பேரெழுச்சிக்கும் முக்கியமான ஒரு காரணியாகவும் அமைந்தது திலீபனின் இழப்பு.

அகிம்சை ரீதியாக போராடினால் உரிமைகளை பெற்றுக்கொள்ளலாம் என்றும் உலகத்தில் அகிம்சைதான் சிறந்த ஒரு ஆயுதம் என்றும் வரையப்பட்ட வசனம் நல்லூரான் வீதியிலே பொய்யாகிப் போனது.

உணவின்றி, நீரின்றி வாடிப்போன அந்த இளைஞனை உலகத்தின் அகிம்சையினை போதிக்கும் எந்த ஆசானும் கண்டுகொள்ள வில்லை.

ஒரு இனத்தின் விடியலுக்காக, அந்த இனத்தின் விடுத லைக்காக தன் உயிரையே தியாகம் செய்யும் அளவிற்கு இன்றைய நவீன உலகில் மனிதர்கள் யாரும் இல்லை.

உலகத்தில் ஒன்றை இழந்தால்தான் இன்னொன்றை பெறலாம்.

ஆனால் தன்னையே இழக்கின்ற அளவு தியாகத்தினை எவராலும் செய்ய முடியாது. அப்படி ஒரு மிகப் பெரிய தியாகத்தை செய்த தியாகி திலீபனின் தியாகம் உலக த்தின் அத்தனை தியாகங்க ளையும் விட பெரியது. பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியது. இந்த நூற்றாண்டின் அகிம் சாவாதியாக சமாதானத்தின் தந்தையாக போற்றப்படும் நெல்சன் மண்டேலா இருபத்தேழு ஆண்டுகள் சிறையிலே தனது வாழ் நாளை தியாகம் செய்திருந்தார். அவரது எண்ணம் நிறைவேறியிருந்தது.

ஆனால் திலீபனின் கோரிக்கைகள் இன்று வரை நிறைவேற்றப்பட வில்லை. அவனது தியாகத்துக்கான பலன் கிடைக்கவில்லையே? நெல்சன் மண்டேலா சிறையில் இருக்கும் போதே இந்திய அரசு நேரு சமாதான விருதினை வழங்கியது. 1990 இல் பாரதரத்னா விருதினை வழங்கியது. ஆனால் தனது வஞ்சகத்தால் கொலை செய்யப்பட்ட திலீபனின் தியாகத்தினை அது மறந்து விட்டது. அதற்காக இந்திய தேசம் சிறு வருத்தம் தெரிவிக்கவும் தயாராக இல்லை.

அகிம்சை ரீதியாகப் போராடி உயிர்நீத்த ஒருவனை பயங்கரவாதி என்று ஒதுக்கி வைப்பது அநீதி. எம் இனத்தின் விடியலுக்காகவும் விடுதலைக்காகவும் போராடிய பல்லாயிரம் வீரர்கள் பிறந்த இந்த மண்ணிலே விடுதலைக்கு வித்தாகி வீழ்ந்த உடல்கள் எத்தனை.

எப்படி எல்லாம் போராட முடியுமோ அப்படி எல்லாம் போராடிவிட்டோம். ஆனால் நீதியும் நியாயமும் எமக்கு கிடைப்பதாக இல்லை. இனியும் என்ன செய்யப்போகின்றோம். ஒட்டுமொத்த தமிழினமும் அடிமைப்பட ஒரு சமூகமாக சாகப் போகின்றோமா? அல்லது சரித்திரம் ஒன்றை மாற்றி எழுதப் புறப்படப்போகின்றோமா? மரணப்படுக்கையிலே திலீபன் சொன்னது போல மக்கள் புரட்சி வெடிக்கட்டும், ஒன்றுபட்ட தமிழ்ச்சமூகத்தின் குரல் ஓங்கி ஒலிக்காவிடின் ஒட்டுமொத்த தமிழினத்தின் குரல்வளையினை சிங்களப் பேரினவாதம் நசுக்கிவிடும். சுயநலமற்ற மனிதர்களாக மண்ணிலே வாழும் வரை சுயமரியாதையுடன் வாழ, சுதந்திரக்காற்றினை சுவாசிக்க எல்லோரும் ஒன்றுபடுவோம். தியாக தீபத்தின் அந்த ஒப்பற்ற வீரனின் நினைவினை சுமந்து நிற்கும் இந்த நாளிலே அவன் கோரிக்கைகளை நிறைவேற்றி அஞ்சலி செலுத்துவோம்.

ஆதி

## நாட்டுக்குண்டுடன் கைதான நபரிடம் 24 மணித்தியாலங்கள் விசாரணை!

(கரணவாய்)

நாட்டுக்குண்டுடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை 24 மணித்தியாலங்கள் பொலிஸ் காவலில் வைத்து விசாரிப்பதற்கு நீதிமன்று அனுமதி வழங்கியுள்ளது.

நேற்று முன்தினம் புதன்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் அல்வாய்ப் பகுதியில் வைத்து சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

யுவதி ஒருவரை கடத்தியமை தொடர்பில் தலைமறைவாகியிருந்த அல்வாய் வடக்கைச் சேர்ந்த பிரதான சந்தேக நபர் கைது செய்யப்படும் போது நாட்டுக் குண்டு ஒன்றை தம் வசம் வைத்திருந்ததாக பொலிஸார் கூறினர்.

இது தொடர்பில் பொலிஸ் காவலில் வைத்து விசாரிக்கவே நீதிமன்ற அனுமதியை பருத்தித்துறைப் பொலிஸார் பருத்தித்துறை நீதிமன்றில் நேற்றுக் கோரினர். இதற்கான அனுமதியை நீதிமன்று வழங்கியது. (இ-60)

## மார்க்சிய குழுக்கூட்டம்

யாழ். சர்வதேச மார்க்சிய குழுக் கூட்டம் நாளை மறுதினம் 17 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு சமகால அரசியல் போக்கும் உத்தேச தேர்தல்களும் ஒரு உற்றறிவுப் பார்வை எனும் பொரு ளில் குழுத் தலைவர் ஏ.சி. ஜோர்ச் தலைமையில் இடம்பெறும். அரங்குரையை சொ.சிவபாலன் நிகழ்த்துவார். (இ-7)


# கிருஷ்ணா அடகு சேவை

**பதிவு இல: J/DS/BR/472**

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2017ஆம் ஆண்டு 15.03.2017ற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 15ஆம் திகதி (15.10. 2017)ற்கு முன்னர் மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பண த்தை கட்டி புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் 15.10. 2017 ஆம் திகதியன்று ஏலத்தில் விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

(2016 ஆம் ஆண்டு 12 ஆம் மாதம் 15 ஆம் திகதி முதல் 2017 ஆம் ஆண்டு 3 மாதம் 15 ஆம் திகதிக்கு இடைப்பட்ட நகைகள் யாவும் விற்கப்படும்).

உரிமையாளர் A.S.Surendran

இல.370, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். 021 490 0311 (சி-9626)

இல. 09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.021 222 5046


## பொதுநோக்கு மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டல்

யாழ்.கருகம்பனை தமிழ் மன்ற பொதுநோக்கு மண்டபம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 12.10 மணிக்கு நகுலேஸ்வரம் கிராம அலுவலகம் முன்பாகவுள்ள கருகம்பனை தமிழ்மன்ற சனசமூக நிலையத்தில் சி.பவநீதன் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் ஆசியுரையினை நகுலேஸ் வரம் ஆலய ஆதீன கர்த்தா சிவஸ்ரீ ராஜராஜ ஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்கள் வழங்குவார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரா ளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரு மான மாவை. சேனா திராஜா கலந்து கொள் வார். (இ-3)


## ஏல விற்பனை

யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையின் வருடாந்த பொருட் கணக்கெடுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட பொருட்கள் ஏல விற்பனை 28.09.2017 அன்று விற்கப்பட உள்ளது. ஏல விற்பனைக்குரிய பொருட்களின் விபரங்களை பாடசாலை விளம்பரப் பலகையில் பாடசாலை நேரத்தில் பார்வையிட முடியும்.

(சி. 9641) அதிபர்,


## நாடக விழாவும் போட்டியும்

(யாழ்ப்பாணம்)

சுவிஸ்காரை அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் நாடக விழாவும் போட்டியும் நாளை 16 ஆம் திகதி சனிக்கிழமையும் நாளை மறுதினம் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் காரைநகர் இந்துக் கல்லூரி நடராசா ஞாபகார்த்த மண்டபத்தில் மாலை 4 மணிக்கு இடம்பெறும்.

இதில் "திருந்துவார்களா?", "வெல்க மானுடம்", "செல்லரித்த வாழ்வின் விளிம்பில்", "காலனை வென்ற கற்புக்கரசி" என்ற தலைப்பு க்களில் நாடகங்கள் மேடையேற்றப்படும். (இ-7)


## நூல் வெளியீட்டு நிகழ்வு அழைப்பிதழ்

திரு.பி.முத்துலிங்கம்
(ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர்)
அவர்களின்

### அரசியல் - அறிவியல் - சமூகம்

காலம்: 16.09.2017 சனிக்கிழமை
நேரம்: பி.ப. 3.00 மணி
இடம்: Hamsiya Mahal மண்டபம்
ராஜா கிறீம் கவுஸ்,
37, இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

தலைமை:
திரு.நா.சத்தியநாதன்
(ஓய்வு நிலை கோட்டக் கல்விப் பணிப்பாளர், சட்டத்தரணி)

வாழ்த்துரைகள்:
திரு.ந.விஜயசுந்தரம்
(பிரதம ஆசிரியர், வலம்புரி)
திரு.க.அருந்தவபாலன்
(ஓய்வுநிலை அதிபர்)

வெளியீட்டுரை:
திரு.K.R.டேவிட்
(ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர்-எழுத்தாளர்)

முதல் பிரதி பெறுபவர்:
திரு.S.P.சாமி
(தினக்குரல் ஸ்தாபகர், தொழிலதிபர்)

கருத்துரை:
திரு.பெ.முத்துலிங்கம்
(எழுத்தாளர், சமூக ஆய்வாளர்-கண்டி)

மதிப்புரை:
கலாநிதி.K.T. கணேசலிங்கம்
(தலைவர், அரச அறிவியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

ஏற்புரையும் நன்றியுரையும்:
திரு.பி.முத்துலிங்கம்
(நூலாசிரியர்)

ஆர்வலர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- நூல் வெளியீட்டுக் குழு -

## மணிவிழாக் காணும் ஆசிரியரை வாழ்த்துகின்றோம்

திரு.யோசப் அன்ரன் பிறின்ஸ் (B.Sc)
ஆசிரியர் (தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்)
யா/சன்மார்க்க மகா வித்தியாலயம்



கடலின் ஆழம் அமைதியைப் போல்—உம்
கருத்தின் ஆழம் கண்டு வியந்தோம்
பண்பான ஆசிரியராய் அன்புடன் பழகி
பக்குவமாய் வேலைகளை பாங்குடன் செய்திடுவீர்!

ஆசிரியப் பணியை அர்ப்பணி எனக் கொண்டு
தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடத்தினை
தன்மையாய் மாணவர்க்கு ஊட்டி வளர்த்து
ஆசிரிய சேவையில் உயர்ந்து ஏற்றம் கண்டீர்!

வாழ்த்துகிறோம் உம்மை நலன் பெறவே
ஆண்டவன் திருவருளால் இவ் வையத்தில்
மகிழ்வுடன் வாழ்க பல்லாண்டு வாழ்கவென...

(361)

யா/சன்மார்க்க மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம்.
Best Wishes
வாழ்த்துவோர், பாடசாலை சமூகம்.



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 34 செவ் 12 இல்<br>உயரம்: 5'10''<br>தகைமை/தொழில்: A/L/அரச தொழில்<br>தொ.இ: B/7770 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 4<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L/கனக்காளர்<br>தொ.இ: G/7789 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: B/7771 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: சூரிசெவ் 2 இல்<br>தகைமை/தொழில்: Diploma/அரச தொழில்<br>தொ.இ: G/7790 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/7772 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>கி.பா: செவ் 7 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: G/7791 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 45<br>தகைமை/தொழில்:MBBS/ வைத்தியர்<br>தொ.இ: B/7773 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: IT/அரச உயர் பதவி<br>தொ.இ: G/7792 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# ஊழலை ஒழிக்க தனிக்கட்சி தொடங்குவேன்

## கமல்ஹாசன் பரபரப்பு பேட்டி

(சென்னை)

எந்த கட்சியிலும் சேராமல் ஊழலை ஒழிக்க தனிக் கட்சி தொடங்குவேன் என்று இணையத்தளம் ஒன்றுக்கு நடிகர் கமல்ஹாசன் பேட்டி கொடுத்துள்ளார்.

நடிகர் கமல்ஹாசன் இணையத்தளம் ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியில் தெரிவித்திருப்பதாவது,

ஒவ்வொரு கட்சிக்கும் ஒரு சித்தாந்தம் இருக்கிறது. எனக்கும் அரசியல் பற்றிய எண்ணங்கள் இருக்கின்றன. ஆனால் எந்தக்கட்சிகொள்கையுடனும் எனது சிந்தனைகள் பொருந்தவில்லை. ஒத்துப் போகவில்லை.

சமீபத்தில் கேரள முதலமைச்சரை சந்தித்தேன். உடனே கம்யூனிஸ்டு கட்சியில் சேரப் போவதாக செய்திகள் வந்தன. நான் பல்வேறு கட்சி தலைவர்களுடன் புகைப்படம் எடுத்து இருக்கிறேன். ஆனால் எந்தக்கட்சியிலும் சேரும் எண்ணம் இல்லை.



அரசியலில் மாற்றம் வேண்டும். புதிய சூழ்நிலை உருவாக வேண்டும் என்ற எண்ணம் எனக்கு இருக்கிறது.

தமிழ்நாட்டில் இருந்து இந்த மாற்றம் தொடங்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். மாற்றத்தை கொண்டு வர சிறிது தாமதம் ஆகலாம்.

அரசியலுக்கு வரும் சூழ்நிலையில் தனிக்கட்சி தொடங்குவேன். மாற்றத்தை நான் முன் எடுத்து செல்வேன்.

இது என் வாழ்நாளில் கூட நிறைவேறாமல் போனாலும் எனக்கு பின் வருபவர்கள் வழி நடத்திச் செல்வார்கள்.

இந்தியாவில் அரசியல் அமைப்பு தோல்வி அடைந்து விட்டது. இதில் மாற்றம் வரவேண்டும். ஊழல் இல்லாத நிலை உருவாக வேணடும் என்பதே எனது விருப்பம். 5 வருடம் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவர் சிறப்பாக செயற்படாவிட்டால் 5 வருடங்கள் காத்து இருந்து வாக்குப் போட்டு மாற்றும் நிலை இருக்கக்கூடாது.

கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாவிட்டால் உடனே அவர்களை மாற்றும் நிலை வரவேண்டும். புதிய மாற்றம் தமிழ்நாட்டில் இருந்து தொடங்க வேண்டும்.

ஏனென்றால் அடுத்த வீடு சுத்தமாக இருக்க வேண்டும் என்று நான் சொன்னால் முதலில் என் வீட்டை நான் சுத்தப்படுத்த வேண்டும். இதுதான் என் எண்ணம். சரியான நேரம் அமைந்தால் மாற்றம் தொடங்கும். அதற்கான வேலைகள் இப்போது தொடங்கிவிட்டன. ஊழல் இருக்கும் இடத்தில் நான் இருக்கமாட்டேன். நான இருக்கும் இடத்தில் ஊழல் இருக்காது என்று அவர் மேலும் தெரிவித்தார். (8)

# சிங்கப்பூரின் ஜனாதிபதி ஹலிமா யாக்கோப்



(சிங்கப்பூர்)

இந்திய வம்சாவளியை சேர்ந்த ஹலிமா, சிங்கப்பூரின் எட்டாவது ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டதாக தேர்தல் அதிகாரி அறிவித்தார்.

சிங்கப்பூரின் ஜனாதிபதியாக இருந்து வந்த டோனி டான் கெங்யாம், பதவிக்காலம் கடந்த மாதம் 31 ஆம் திகதி முடிந்தது.

இதையடுத்து புதிய ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல், எதிர்வரும் 23 ஆம் திகதி நடத்தப்படும் வேட்பு மனுத் தாக்கல் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இத்தேர்தலில் பாராளுமன்ற முன்னாள் சபாநாயகர் ஹலிமா யாக்கோப் (வயது 63) உள்ளிட்ட 5 பேர் போட்டியிடுவர் என தகவல்கள் வெளியாகி வந்தன. ஆனால் சிங்கப்பூர் சட்டப்படி ஹலிமா தவிர்த்து ஏனைய 4 பேரும் போட்டியிடுவதற்கான தகுதியை பெறவில்லை.

இந்த நிலையில் ஹலிமா மட்டுமே ஜனாதிபதித் தேர்தலுக்கு போட்டியிட தகுதி பெற்றார். நேற்று முன்தினம் அவர் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார். வேட்பு மனு தாக்கலுக்கான நேரம் முடிந்த பிறகு, அவர் முறைப்படி சிங்கப்பூர் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டதாக தேர்தல் அதிகாரி அறிவித்தார்.

ஹலிமா, சிங்கப்பூரின் எட்டாவது ஜனாதிபதி மற்றும் முதல் பெண் ஜனாதிபதி என்ற சிறப்பை பெறுகிறார். இவர் இந்திய வம்சாவளியை சேர்ந்தவர்.

நேற்று முன்தினம் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு ஹலிமா, தேர்தல் அலுவலகத்தில் வைத்து பேசும்போது, " நான் நாட்டு மக்கள் அனைவருக்கும் ஜனாதிபதியாக இருப்பேன்" என்று வாக்குறுதி அளித்தார். (8)

# ரோஹிஞ்யா இனத்தவர்கள் மீதான அடக்குமுறைக்கு முற்றுப்புள்ளி

## கனடா பிரதமர் வேண்டுகோள்

(ஒட்டாவா)

மியன்மாரில் ரோஹிஞ்யா முஸ்லிம் இனத்தவர்கள் மீதான அடக்குமுறைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேணடும் என ஆங் சான் சூகியிடம் கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ வேண்டுகோள்விடுத்துள்ளார்.



மியன்மார் நாட்டில் ரோஹிஞ்யா முஸ்லிம்களுக்கு எதிராக அந்நாட்டு இராணுவம் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. இதனால் சுமார் 3 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் பங்களாதேஷத்திற்கும், இந்தியாவிற்கும் தப்பியோடியுள்ளனர். இதற்கு பல தரப்பினரும் தங்கள் எதிர்ப்பை தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில், மியன்மார் நாட்டின் தலைவராகவும், அரசின் ஆலோசகராகவும் உள்ள ஆங்சான் சூகியிடம் கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ நேற்று தொலைபேசி மூலம் பேசியுள்ளார்.

அப்போது, ரோஹிஞ்யா முஸ்லிம்கள் மீது நடத்தப்படும் அடக்குமுறைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என ஜஸ்டின் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும், மியன்மாரின் தார்மீக மற்றும் அரசியல் தலைவராக உள்ள ஆங் சான் சூகியிடம், ராக்கீன் பகுதியில் ரோஹிஞ்யா இனத்தவர்கள் நடத்தப்படும் விதம் குறித்து தனது கவலையையும் ஜஸ்டின் வெளிப்படுத்தியுள்ளார்.

ஆங் சான் சூகி கனடா நாட்டின் சிறப்பு குடியுரிமை பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையே, ஆங்சான சூகி நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து மக்களிடம் அடுத்த வாரம் உரையாற்றுவார் என்று மியன்மார் அரசின் செய்தித்தொடர்பாளர் தெரிவித்துள்ளார். (8)

# ஒரேநாளில் இரு இடங்களில் படகு கவிழ்ந்து விபத்து

## 28 பேர் பலி

(லக்னோ)

ஒரே நாளில் உ.பி. மற்றும் பீகாரில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் ஆற்றில் மூழ்கி 28 பேர் பலியான



சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

உத்தரப்பிரதேசம் மாநிலம் பாக்பத் மாவட்டத்தில் நேற்று 60 பேரை ஏற்றிச் சென்ற படகு யமுனை ஆற்றில் கவிழ்ந்து பயங்கர விபத்துகுள்ளானது.

இந்த விபத்தில் படகில் பயணம் செய்த 22 பேர் நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தனர்.

மீட்கப்பட்ட 12 பேர் அருகில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். காணாமல் போன மீதி பேரை தேடும் பணியில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இதனால் பலி எண்ணிக்கை உயரும் அபாயம் இருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதே போன்று பீகாரிலும் நேற்றுக் காலை படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. பீகாரில் மராஞ்சி பகுதியில் உள்ள கங்கை ஆற்றில் ஏற்பட்ட இந்த விபத்தில் 6 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

ஒரே நாளில் இரு இடங்களில் ஏற்பட்ட படகு விபத்தில் 28 பேர் பலியான சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (8)



இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் சொந்த மாநிலமான குஜராத்தில் நேற்று வியாழக்கிழமை இந்தியாவின் முதல் அதிவேக ரயில் திட்டத்தை ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே தொடங்கி வைத்தார்.

# தீவிரவாதிகள் - இராணுவம் மோதல்

## 7 பேர் பலி

(கெய்ரோ)

எகிப்து நாட்டின் சினாய் மாகாணத்தில் தற்கொலைப் படை தாக்குதல் நடத்தி வந்த 5 தீவிரவாதிகளை இராணுவம் சுட்டுக் கொன்றது. இந்த மோதலில் 2 வீரர்களும்



பலியாகினர்.

எகிப்து நாட்டின் சினாய் மாகாணத்தில் வடக்கு பகுதியில் அமைந்துள்ள சோதனை சாவடியில் நேற்று ராணுவ வீரர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

அப்போது திடீரென தற்கொலைப்படை தீவிரவாதி ஒருவன் இடுப்பில் வெடி மருந்தை கட்டிக்கொண்டு சோதனை சாவடியில் பணிபுரியும் வீரர்களை நோக்கி வந்துள்ளான். இதைக் கண்ட இராணுவ வீரர்கள் அவனை மடக்கி பிடித்தனர். இரு தரப்புக்கும் இடையே நடந்த சண்டையில் 5 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். இந்த சண்டையில் 2 இராணுவ வீரர்களும் பலியாகினர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து இராணுவத்தின் செய்தி தொடர்பாளர் கூறுகையில், வெடி மருந்தை கட்டிக் கொண்டு வந்து தாக்குதல் நடத்த முயன்ற தீவிரவாதிகளின் தாக்குதல் நடவடிக்கை வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டுள்ளதீ என குறிப்பிட்டுள்ளார். (8)

# அணுவாயுத திட்டங்கள் இரட்டிப்பாகும்

# வடகொரியா சபதம்




(சியோல்)

பொருளாதார தடைகளுக்கு மத்தியில், நாட்டின் அணு ஆயுத திட்டத்தை முடுக்கி விட வடகொரியா சபதம் செய்துள்ளது.

வடகொரியா 6ஆவது முறையாக கடந்த 3ஆம் திகதி அணுகுண்டு சோதனை நடத்தியதற்காக அந்த நாட்டின மீது கடுமையான பொருளாதார தடை விதிக்க வேண்டும் என்று ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் அமெரிக்கா ஒரு தீர்மானம் கொண்டு வந்தது. அந்த தீர்மானம், எதிர்ப்பின்றி நிறைவேறியது. இதனால் வடகொரியாவின ஜவுளி ஏற்றுமதி பாதித்துள்ளது. அந்த நாடு கச்சா எண்ணெய் இறக்குமதி செய்வதிலும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இந்த புதிய பொருளாதார தடைகள் காரணமாக வடகொரியாவுக்கு ரூ.7,800 கோடி வருவாய் இழப்பு ஏற்படும் நிலையில் இது வடகொரியாவுக்கு கடும் ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது. தீய பொருளாதார தடைகளுக்கு மத்தியில், நாட்டின் அணு ஆயுத திட்டத்தை முடுக்கி விட வடகொரியா நேற்று முன்தினம் சபதம் செய்துள்ளது.

இதுபற்றி வடகொரிய வெளியுறவுத்துறை நேற்று ஒரு அறிக்கை வெளியிட்டது. அந்த அறிக்கையில், "அமெரிக்காவின் முயற்சி யால் மேலும் ஒரு சட்டவிரோத, தீய பொருளாதார தடை தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. நாட்டின் இறையாண்மையை பாதுகாக்கவும், இருப்பு உரிமையை நிலைநாட்டவும் தனது வலுவை வடகொரியா இரட்டிப்பாக்கும் என கூறப்பட்டுள்ளது. மேலும், வடகொரியாவின் பாதை முற்றிலும் சரியே என்று நியாயப்படுத்தப்பட்டுள்ளது. (8)

# வடகொரியாவின் செயற்பாடுகளால் தென்கொரிய மக்கள் அச்சத்தில்

(சியோல்)

வடகொரியா தொடர்ந்து அணு ஆயுத சோதனைகளை நடத்தி வருவது தென்கொரிய மக்களை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது.

இந்த விவகாரத்தில் அமெரிக்காவை நம்பி மட்டும் பயனில்லை என்ற கருத்து தென் கொரிய மக்களிடம் நிலவுகிறது.

சமீபத்தில் நடந்த கருத்துக் கணிப்பில் கூட, 78 சதவிகித தென் கொரிய மக்கள் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீது தங்களுக்கு நம்பிக்கை இல்லை என கருத்து தெரிவித்துள்ளனர்.


இதற்கிடையே விரைவில் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை விரைவில் சோதித்து பார்க்கவுள்ளதாக வடகொரியா அறிவித்துள்ளது.

இதனையடுத்து தென் கொரியாவின் போர்க் கப்பல்கள் வடகொரிய எல்லைக்கு அருகே குவிக்கப்பட்டு வருகின்றன.

உலக நாடுகளுக்கு தெரியாமல் ஐதரசன் குண்டுகளை தென்கொரியா தயாரிக்கலாம் என்ற கருத்தும் நிலவி வருகிறது.

என்னதான் தயாரான நிலையில் இருந்தாலும், வடகொரியாவின் எதிர்பாராத தாக்குதல்களை நினைத்து தென்கொரிய மக்கள் அச்சத்தில் உறைந்துள்ளனர். (8)

# ஜேர்மன் கலைஞர்களின் கின்னஸ் சாதனை



(ஜேர்மன்)

உலகின் மிக உயரமான மணல் கோட்டையை கட்டி ஜேர்மன் மணல் சிற்ப கலைஞர்கள் சாதனை படைத்துள்ளனர்.

ஜேர்மனியை சேர்ந்த சுற்றுலா நிறுவனமான **Schauinsland-Reisen GmbH, Duisburg** நகரில் மணல் சிற்பம் ஒன்றை அமைக்க முடிவு செய்தது.

விளம்பரத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்வில் மணல் சிற்பக் கலைஞர்கள் 16.68 மீற்றர் உயரம் கொண்ட கோட்டையை கட்டியுள்ளனர்.

சுமார் 3500 தொன் எடை கொண்ட இந்த மணல கோட்டையை ஆய்வு செய்த அதிகாரிகள் கின்னஸ் சான்றிதழ் வழங்கியுள்ளனர்.

இதன்மூலம் உலக அமைதியை வலியுறுத்தி சுதர்சன் பட்நாயக் என்பவரால் அமைக்கப்பட்ட 14.84 உயர மணல் கோட்டையின் சாதனை முறியடிக்கப்பட்டுள்ளது. (8)

# பாடசாலையில் தீ விபத்து

## மாணவர்கள் உட்பட 25 பேர் பலி!



மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் உள்ள மத வழிபாட்டுப் பாடசாலை ஒன்றில் நேற்றுக் காலை ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் மாணவர்கள் உட்பட 25 பேர் பலியாகியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கோலாலம்பூரில் ஜாலான தாடக் கேராமத் என்ற பகுதியில் தாருல் குரான் இட்டிபாகியா என்ற பெயரில் மத வழிபாட்டு பாடசாலை செயறபட்டு வருகிறது.

நேற்று அதிகாலை அப்பாடசாலை யில் திடீரென தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இக்கோர விபத்தில் சிக்கி பாடசாலை விடுதியில் இருந்த 23 மாணவர்கள் மற்றும் 2 விடுதி காப்பாளர்கள் பலியாகியதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த தகவலை அந்நாட்டு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை உறுதிப்படுத்தியுள்ளது.

பலியானவர்களின் உடல்கள் அருகிலுள்ள வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலையில் தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணம் இதுவரை வெளியாகவில்லை. (8)

# நீதிமன்ற தடையை மீறி அரச ஊழியர்கள் போராட்டம்

## தற்காலிக வேலைநிறுத்த கடிதம் வழங்க அரசு முடிவு



(சென்னை)

நீதிமன்ற உத்தரவை மீறி அரசு ஊழியர்கள்-ஆசிரியர்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். 75 ஆயிரம் பேருக்கு விளக்க நோட்டீசை தபால் மூலமாகவும், நேரிலும் அதிகாரிகள் வழங்கி வருகிறார்கள்.

பழைய ஓய்வூதிய திட்டத்தை அமுல்படுத்த வேண்டும், 7ஆவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்த வேண்டும் ஆகிய கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி அரசு ஊழியர்கள் - ஆசிரியர்களின் கூட்டமைப்பான ஜாக்டோ-ஜியோவில் ஒரு பிரிவினர் காலவரையறையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 7 ஆம் திகதி முதல் தமிழகம் முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் ஆர்ப்பாட்டம்-மறியல்போன்ற போராட்டங்களில் ஈடுபட்டு வருகிறார்கள்.

அரச ஊழியர்கள் போராட்டத்திற்கு மதுரை உயர் நீதிமன்றம் தடை விதித்தது. பொதுமக்களுக்கும், மாணவர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் அரசு ஊழியர்களின் வேலை நிறுத்தத்தை உரிமையாக கருத முடியாது என்று எச்சரித்ததோடு இன்று நீதிமன்றில் ஜாக்டோ-ஜியோ நிர்வாகிகள் ஆஜராக வேண்டும் என்றும் உத்தரவிட்டது.

ஆனால் நீதிமன்ற உத்தரவை மீறி அரசு ஊழியரகள்- ஆசிரியர்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.

தொடர்ந்து அனைத்து மாவட்ட கலெக்டர் அலுவலகத்தையும், அரச அலுவலகங்களையும் முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர்.

ஏற்கனவே அரச ஊழியர்கள் போராட்டத்தை கைவிட வேண்டும், விடுப்பில் செல்லக்கூடாது என்றும் அனைவரும் பணிக்கு திரும்ப வேண்டும் என்றும் தமிழக அரசு அழைப்பு விடுத்தது.

அதையும் மீறி போராட்டத்தில் ஈடுபட்டதால் அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் விதமாக 17 ஏ நோட்டீஸ் அனுப்ப முடிவு செய்யப்பட்டது.

தற்போது தற்காலிக வேலை நீக்கம் செய்யக்கூடிய 17 பி நோட்டீஸ் வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சுமார் 75 ஆயிரம் அரசு ஊழியர்கள்- ஆசிரியர்களுக்கு அந்தந்த துறை அதிகாரிகள் விளக்க நோட்டீசை தபால் மூலமாகவும், நேரிலும் வழங்கி வருகிறார்கள். (8)

# "பேசுவதை விட அதிகம் செய்ய முடியும்"

# ஐ.நா.தீர்மானத்தை உடன் நிறைவேற்ற இலங்கைக்கு அழுத்தம் கொடுங்கள்

## உறுப்பு நாடுகளிடம் மனிதவுரிமைகள் கண்காணிப்பகம் மீள வலியுறுத்து

**(கொழும்பு)**

**2015 ஆம் ஆண்டு ஒக்டோபரில் நிறைவேற்றப்பட்ட நிலைமாறுகால நீதிக்கான தீர்மானத்தின் இலக்குகளை நிறைவேற்றுமாறு இலங்கை அரசிற்கு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகள் உடனடியாக அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.**

இலங்கை விடயத்தில், பல்வேறு நல்லிணக்கப் பணியகங்களை அமைப்பதும், முன்னேற்றங்கள் பற்றிப் பேசுவதும், 2015 ஆம்ஆண்டு தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இணையானது அல்ல என்ற விடயத்தில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையிலுள்ள அரசாங்கங்கள், தெளிவாக இருக்க வேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசியப் பிராந்தியத்துக்கான பணிப்பாளர் மீனாட்சி கங்குலி தெரிவித்துள்ளார்.


"நீண்டகாலமாகப் பாதிக்கப்பட்ட இலங்கையர்கள், தீர்மானம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதைக் காண வேண்டிய தேவை உள்ளது. நீதி கிடைப்பதற்கான ஆதாரங்களை அவர்கள் காண வேண்டும்.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை பெருமளவில் தோல்வியடைந்துள்ளது.

மனித உரிமைகள் தொடர்பாக பேசுவதை விட, அதிகமாகச் செய்ய் முடியும் என்பதை இலங்கை அதிகாரிகள் வெளிப்படுத்த வேண்டும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# காணாமல் போனோரின் நிலையை இலங்கை வெளிப்படுத்த வேண்டும்

## பிரதமர் ரணிலிடம் ஐ.ரோ.ஒன்றியம் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

இலங்கை பல்வேறு விடயங்களில் இன்னமும் மறுசீரமைப்புக்களை செய்ய வேண்டியுள்ளது என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் உண்மையைக் கண்டறியும் குழு பிரதமரிடம் நேரில் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் துங்- லாய் மார்கே தலைமையிலான ஐரோப்பிய ஒன்றியத்தின் உண்மையைக்கண்டறியும் குழு இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நேற்று முன்தினம் பிற்பகல் சந்தித்து கலந்துரையாடிய போதே, இவ்வாறு வலியுறுத்தியுள்ளது.

பிரசெல்சிலிருந்து வந்திருந்த ஐரோப்பிய ஒன்றியத்தின் உண்மையைக் கண்டறியும் குழுவினர், 10 நாட்கள் இலங்கையில் மேற்கொண்ட பயணத்தின் முடிவில் நேற்று முன்தினம் பிரதமரைச் சந்தித்திருந்தனர்.

"மனித உரிமைகள், தொழிலாளர் விவகாரங்கள், சுற்றாடல் தரநியமங்கள் போன்றவற்றில் இலங்கை அரசாங்கம் முன்னேற்றங்களை வெளிப்படுத்தியுள்ளது.

மனித உரிமைகளில் ஏற்பட்டுள்ள உண்மையான மாற்றங்கள் உள்ளிட்டவற்றுக்கு அரசாங்கத்தின் சிறந்த ஒத்துழைப்பு இருந்தது.

எவ்வாறாயினும், முக்கியமான விடயங்களில் உறுதியான முன்னேற்றத்தை வெளிப்படுத்த தவறியமை, இன்னமும் முக்கியமான கரிசனையாக இருக்கிறது.

சித்திரவதை நிறுத்தப்பட வேண்டும். இது முக்கியம். பயங்கரவாத தடைச் சட்டத்தை மாற்றியமைப்பது உள்ளிட்ட வாக்குறுதிகளை அரசாங்கம் கொடுத்திருந்தது.

போரின் முடிவில் காணாமல் போனவர்களின் கதி என்னவென்று தெளிவுபடுத்தப்பட வேண்டும்" என்றும் இந்தச் சந்திப்பின் போது ஐரோப்பிய ஒன்றியக்குழுவினர் வலியுறுத்தியுள்ளனர். (இ-7)

# கஹட்டோவிட்டாவில் பாரிய வெள்ளம் பிரதான வீதியில் போக்குவரத்து பாதிப்பு



நேற்று முன்தினமிரவு பெய்த அடை மழையினால் அத்தனகல்ல ஓயா பெருக்கெடுத்ததில் கஹட்டோவிட்டாவின் பிரதான வீதி நீரில் மூழ்கியுள்ளது.

கஹட்டோவிட்டா ஊடாக செல்லும் நிட்டம்புவ - கிரிந்திவெல பாதை முழுமையாக நீரில் மூழ்கியுள்ளதனால், அப்பாதையின் போக்குவரத்து முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இவ்வெள்ளத்தினால் சுமார் 50 குடும்பங்கள் வாழ்விடங்களை விட்டும் இடம்பெயர்ந்துள்ளன. கஹட்டோவிட்டாவிலிருந்து வெளிப் பிரதேசங்களுக்கு தொழிலுக்கு செல்பவர்களும் பாடசாலை செல்லும் மாணவர்களும் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்தனகல்லை ஓயா ஊடறுத்துச் செல்லும் உடுகொட, திஹாரிய ஆகிய கிராமங்களிலும் சில பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன. நேற்று முன்தினம் இந்த வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

## நல்லது கெட்டதுகளில் கலந்துகொள்ளும் கலை!

நாளை மணிவிழா, ஆனால் நான் அதே தினத்தில் சென்னையில் இருக்க வேண்டிய நிலை. என் பிறந்த ஊரில் நடந்த அந்த மணி விழாவிற்கு முதல் நாள் சென்றேன். நாளை கலந்து கொள்ள இயலாத நிலையை ஆற அமர விளக்கினேன். புரிந்து கொண்டார்கள். அவர்கள் இல்லத்தில் சாப்பிட்டேன். காலில் விழுந்து ஆசீர்வாதம் பெற்றேன். புறப்பட்டு விட்டேன்.

ஒரு திருமணத்திற்குப் போக முடியவில்லை. வெளியூரில் திருமணம். வாழ்த்து மட்டும் அனுப்பினேன். இரண்டு தினங்கள் கழித்து சென்னைக்குத் திரும்பிய அந்தத் திருமணப் புதுத் தம்பதியைப் போய்ப் பார்த்தேன்; ஏன் வர இயலவில்லை என விளக்கினேன். ஏற்றுக் கொண்டார்கள்.

இரு நிகழ்ச்சிகளிலுமே நான் குறிப்பிட்ட தினத்தன்று இல்லை என்றாலும் சம்பந்தப்பட்டவர்களிடம் என் பிரியத்தை வெளிப்படுத்தி அவர்களது மகிழ்ச்சியைப் பெற்றுவிட்டேன். குறைந்தபட்சம் அவர்களது மனவருத்தத்திற்கு ஆளாகாமல் தப்பிவிட்டேன்.

முகூர்த்த நேரம் முடிஞ்சிட்டுதுங்க அதனால போகலைங்க என்று சிலர் அசடு வழிவார்கள். ஒரு திருமணத்தில் கலந்து கொள்வதில் நேரத்திற்கு இரண்டாம் பட்ச முக்கியத்துவம்தான். முதல் முக்கியத்துவம் உணர்வுக்குத்தான்.

இங்கே ஒரு திருமணம்; ஐம்பது கிலோ மீற்றர் தள்ளி ஒரு திருமணம். இரண்டிலும் எப்படிக் கலந்து கொள்வது என்று ஒரு திருமண வீட்டில் இருக்கிற நாற்காலியில் தங்களை மானசீகக் கயிற்றால் கட்டிப் போட்டுக் கொண்டு அமர்ந்து கொள்கிறவர்கள் பலர்.

நேரமாவது தூரமாவது? என்று அலைச்சலையும் செலவையும் பாராமல் கொஞ்சம் முன்பின் போனால்கூட நம் நிலைமையை விளக்கி விடலாம் என்று இரண்டு விசேடங்களையும் எட்டிப் பிடிக்கிறவர்கள்தாம் புத்திசாலிகள்.

பலருக்கு ஒரு விடயம் மட்டும் ஏனோ பிடிபடுவது இல்லை. அந்தக் குறிப்பிட்ட மணநாளோ அந்தக் குறிப்பிட்ட முகூர்த்த நேரமோ முக்கியமில்லை, கலந்துகொள்ளவேண்டும் என்கிற உணர்வுதான் முக்கியம். மற்றவர்கள் மீது உள்ள மரியாதையையும் பிரியத்தையும் வெளிப்படுத்தும் சந்தர்ப்பம் இது. இதை நழுவ விடக் கூடாது.

வாழ்த்தும் அனுப்பாமல் முதல் நாளும் போகாமல் திருமணம் முடிந்த பிறகும் போய்ப் பார்க்காமல் நாட்களை ஏகமாய்க் கடத்திவிட்டு வரமுடியலைங்க வேலைங்க என்று போகிற போக்கில் பார்க்கிற இடத்தில் சொன்னால் அது மன இடைவெளிகளைத்தான் அதிகப்படுத்துமே தவிர சொல்லப்படும் எத்தகைய காரணமும் எடுபடாமல் போய் விடும்.

திருமணத்தில் கலந்துகொள்ள முடியாமல் போனாலும் அதை ஈடுசெய்யக்கூடிய சிறு முயற்சியிலாவது நாம் இறங்கியாக வேண்டும். இல்லாவிட்டால் நம்முடைய உணர்வுகளைத் திருமண இல்லதைச் சேர்ந்தவர்கள் புரிந்து கொள்ளாமல் போய் உறவே முறிந்து விட வாய்ப்பாகிவிடும்.

எங்கு என்ன நடந்தாலும் சரி நான் எங்கும் நகரமாட்டேன். பிடிச்சு வச்ச பிள்ளையார் மாதிரி உட்கார்ந்த இடத்திலேயே இருப்பேன் என்று அடம்பிடித்தால் நமக்கென்று நான்கு பேர் வேண்டாமா? நம் வீட்டு விசேடத்திற்கு நான்கு பேர் வர வேண்டாமா?

**லேனா தமிழ்வாணன்**

# ஜனாதிபதி சுயநலமில்லாதவர் தலைவர்களுக்கு சிறந்த முன்மாதிரி

## மல்வத்து பீடம் புகழாரம்




(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்கால தலைவர்களுக்கு சிறந்த முன்மாதிரியை வழங்கியுள்ளதாக மல்வத்து பீட அனுநாயக்கர் திம்புல்கும்புரே விமலதம்ம தேரர் தெரிவித்துள்ளார்.

மியன்மாரில் இருந்து அன்பளிப்புச் செய்யப்பட்ட யானையை தலதா மாளிகைக்கும், ரஷ்யாவில் வழங்கப்பட்ட வாளை தேசிய அருங்காட்சியகத்துக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கியுள்ளார்.

தனக்கு வெளிநாடுகளிலிருந்து வழங்கப்படும் பாரிய அன்பளிப்புக்களை பொது மக்களின் நலன்களுக்காக தியாகம் செய்யும் அதேநேரம், மறுபுறத்தில் சில அரசியல்வாதிகள் தனக்கு கிடைக்கும் அன்பளிப்புக்களை தனியான அருங்காட்சியகங்களை அமைத்து தன்னுடைய சொத்தாக பாதுகாத்து வருவதாகவும் தேரர் கூறியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க நேற்று முன்தினம் மல்வத்து மகா விகாரைக்கு சென்று ஆசீர்வாதம் பெற்ற போது விமலதம்மதேரர் இதனைத் தெரிவித்தார். (இ-7)




# காணாமற்போனோர் பணியகத்துக்கு நம்பகமான ஆணையாளர்களை அரசாங்கம் நியமிக்க வேண்டும்

## மேற்குலக நாடுகள் வலியுறுத்தல்

(கொழும்பு)

**காணாமல் போனோர் பணியகத்தை உருவாக்கும் வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதியால் வெளியிடப்பட்டுள்ளதை வரவேற்றுள்ள மேற்குலக நாடுகள் இந்தப் பணியகத்துக்கு நம்பகமான ஆணையாளர்களை நியமிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளன.**

காணாமல் போனோர் பணியகத்தை இன்று தொடக்கம் . செயற்படுத்தும், வர்த்தமானி அறிவிப்பை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த 12ஆம் திகதி வெளியிட்டார்.

இதற்கு அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், கனடா உள்ளிட்ட நாடுகள் வரவேற்புத் தெரிவித்துள்ளன. இது தொடர்பாக அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவு ஒன்றை இட்டுள்ளார்.

அதில் அவர், "நல்லிணக்கத்துக்கான முன்னோக்கிய முக்கியமான நகர்வு.




நன்கு நிதியளிக்கப்பட்ட, வலுவான, சுதந்திரமான, நன்கு தகுதியான ஆணையாளர்களுடன் செயற்படும் காணாமல் போனோர் பணியகம், பதில்களைத் தேடும் அனைத்து சமூகங்களையும் சேர்ந்த குடும்பங்களுக்கும் நம்பிக்கையை அளிக்கும் என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, "காணாமல்போனோர் பணியகம் செயற்படத் தொடங்குவது, வரவேற்கத்தக்க, முக்கியமான ஒரு நடவடிக்கை. நம்பகமான ஆணையாளர்களை விரைவாக சேர்த்துக் கொள்ள முடியும் என்று ஐரோப்பிய ஒன்றியம் நம்புகிறது என்று அந்த ஒன்றியம் தெரிவித்துள்ளது.

"இது பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு முக்கியமான, சாதகமான நகர்வு. அடுத்த கட்டம், ஆணையாளர்கள் மற்றும் செயற்படுதல்" என்று கனடா தெரிவித்துள்ளது. (இ-7)

# அருந்திகவுக்கு அமைச்சுப் பதவி

## ஜனாதிபதியுடன் நிகழ்விலும் பங்கேற்பு



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஒருகொடவத்தை மோட்டார் வாகனப் பொறியியல் பயிற்சி நிறுவனத்தின் புதிய கட்டடத்தொகுதி திறப்பு நிகழ்வில் பதவி நீக்கம் செய்யப்பட்ட பிரதி அமைச்சர் அருந்திக பெர்னாண்டோவும் கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் சந்திம வீரக்கொடி, முன்னாள் பிரதி அமைச்சர் அருந்திக பெர்னாண்டோவை அறிமுகம் செய்த விதம் குறித்தும் பலர் கவனம் செலுத்தினர்.

இது குறித்து அமைச்சர் சந்திம வீரக்கொடியிடம் வினவப்பட்ட போது, "அவர் அரசாங்கத்தை மாற்றப் போவதாக கூறிக்கொண்டு சென்றார். மீண்டும் வந்துள்ளார். அவர் எமது கட்சியைச் சேர்ந்த ஒருவர் தானே. அமைச்சுப் பதவியொன்று அவருக்கு மீண்டும் வழங்கப்படுமா? என்பது குறித்து என்னால் இப்போதைக்கு கூற முடியாதுள்ளது" என கூறியுள்ளார். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 70 | 90 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 110 | 140 | 95 | 110 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 160 | 250 | 160 | 120 | 200 | 300 |
| தக்காளி | 200 | 250 | 120 | 200 | 240 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 100 | 40 | 80 | 60 | 70 |
| கோவா | 60 | 120 | 50 | 80 | 80 | 80 |
| கரட் | 120 | 250 | 100 | 130 | 160 | 70 |
| பூசணி | 40 | 30 | 30 | 40 | [illegible] | 30 |
| புடோல் | 120 | 100 | 40 | 80 | [illegible] | 70 |
| வாழைக்காய் | 100 | 100 | 70 | 80 | 120 | 100 |
| சின்ன வெங்காயம் | 140 | 300 | 150 | 320 | 300 | 250 |
| பெரிய வெங்காயம் | 130 | 150 | 110 | 140 | 160 | 140 |
| பாகற்காய் | 200 | 250 | 120 | 160 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 50 | 100 | 50 | 60 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 70 | 120 | 120 | 70 |
| பயற்றங்காய் | 160 | 100 | 80 | 100 | 160 | 100 |
| லீக்ஸ் | 100 | 140 | 30 | 120 | 150 | 120 |
| பீற்றூட் | 40 | 30 | 40 | 50 | 80 | 40 |
| கறிமிளகாய் | 100 | 200 | 70 | 130 | 160 | 140 |
| முருங்கைக்காய் | 80 | 10-20 | 50 | 50 | 80 | 100 |
| இஞ்சி | 200 | 250 | 120 | 160 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 80 | 700 | 60 | – | 100 | 100 |
| கீரை – 1 பிடி | 40 | 30 | 30 | 40 | 30 | 30 |
| தேசிக்காய் | 320 | 250 | 200 | 300 | 400 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 70 | 80 | [illegible]-100 | 60 |
| இராசவள்ளி | 300 | 500 | 250 | 280 | 500 | 300 |
| வெங்காயப்பூ | 220 | 200 | 150 | – | 200 | 300 |
| முள்ளங்கி | 80 | 100 | 20 | 70 | [illegible] | 50 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 30 | 50 | 40 | 30 |
| வல்லாரை | 10 | 20 | 15 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 50 | 50 | 20 | 40 | [illegible] | 30 |

# இப்போது உங்களுக்கு மகிழ்ச்சியா? மங்களவிடம் கேட்ட ஜனாதிபதி

இதோ நான் காணாமல் ஆக்கப்பட்டோர் சம்பந்தமான செயலகத்தை ஸ்தாபிக்கும் வர்த்தமானி அறிவித்தலில் கையெழுத்திட்டு விட்டேன். தற்போது உங்களுக்கு மகிழ்ச்சியா? என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மங்களவிடம் கேட்டதாக ஜனாதிபதி செயலகத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதி செயலகத்தில் கடந்த 12ஆம் திகதி நண்பகல் 'இந்த அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் கையெழுத்திட்டார். இந்த நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோரும் கலந்துகொண்டனர்.

அதேவேளை வர்த்தமானி அறிவித்தலில் ஜனாதிபதி கையெழுத்திடும் போது, இனி மங்களவிற்கு நித்திரை வரும் என சிரித்தவாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். தேசிய ஒருமைப்பாடு மற்றும் மறுசீரமைப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி இந்த வர்த்தமானி அறிவித்தலில் கையெழுத்திட்டுள்ளார்.

குறித்த, சட்டமூலத்தில் உள்ள ஏற்பாடுகளுக்கு அமைய இன்று முதல் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான செயற்கை நடைமுறைகள் அமுலுக்கு வரவுள்ளதாக வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# காணாமல் போனோர் விவகாரத்தில் ஜனாதிபதி மைத்திரி செய்வது தவறு

## பாக்கியசோதி சரவணமுத்து அதிருப்தி

(கொழும்பு)

19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் கீழ் காணாமல்போனோர் தொடர்பில் விசாரணை செய்யும் அலுவலகத்தை நல்லிணக்க அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொறுப்பேற்க முடியாது. அரசியலமைப்புக்கு முரணாக இந்த அலுவலகம் அமைக்கப்படுமாயின் எதிர்காலத்தில் அதன் செயற்பாடுகள் தொடர்பில் அதிருப்தி அடைவோர் நீதிமன்றம் சென்று, வழக்கு தொடுக்கக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளமையே தமக்கு உள்ள அச்சம் என மாற்றுக் கொள்கைக்கான ஆய்வு நிலைய நிறைவேற்றுப் பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர், காணாமல் போனோர் தொடர் பான அலுவலகை சட்டமூலம் ஒரு வருடத்திற்கு முன்னர் கொண்டுவரப்பட்டது. அமைச்சொன்றுக்கு வழங்குவதற்கு ஒரு வருடம் சென்றது.

இவ்வாண்டு ஜூலை மாதம் ஜனாதிபதி, நல்லிணக்க அமைச்சர் என்ற வகையில் தனது அமைச்சிற்கு அதனை பாரமெடுத்தார். அவ்வாறு பாரப்படுத்தப்பட்ட பின்னர் அதன் நடைமுறைப்படுத்தும் தினம் குறித்து அறிவிக்கப்பட வேண்டும்.

இவ்வாண்டு ஜூலை மாதம் நாம் அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தோம். அதன் ஊடாக நாம் தெரியப்படுத்தியிருந்தோம். எமக்கு தெரிந்த வகையில் 19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் கீழ் எந்த எந்த அமைச்சை ஜனாதிபதி பொறுப்பேற்க முடியும் என்பது தொடர்பில் அதில் தெளிவாக கூறப்பட்டுள் ளது. பாதுகாப்பு, சூழல் மற்றும் மகாவலி போன்ற அமைச்சுக்களையே ஜனாதிபதி வைத்திருக்க முடியும் என அதில் கூறப்பட்டுள்ளது.

நல்லிணக்கம் குறித்து எந்தவொரு கருத்துக்களும் 19 ஆவது திருத்தத்தில் வெளியிடப்படவில்லை. அவ்வாறாயினும் தற்போது இறுதி வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஜனாதிபதியின் கீழ் அமைச்சர் என்ற வகையில் நல்லிணக்க அமைச்சிற்கே இந்த அலுவலகம் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

எனினும் 19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் கீழ் ஜனாதிபதிக்கு அந்த அமைச்சை பொறுப்பேற்க முடியாது என எமது அறிக்கையில் நாம் தெரியப்படுத்தியுள்ளோம்.

மூன்று அமைச்சுக்களை மாத்திரமே எடுக்க முடியும் என தெளிவாக கூறப்பட்டுள்ளது தானே? காணாமல் போனோர் அலு வலகத்தை அமைப்பதை நாம் மிகவும் வரவேற்கின்றோம். இந்த அலுவலகத்தை அமைப்பதற்கு மனித உரிமைகள் தொடர்பிலும் பாதுகாப்பு தொடர்பிலும் பாரிய பங்களிப்பை நாம் வழங்கியுள்ளோம்.எமது அச்சம் இதுவே.

இவ்வாறான அரசியலமைப்பிற்கு எதிராக இந்த அலுவலகம் அமைக்கப்படுமாயின் நாளை, நாளை மறுதினம், ஒருவருடத்தில், மூன்று வருடங்களில் அல்லது ஐந்து வருடங்களில் இந்த அலுவலகம் சரியாக செயற்படும் போது அதன் செயற்பாடுகள் தொடர்பில் ஒருவருக்கு விரும்பம் இல்லை ஆயின் அவர்கள் நீதிமன்றம் சென்று, இந்த அலுவலகம் சரியான முறையில் அமைக்கப்பட்டுள்ளதா என தீர்ப்பொன்றை வழங்குமாறு கோர முடியும்.



இல்லாவிடின் அரசியலமைப்பு முரணாகவா? எதிராகவா? அமைக்கப்பட்டுள்ளது என நீதிமன்றத்தை கேட்க முடியும். காணாமல் போனோர் தொடர்பாக விசாரணை செய்யும் அலுவலகத்தை அமைப்பது மிகவும் முக்கியமானது.

எனினும் அரசியலமைப்பின் பிரகாரம் செயற்படுத்துங்கள் என்றே நாம் கூறுகின்றோம். சரியாக செய்யுங்கள். அவ்வாறு செய்யும் பட்சத்தில் எந்தவொரு பிரச்சினையும் வராது.

யாருக்கும் எந்த சந்தேகமும் எழாது.எதிர்காலத்தில் இந்த காரியாலயம் சரியாக செயற்பட முடியும். நல்லிணக்கம் தொடர்பில் எந்தவொரு தடையும், பாதிப்பும், சந்தேகமும் பிரச்சினையும் இல்லாமல் சிறந்த செயற்பாடுகளை இதன் ஊடாக செய்ய முடியும் எனவும் தெரிவித்தார். (இ-7)

## பிக்குகள் விடயத்தில் தேவையில்லாமல் மூக்கை நுழைக்க வேண்டாம்!

### பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு சிங்கள ராவய பகிரங்க எச்சரிக்கை

தேவையில்லாமல்மூக்கை நுழைத்து இந்த நாட்டிலுள்ள பௌத்த பிக்குகளை நிந்தனை செய்யும் நடவடிக்கையில் ஈடுபட வேண்டாம் என ரஞ்சன் ராமநாயக்கவுக்கு நாம் ஞாபகமூட்டுகின்றோம் என்று சிங்கள ராவய அமைப்பின் பொதுச் செயலாளர் மாகல்கந்தே சுதந்த தேரர் பகிரங்க எச்சரிக்கை விடுத்தார்.



அவ்வாறு செய்வீர்களாக இருந்தால், இந்நாட்டில் பௌத்த பிக்குகள் யார் என்பதை காட்டுவதற்கு சந்தர்ப்பம் உருவாகும் எனவும் தேரர் கடுமையாக எச்சரித்தார்.

பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க மகிந்த ராஜபக்ஷவுடன் சேர்ந்து அரசாங்கத்துக்கு எதிராக செயற்படும் பௌத்த பிக்குகளை நிந்திக்கும் வகையில் கருத்து தெரிவிக்கிறார் எனவும் தேரர் ஆவேசமாக கூறினார்.(இ-7)



## பிக்குகளை நிந்திப்பவர்கள் துரோகிகளாம்

### -அஸ்கிரிய பீட பதிவாளர்-

(கொழும்பு)

ஜனாதிபதிபௌத்தசாசனத்துக்கான தனது நடவடிக்கைகளை முன்னெடுக்க ஆரம்பித்துள்ள வேளையில் அரசாங்கத்திலுள்ள பல்வேறு தரப்பினரால், பௌத்த மத போதகர்களை நிந்தனை செய்யும் வகையில் அறிவிப்புக்கள் விடுக்கப்படுவது கண்டிக்கத்தக்க ஒன்றாகும் என அஸ்கிரிய பீட பதிவாளர் மெதகம தம்மாரத்ன தேரர் தெரிவித்தார்.

பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க கடந்த செவ்வாய்க்கிழமை பௌத்த மத குருக்களை நிந்திக்கும் வகையில் தெரி வித்த கருத்துக்கு மறுப்புத் தெரிவித்து, தேரர் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தார்.

அரசியலில் அல்லாது வேறு துறைகளில் பிரபலம் அடைந்தவர்கள், அரசியலில் பிரவேசித்து, எமது நாடு தொடர்பில் எந்தவித பற்றும் இன்றி, நாட்டு மக்களுக்கு மாறுபட்ட உணர்வுகளை ஊட்டும் விதத்தில் பௌத்த பிக்குகளை நிந்தித்து கருத்துத் தெரிவித்து வருகின்றனர். இது தவறான ஒன்றாகும்.



மத நிந்தனை செய்து கொண்டு அரசியலில் ஈடுபடும் இதுபோன்ற நபர்களை, பொறுப்பற்ற சமூக விரோதிகளை, அரசியலில் ஈடுபடுத்துவது அரசியல் தலைவர்கள் செய்யும் பிரதான தவறாகவே நாம் பார்க்கின்றோம் எனவும் தேரர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## மாமன்றத்தின் நூல்வெளியீட்டு விழா

(கொழும்பு)

அகில இலங்கை இந்து மாமன்றத்தால் நடத்தப்படும் இரண்டு நூல்களின் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை மாலை 4.30 மணி முதல் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் மாமன்றத் தலைவர் கந்தையா நீலகண்டன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் மேல் மாகாண ஆளுநர், கே.சி. லோகேஸ்வரன் பிரதம விருந்தினராகவும், ஜனாதிபதி சட்டத்தரணியும் மாமன்றத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைத் தலைவருமாகிய கனகநாயகம் கனகஈஸ்வரன் கௌரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பிப்பர்.

திருமதி திலகா விஜயரட்னம் இந்துசமய கோட்பாடுகளின் தத்துவங்கள் பற்றி ஆங்கிலமொழியில் விரிவாக எழுதியுள்ள "SOME ASPECTS OF HINDUISM" என்னும் நூல் வெளியிடப்படும். இந்நூல் தொடர்பான ஆய்வினைCeylon Today பத்திரிகையின் செய்தி ஆசிரியர் ஆனந்த் பாலகிட்ணர் நிகழ்த்துவார்.

இந் நிகழ்வின் இரண்டாவது நூலாக திருமலை நவமின் ஆய்வு முயற்சியில் உருவான, திருமலை மண்ணின் வரலாறு, திருக்கோணேஸ்வரம், கன்னியா வெந்நீரூற்று, காங்குவேலி அகத்தியர் ஸ்தாபனம் ஆகியவை தொடர்பான ஆராய்ச்சிக்கட்டுரைகள் உள்ளடங்கிய "இராவணதேசம்" என்னும் நூல் வெளியிடப்படும்.

இந்நூல் தொடர்பான ஆய்வினை, மாமன்ற உபதலைவரும், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவருமாகிய கலாநிதி செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் நிகழ்த்துவார்.(இ-7)

## சுற்றாடல் முன்னோடிகளுக்கு ஜனாதிபதி பதக்கம் வழங்கல்

(கொழும்பு)

சுற்றாடல் முன்னோடிகளுக்கு ஜனாதிபதி பதக்கம் வழங்கும்நிகழ்வு ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி இணைந்து தேசிய சுற்றாடல் முன்னோடித் திட்டத்தை பாடசாலைகளில் அமுல்படுத்துகிறது.

ஏழாவது தடவையாக நடைபெற்ற பதக்கம் அளிப்பு நிகழ்வில் 9 மாவட்டங்களை



மாளிகையில் நடைபெற்றது.

எதிர்கால பிரஜைகளை சுற்றாடல் நேயமிக்கவர்களாக சமூகத்தில் உருவாக்கி சுற்றாடல் மரபுரிமையை அடுத்த தலைமுறையினருக்கு வழங்கும் நோக்குடன் மத்திய சுற்றாடல் அதிகார சபை, கல்வி அமைச்சுடன் சேர்ந்த 16 பாடசாலைகளிலிருந்து 40 சுற்றாடல் முன்னோடிகள் ஜனாதிபதி சுற்றாடல் முன்னோடிப் பதக்கங்களை பெற்றுக்கொண்டனர். விசேட திறமையை வெளிப்படுத்திய பாடசாலைகள்மற்றும் ஆசிரியர்களும் நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர்.(இ-7)

## தவறவிட்ட பொருட்களை ஆதாரம் காட்டிப்பெறலாம்

(யாழ்ப்பாணம்)

2017 ஆம் ஆண்டுக்கான தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய உற்சவ காலத்தின் போது பக்தர்களால் தவறவிடப்பட்ட கைக்கடிகாரங்கள், அடையாள அட்டைகள், கைத்தொலைபேசிகள், சைக்கிள் திறப்புகள், கைப்பைகள்போன்றன பிரதேச செயலக உற்சவ காலப் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டன. அவற்றை பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் அலுவலக நேரத்தில் உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம் என பருத்தித்துறை பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார். (இ)

# சட்டமா அதிபருக்கு அழைப்பாணை



(கொழும்பு)

'சில் ஆடை' விநியோக வழக்கில் நீதிமன்றத்தினால் குற்றவாளிகளாக தீர்ப்பளிக்கப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் அனுஷ பெல்பிட்ட ஆகியோரை பிணையில் விடுவிக்குமாறு கோரி முன்வைக்கப்பட்டுள்ள மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

குறித்த மனு விசாரணை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்க முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளபபட்டது.

அதன்படி குறித்த மனு தொடர்பில் சட்டமா அதிபர் மற்றும் குற்றப் புலனாய்வு பிரிவின் பணிப்பாளர் ஆகியோரை எதிர்வரும் 20ஆம் திகதி நீதிமன்றம் முன்னிலையில் ஆஜராகுமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்வி ஆணைக்குழு (TVEC) ஆலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்

Professional IT Courses

- Dip.in Information Technology
- Diploma in Office Automation
- Dip. in Pre-Press Desktop Publicating
- Diploma in Pc Applications
- Adv. Dip. in Hardware & Networking
- Dip. in Video Production & Multimedia
- Dip.in Web Designing & Development
- Dip. in Computerized Accounting
- Dip.in Auto CAD
- JAVA, C#, C++, php

Diploma in English

ஆங்கிலப் பேச்சுக்கு உத்தரவாதம்

பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான

SPOKEN ENGLISH

ஆங்கிலக் கல்வி

CERTIFICATE IN

SPOKEN SINHALA

LEVEL 01 Duration 3 Months ,LEVEL 02 Duration 3 Months

புதிய பிரிவு ஆரம்பம்

➧ பிரிவு 3 - 16/09/2017 (Sat) 9:30 a.m. OR 3:30 p.m.

➧ பிரிவு 4 - 18/09/2017 (Mon) 9:30 a.m. OR 3:30 p.m.

DMI COMPUTER EDUCATION

☑ அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்.

☑ Microsoft Online பரீட்சைகளுடாக Microsoft - அமெரிக்காவில் இருந்து தலைமை செயலதிகாரியின் கையொப்பத்துடனான Microsoft Specialist சான்றிதழ்கள்.

☑ இலகு தவணைக்கட்டண வசதிகள் ☑ இங்கிலாந்து, இந்திய பாடநூல்கள்.

அங்கீகரிக்கப்பட்ட முழுமையானதும் தரமானதுமான கல்விக்கு

DMI COMPUTER EDUCATION


| No.113, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403 | M.M.V.வீதி நெல்லியடி Tel.: 021-226 2470 | No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் சாவகச்சேரி Tel.: 021-227 0775 | No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் சுன்னாகம் Tel.: 021-224 1970 | No.19,A9 வீதி, கிளிநொச்சி Tel.: 021-228 5655 |
|---|---|---|---|---|

(சி-9643)


# மரண அறிவித்தல்

## திரு. சின்னத்தம்பி சிற்றம்பலம்

(இளைப்பாறிய அதிபர், யா/ ஞானசாரியர் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்)



பிறப்பு: 1941.11.02

இறப்பு: 2017.09.12

யாழ். கரவெட்டி கிழக்கு, கோவில் சந்தையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத் தம்பி சிற்றம்பலம் அவர்கள் கடந்த (12.09.2017) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி செல்லமுத்து தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான சின்னையா பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், புவனேஸ்வரி அவர்களின் பாசமிகு கணவரும், ஜோதிரவி (இலங்கை), மலைமகள்(லண்டன்), ஜோதிகரன்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான கண்ணகை, சிதம்பரநாதன், சிவக்கொழுந்து மற்றும் சிவபாக்கியம், சின்னம்மா, கந்தப்பு, தாமோதரம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், புஸ்பலதா, அசோகன் ஆகியோரின் அன்பு மாமனாரும், முருகேசு, திலகராணி காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், கணபதிப்பிள்ளை, இராஜசிங்கம் மற்றும் இன்பவதி, ஜெகதீஸ்வரதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற நாகேஸ்வரி அவர்களின் பாசமிகு அத்தானும், மகாலிங்கம் அவர்களின் அன்புச் சகலனும், சகான், சகானியா, ஆரபி, அபிநயா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (16.09.2017) சனிக்கிழமை அவரது இல்லத்தில் காலை 9.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரவெட்டி வேருண்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

புவனேஸ்வரி சிற்றம்பலம் (மனைவி) 077 944 0054

சி.ஜோதிரவி 077 995 9382

(சி/9642)

தகவல்: குடும்பத்தினர்.

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1190

Search for people, places and things — Nagendram Home

விதுசா





வரதன்




வாணன்




வேணி




சாந்தா




குலம்

கணவர் : இன்னிக்கு காலையில என்னம்மா டிபன் பண்ணி இருக்கிறாய்.

மனைவி : ரவை பிரியாணி

கணவர் : ரவை பிரியாணியா... வித்தியாசமா இருக்கே...

மனைவி : பின்னே உப்புமான்னு சொன்னா சாப்பிட மாட்டீங்களே

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தொலைக்காட்சி உலகில் மக்களை ஈர்த்த பிக்போஸ்




## Task சரியாக செய்யாததால் சிநேகனின் திடீர் மாற்றம்



பிக்போஸ் நிகழ்ச்சி இப்போதெல்லாம் பார்ப்போருக்கே பயமாக இருக்கிறது. ஒவ்வொரு டாஸ்கும் பயங்கர மாக இருக்கிறது. அதுவும் வீட்டில் முதல் நாளில் இருந்து இருப்பவர்கள் எல்லாம் எப்படி விளையாடுகிறார் கள் என்பது ரசிகர்களுக்கு பெரிய கேள்வியாக இருக் கிறது.

நிகழ்ச்சி ஆரம்பத்தில் இருந்து நான் கண்டிப்பாக ஜெயிப்பேன் என்று உறுதியாக இருந்து சிநேகன் அண்மையில் நடந்த சில விடயங்களால் 100 நாள் இருக்க வேண்டும் என்ற ஆசை போய்விட்டது என மனம் உடைந்து பிந்து மாதவியிடம் பேசுகிறார். இதைப் பார்க்கும் போது வீட்டில் பல பிரச்சினைகள் ஏற்படுமோ என்ற எண்ணத்தை ஏற்படுத்துகிறது.

## பிக்போஸிடம் மூன்று கேள்வி கேட்கனும்- பிரபல நடிகை



@sripriya 13h
@vijaytelevision ஐயா Bigg Boss உங்களை கொஞ்சம் நேர்ல பாத்து 3 கேள்வி கேக்கனும்... Taskukku readyaa bossu?

sripriya
@sripriya
Follow

My questions are about the entire show so far.
11:53 PM - Sep 13, 2017
65 10 351

பிக்போஸ் நிகழ்ச்சியில் தொடர்ந்து சர்ச்சைகளுக்கு பஞ்ச மில்லாமல் சென்றுகொண்டிருக்கிறது. தற்போது இறு திக்கட்ட போட்டிகள் கடுமையாக நடந்து வருகிறது.

இந்நிலையில் தற்போது நடிகை ஸ்ரீபிரியா பிக் போஸை நேரில் சந்தித்து 3 கேள்வி சேட்கவேண்டும் எனக் கூறியுள்ளார்.

இதுவரை நடந்துள்ள நிகழ்வுகள் பற்றிய கேள்விகள் அது என மேலும் அவர் தெரிவித்துள்ளார். என்ன கேள்வி என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

## சிநேகனுக்கு ஆதரவாக பேசிய முன்னாள் பிக்போஸ் போட்டியாளர்



Actress Harathi
@harathi_hahaha
Follow

Not fair both must be given points... Snehan bro must also share victory.. both had support... BB team I'm upset!!! Both must share points
10:25 PM - Sep 13, 2017
335 110 1,233

சிநேகன், சுஜா இடையே நடந்த போட்டியில் சிநேகன் ஏமாற்றினார் என கூறி அவர் தோற்றதாக அறிவிக்கப் பட்டது.

காரின் ஓரத்தில் அவர் கால் உரசியதற்காக இப்படி செய் தது சரியில்லை என நடிகை ஆர்த்தி தெரிவித்துள்ளார். சுஜா, சிநேகன் ஆகிய இருவருக்கும் புள்ளிகளை பகிர்ந் தளித்திருக்கவேண்டும் என அவர் மேலும் கூறியுள்ளார்.

நான் இந்த வாரத்தோடு பிக்போஸ் வீட்டில் இருந்து வெளியேறுகிறேன் என சிநேகன் கூறியது குறிப்பிடத் தக்கது.

## 10 புள்ளிக்காக சிநேகன், சுஜாவிடம்வெடித்தது சண்டை




பிக்போஸ் நிகழ்ச்சி இறுதிக் கட்டத்தில் உள்ளதால் போட்டி கடுமையாக நடந்துவருகிறது. ஒரு காரில் போட்டியாளர் கள் அமர்ந்து செல்லவேண்டும் என ஒரு போட்டி நடத்தப் பட்டது. கடைசியாக இருப்பவருக்கு 10 பொயிண்ட் கொடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

இறுதியில் சுஜா, சிநேகன், கணேஷ் ஆகியோர் இருந் தனர். அப்போது யார் வெளியேறுவது என சுஜா-சிநே கன் இடையே சண்டை வெடித்தது. அதை பார்த்த கணேஷ் நான் போகிறேன் என வெளியேறிவிட்டார்.

சுஜா, சிநேகன் ஆகியோர் ஒருநாள் இரவு, பகல் முழுவதும் காரிலேயே இருந்தனர். இதில் சுஜா வெற்றி பெற்றுள்ளார் என்று பிக்போஸ் அறிவித்தார்.


## நீங்கள் எப்படி என்னைப் பார்த்து அப்படியொரு வார்த்தை கூறலாம் காயத்திரியிடம் கேள்விகேட்ட சுஜா?



பிக்போஸ் வீடு இப்போது கலவர வீடாக மாறும் சூழ் நிலையில் உள்ளது. கடுமையான போட்டிகள் வர வர போட்டியாளர்கள் இடையில் பிரச்சினைகள் வெடித்துக் கொண்டே வருகின்றன.

இந்த நிலையில் தற்போது புதிதாக வந்த புரொமோ வில் சுஜா, எதை வைத்து என்னை கலீஜ் என்று கூறி னீர்கள் எனக்கு பதில் சொல்லுங்கள். நான் நேரில் வந்து கேட்க தயாராக இருக்கிறேன், நீங்கள் தயாராக இருங் கள் என்று கூறியுள்ளார்.

## சுஜாவை ஏமாற்றிய சிநேகன்



பிக்போஸ் நிகழ்ச்சியில் இறுதிக்கட்ட போட்டிகள் கடுமை யாக நடந்துவருகிறது. போட்டியாளர்கள் காரில் இருக்க வேண்டும் என்று டாஸ்க் கொடுக்கப்பட்டது.

இறுதிவரை சுஜா மற்றும் சிநேகன் ஆகியோர் போட் டியில் இருந்தனர். ஒற்றை காலில் நிற்கவேண்டும் எனக்கூறப்பட்டது. அப்போது சிநேகன் காலை கார் மீது வைத்தார் என கணேஷ் குற்றம்சாட்டினார்.

இதனால் கணேஷ்-சிநேகன் இடையே வாக்குவாதம் நடந்தது. நான் இப்படி ஏமாற்றி தான் ஜெயிக்கவேண் டும் என்கிற அவசியமில்லை என சிநேகன் நீண்ட நேரம் கூறிக்கொண்டிருந்தார். ஆனால் இறுதியில் சுஜா வென்றதாக இறுதியில் அறிவிக்கப்பட்டது அவருக்கு அதிர்ச்சியாக இருந்தது.

நான் 20 மணி நேரத்திற்கும் மேல் போராடி போட் டியில் விளையாடினால் ஏமாற்றினேன் என கூறுவது பொறுத்துக்கொள்ள முடியாது என சிநேகன் பின்னர் கதறி அழுதார்.

அப்படி இந்த வீட்டில் இருக்க வேண்டிய அவசியமில்லை. நான் இந்த வாரம் கமல் சேர் வந்தவுடன் கூறிவிட்டு கிளம்புகிறேன் எனக் கூறினார்.

# உள்ளூராட்சித் தேர்தல் முறை தொடர்பாக சிறுபான்மையினக் கட்சிகளினதும் சிறு கட்சிகளினதும் நிலைப்பாடுகள்

நடைமுறையில் இருந்த விகிதாசார/ விருப்பு வாக்கு முறைத் தேர்தலில் சிறுபான்மையின மக்களும் சிறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள், உள்ளூராட்சிச் சபைகளில் குறிப்பிடத்தக்களவில் நாடு தழுவிய நிலையில் அங்கத்துவம் பெற்றிருந்தனர். இத்தேர்தல் முறையில் குறித்த உள்ளூராட்சிப் பிரதேசம் முழுவதும் ஒரு தேர்தல் தொகுதியாக இருக்கும். மேலும் வாக்காளர்கள் கட்சிக்கும் மற்றும் மூன்று விருப்பு வாக்குக்களை அளிக்க வேண்டும். மூன்று விருப்பு வாக்குகளை ஒருவருக்கோ அல்லது இருவருக்கோ அல்லது மூவருக்கோ போட முடியும். கட்சிகள் பெற்ற வாக்குகள் அடிப்படையிலும் அங்கத்தவர்கள் பகிரப்படுவர். கட்சிகளுக்குள் கிடைத்த அங்கத்தவர்கள் பின்னர் அபேட்சகர்கள் பெற்ற விருப்பு வாக்கு அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர். இந்த முறையில் உள்ளூராட்சி சபைகளுள் பரவலாக சிறுவிகிதாசார வாக்கு வங்கிகளைக் கொண்ட சிறு கட்சிகள் தங்கள் வாக்கு வங்கிக்கு ஏற்ப அங்கத்தவர்களைப் பெற்றனர். பெற்ற ஒன்று இரண்டு அங்கத்தவர்கள், உள்ளூராட்சி சபையின் முழுப் பிரதேசத்தையும் பிரதிநிதித்துவம் செய்யக்கூடியதாக இருந்தது. மேலும் சில சிறு கட்சிகள் பெரிய கட்சிகளுடன் இணைந்து தேர்தலில் போட்டியிட்டும் தங்களின் விருப்பு வாக்குகளை தங்கள் கட்சிகளுக்கு பயன் கிடைக்கக்கூடிய முறையில் பாவித்து உண்மை நிலையிலும் பார்க்கக்கூடிய அங்கத்தவர்களையும் பெற்றிருந்தனர். இதே மாதிரி சிறுபான்மையினக் கட்சிகளும் குறிப்பாக தென்னிலங்கையில் உள்ளூராட்சி சபைகளில் பிரதிநிதித்துவம் பெற்றிருந்தனர்.

கடந்த அரசாங்கம் கலப்பு தேர்தல் முறையை அறிமுகம் செய்த போது70:30 முறைக்கு அடிப்படையில் எதிர்ப்பு இருக்கவில்லை. வட்டார முறை தேர்தல்களின் நன்மைகளையும் விகிதாசார தேர்தல் முறை நன்மைகளையும் பெறுவது நல்லதெனக் கருதப்பட்டது. விகிதாசார தேர்தல் முறை நல்லதாக இருப்பினும் விருப்புவாக்குமுறை கட்சிக்குள் பெரும் பிரச்சினைகளை உருவாக்குவதாக அமைந்ததால் விருப்பு வாக்குமுறை நீக்கப்படவேண்டும் என்பதில் உடன்பாடு எட்டப்பட்டது.

2015 இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர் இரண்டு பிரச்சினைகள் மீளவும் எடுக்கப்பட்டன.

வட்டார நிர்ணயம் ஒழுங்காகச் செய்யப்படாது ஒரு கட்சி நலனே முன்னெடுக்கப்பட்டதென்ற குற்றச்சாட்டை முன்வைத்து வட்டார நிர்ணயம் மீளாய்வுக்குட்படுத்த வேண்டும். இக்கோரிக்கை ஏற்கப்பட்ட மீளாய்வுக்குழு நியமிக்கப்பட்டது.

கலப்புத் தேர்தலில் 70 வீத வட்டாரங்கள் அடிப்படையில் அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்படுவர். வட்டார அடிப்படையில் தெரிவு செய்யப்படும் அங்கத்தவர்களின் எண்ணிக்கையில் 30 வீதத்தினர் விகிதாசார முறையில் நியமிக்கப்படுவர். இதனால் மொத்த அங்கத்தவர்களில் 30 வீதம் என்று இல்லாமல் வட்டார அடிப்படையில் தெரிவு செய்யப்படும் அங்கத்தவர்களின் 30 வீதமாக இருந்த குறை சுட்டிக்காட்டப்பட்டது. இக்குறைபாட்டினால் சிறு கட்சிகளும் சிறுபான்மைக் கட்சிகளும் 60:40, 50:50 தான் தீர்வாகும் என்ற நிலைப்பாட்டுக்கு அழுத்தம் கொடுத்தனர். வாதப் பிரதிவாதங்களின் பின்னர் 60:40 என்ற நிலைப்பாட்டுக்கு அரசாங்கம் வந்து இதற்கான சட்டங்களும் இயற்றப்பட்டு விட்டன.

கடந்த அரசாங்கம் மேற்கொண்ட வட்டார நிர்ணயம் மிகவும் கட்சி அரசியல் சார்பான தென்றும் இதனால் வட்டாரம் மீளாய்வுக்குட்படுத்த வேண்டுமென்ற நிலைப்பாட்டில் எல்லாக் கட்சிகளும் உடன்பட்டன.இதற்காக மாகாண உள்ளூராட்சி அமைச்சர் அசோக பீரிஸ் தலைமையில் ஐவர் அடங்கிய குழுவை நியமித்தது. இதில் பேராசிரியர் பாலசுந்தரம் பிள்ளை, திருவாளர்கள் ஏ.எஸ்.எம். பிஸ்வா, உடுள் குமாரப்பெரும, சி.என்.எஸ். சூலியா, விமலசூரிய, மத்தியூ ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். இக்குழு வட்டார எல்லைகளை மீளாய்வு செய்த போது குறிப்பாக இலங்கைத் தமிழர், முஸ்லிம்கள், மலையகத் தமிழர் மற்றும் ஏனைய சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்ய கடும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதற்காக் அச்சு இலத்திரன் ஊடகங்கள் மூலம் மக்களுக்கு விழிப்புணர்வு கொடுக்கப்பட்டு மக்களை வலுப்படுத்தும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. கட்சிகள், நிறுவனங்கள், சபைகள், சங்கங்கள், சிவில் சமூகத்தினர், பொதுமக்கள், தனியன்கள் எனப் பல பிரிவினரிடம் இருந்து கருத்துக்கள், கோரிக்கைகள் வந்தன.

சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவத்தை இலகுபடுத்தவே இரட்டை அங்கத்தவர்கள் வட்டாரங்கள், மூன்று அங்கத்தவர்கள் வட்டாரங்கள் அறிமுகம் செய்யப்பட்டன. இம்முறை முன்னர் உள்ளூராட்சித் தேர்தலில் இருக்கவில்லை. சிறுபான்மையினர் நன்மைக்காக உருவாக்கப்பட்ட இரட்டை அங்கத்தவர் வட்டாரங்கள் அரசியல் கட்சிகள் தாங்கள் பிரதிநிதித்துவத்தை பெற முயற்சித்துள்ளன. கொழும்பு மாநகர சபையில் கறுவாக்காட்டு வட்டாரத்தை இரட்டை அங்கத்தவர் வட்டாரம் மாற்றப்பட்டிருந்தது. கறுவாக்காட்டில் மிகப்பெரும்பான்மையாக சிங்களவர்களே வாழ்கின்றனர். தமிழர், முஸ்லிம்களின் விகிதாசாரம் இவ்வட்டாரத்தில் மிகக் குறைவு. பின்னர் ஏன் இவ் வட்டாரத்தை இரட்டை அங்கத்தவர் வட்டாரமாக உருவாக்கினர். கறுவாக்காடு ஐக்கிய தேசியக் கட்சியின் கோட்டை. இவ்வட்டாரத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அல்லது மக்கள் முன்னணி வெல்லவே முடியாது. இச்சூழ்நிலையில் கறுவாக்காட்டை இரட்டை அங்கத்தவராக்கினால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு அடுத்த இடத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வரும். இதனால் இருகட்சிகளும் தலா ஒவ்வொரு ஆசனத்தைப் பெறும். கறுவாக்காடு போல பல இடங்களில் இரட்டை அங்கத்தவர்கள் வட்டாரங்கள் கட்சி நலன் அடிப்படையில் உருவாக்கப்பட்டிருந்தன.

வட்டாரங்களை மீளாய்வு செய்ய முற்பட்ட வேளையில் குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியினரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரும் இரட்டை அங்கத்துவ வட்டாரங்களை உடைத்து தனித்தனி வட்டாரங்களாக்குமாறு கோரிக்கை வைத்தனர். இதற்காக கடும் அழுத்தம் கொடுக்கப்பட்டது. இதற்கு முக்கிய காரணம் அன்று இருந்த தேர்தல் விதிப்படி இரட்டை அங்கத்தவர்களின் வட்டாரத்தில் ஒரு கட்சி ஒரு அபேட்சகரையே நியமிக்கமுடியும் என்று இருந்தது. இந்நிலையில் இரட்டை அங்கத்தவர் வட்டாரத்தை உடைத்து தனித்தனி வட்டாரங்களாக மாற்றினால் ஒரு கட்சியைச் சேர்ந்த இருவர் போட்டியிடலாம் என்பதே பிரதான நோக்கமாக இருந்தது. வட்டாரங்கள் மீளாய்வு செய்த தன் பின்னர் இரட்டை அங்கத்தவர்களின் வட்டார எண்ணிக்கை 241 இல் இருந்து 149 ஆகக் குறைந்தது. மூன்று அங்கத்தவர்கள் தெரிவு செய்யும் வட்டார எண்ணிக்கை 9 இல் இருந்து 4 ஆகக் குறைக்கப்பட்டது. பல அங்கத்தவர்கள் எண்ணிக்கை வட்டாரங்கள் குறைக்கப்பட்டது. சிறுபான்மை பிரதிநிதித்துவத்தை பாதிக்க இடம்கொடுக்கப்படவில்லை. தனித்தனி வட்டாரமாக பிரித்த பொழுதும் சம்பந்தப்பட்ட இரண்டு இனங்களும் அல்லது சமய சமூகப் பிரிவுகள் தங்கள் தங்கள் பிரதிநிதித்துவத்தை பெற வழி சமைக்கப்பட்டுள்ளது.

சிங்களப்பிரதேசங்களில்வாழும் இலங்கைத் தமிழர்கள், முஸ்லிம்கள், மலையகத் தமிழர்கள் தங்கள் உள்ளூராட்சி சமூக பிரதிநிதித்துவத்தை உறுதி செய்ய மாவட்ட மட்ட முதல் நிலை செயற்பாடுகளின் சரியான முறையில் செயற்படவில்லை. தங்கள் சமூக பிரதிநிதித்துவம் சார்பான ஆதாரங்கள், தரவுகள் நியாயப்பாடுகளை முன்வைப்பதிலும் சரியான தந்திரோபாயங்கள் கடைப்பிடிப்பதிலும் சிறப்பாகச் செயற்படவில்லை எனக் கருத முடிந்தது. மேலும் சகோதர இனங்களின் ஆதரவை பெறுவதிலும் ஈடுபாடு காட்டவில்லை. இரத்தினபுரி மாவட்ட கூட்டத்தில் மலையக மக்கள் பிரதிநிதி மிகவும் காத்திரமாக மலையக மக்கள் பிரதிநிதித்துவத்தை முன்னிறுத்திய போது பெரும்பான்மை சமூகப் பிரதிநிதிகளும் இவருக்கு ஆதரவாக குரல் கொடுத்தனர். இதுபோல் ஏனைய பல இடங்களில் செயற்பட்டிருந்தால் சிறுபான்மையினர் கூடிய பிரதிநிதித்துவத்தைப் பெற்றிருக்க முடியும்.



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு வெளியில் இலங்கைத் தமிழரில் 25% வாழ்ந்த பொழுதும் இவர்களின் பிரதிநிதித்துவத்தைப் பற்றி இலங்கைத் தமிழர் சார்பான கட்சிகள் முன்வைக்கவில்லை. தமிழர் மகாசபைத் தலைவர் கலாநிதி விக்னேஸ்வரன் புத்தளம், பொலநறுவை, களுத்துறை போன்ற பல மாவட்ட ஆலோசனை/கருத்தாடல் கூட்டங்களில் பங்குபற்றி தமிழர் பிரதிநிதித்துவத்தை பெற பாடுபட்டார். மலையக கட்சிகள் கூட நுவரெலியா, பதுளை மாவட்டங்களுக்கு அப்பால் மலையக மக்களின் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்ய எடுத்த முயற்சிகள் போதியதாக இருக்கவில்லை. காலி, மாத்தறை, குருநாகல், கேகாலை, மொனராகலை போன்ற மாவட்டங்களில் வாழும் மலையகத் தமிழர் பிரதிநிதித்துவம் குறித்து தமிழர் தரப்பில் இருந்து வந்த கோரிக்கைகள் மிகவும் குறைவாகவும் வலுச்சேர்ப்பதாகவும் அமையவில்லை. முஸ்லிம் கட்சிகள் கிழக்கு மாகாணத்தில் அதிக அக்கறை காட்டினார்கள். ஆனால்இலங்கையில்ஏனைய பகுதிகளில் வாழும் முஸ்லிம்கள் பற்றி சரியான தெளிவான கோரிக்கைகள் வைத்தது மிகக் குறைவு.

இத்தகைய பின்புலத்தில் இலங்கைத் தமிழர், முஸ்லிம்கள், மலையகத் தமிழர் மற்றும் பல சிறுபான்மையின பிரிவினரின் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்ய நான்கு முறைகள் கடைப்பிடிக்கப்பட்டன.

1.எங்கெங்கு ஒரு தனிவட்டாரமாக அமைக்கக் கூடிய நிலையில் இனப் பரம்பல் அமையுமிடத்து தனி வட்டாரங்கள் உருவாக்கப்பட்டன. இதன் மூலம் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், மலையகத் தமிழர், மலாயர், வேடர்,கபீர் மக்கள் வட்டாரப் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுள்ளனர்.

2. ஒன்றுக்கு மேற்பட்ட இன, மத மற்றும் சமூகக் குழுக்கள் கலந்தும் எண்ணிக்கையிலும் விகிதத்திலும் ஏறக்குறைய சமநிலைகள் காணப்படும் இடத்து பல அங்கத்தவர்கள் வட்டாரங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதனால் தென்னிலங்கைப் பகுதிகளில் இலங்கைத் தமிழரும் முஸ்லிம்களும் மலையகத் தமிழர்களும் நன்மை பெற்றுள்ளனர். திருகோணமலை, வவுனியா போன்ற இடங்களில் சிங்களவர் பிரதிநிதித்துவம் பெறும் சந்தர்ப்பங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

3. அண்மையான கிராம அதிகாரி பிரிவுகளில் சிறுபான்மையினர் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் வாழும் போது இவர்களை முடிந்தளவு ஒரு வட்டாரத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. குறித்த இவ் வட்டாரத்தில் சிறுபான்மையினர் வெற்றி பெற முடியாது போனாலும் வெற்றியை தீர்மானிக்கும் ஒரு சக்தியாக இருக்க முடியும். இவர்களின் பேரம் பேசும் ஆற்றலும் உயர்வாக இருக்கும். காலி, மாத்தறை, கேகாலை, மொனராகலை, இரத்தினபுரி, குருநாகல் போன்ற மாவட்டங்களில் மலையகத் தமிழர் நலன் கருதி இத்தகைய செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. காலி மாவட்டத்தில் ஒமாத்மா ஒப்பாத்தா, நிக்கதெனியா வட்டாரங்கள் இதற்கு சிறந்த உதாரணங்களாகும்.

4. வட்டார அடிப்படையில் தெரிவாகும் சந்தர்ப்பம் ஒரு சிறுபான்மை இனத்திற்கு இல்லாது இருக்கும் பொழுது அதே நேரத்தில் குறித்த சபையின் சனத்தொகையில் கொண்டு இருக்கும் விகிதாசாரத்திற்கு ஏற்ப குறித்த சிறுபான்மையினம் தமக்குரிய பிரதிநிதித்துவத்தை விகிதாசார முறையின் கீழ் பெற முயற்சிக்க வேண்டும். இதற்கு சமூக ஒற்றுமை, சமூக பலம், பேரம் பேசும் சக்தி, சிறுபான்மை மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளிடம் இருக்க வேண்டும்.

இன்றைய 60:40 கலப்புத் தேர்தல் முறை இலங்கை வாழ் சிறுபான்மை இன மக்களுக்கு முன்னர் இருந்த தனியான வட்டார முறையிலும் பார்க்கவும் பின்னர் இருந்த விகிதாசார, விருப்பு வாக்கு முறையிலும் பார்க்க பல் சிறப்பு, நல்ல அம்சங்களைக் கொண்டது. நாடு தழுவிய ரீதியில் பரவலாகவும் செறிவாகவும் வாழும் இலங்கைத்தமிழர், முஸ்லிம்கள், மலையக மக்கள் மற்றும் சிறுபான்மை சமூகத்தினருக்கு நல்லதாக இருக்கிறது என கருத பல காரணங்கள் உண்டு.

(தொடரும்)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# “கற்றது கைம்மண் அளவு, கல்லாதது உலக அளவு”-ஏடகம்

'கற்றது கைம்மண் அளவு, கல்லாதது உலக அளவு' என்பது பழமொழி. இன்றைய காலகட்டத்தில் அறிவை வளர்ப்பதற்காக யாரும் படிப்பதில்லை. அரசுவேலை, கைநிறைய சம்பளத்துடன் ஒருவேலை என்ற எண்ணத்துடனே படிக்கின்றனர். கோச்சிங் சென்டரில் சேர்ந்து பயிற்சி பெற்று அரசு தேர்வு எழுதி சித்தியடைந்ததும் அரசு வேலைக்கு சென்றுவிட்டால் அதன் பிறகு புத்தகத்தை புரட்டிப்பார்ப்பதே இல்லை. இதற்கு மாணவர்களுக்கு பாடம் போதிக்கும் ஆசிரிய, ஆசிரியைகளும் விதிவிலக்கின்றி இருப்பதுதான் வேதனை. படிக்கும் காலத்தில் மேல்நிலைக்கல்வியோ அல்லது பட்டப்படிப்பிலோ தேர்ச்சி பெற்றுவிட்டால் அதன்பின் மாணவர்கள் நமக்கும்,புத்தகத்துக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என கருதி விடுகின்றனர். இதுமிகப் பெரிய தவறு. கல்வி என்பது அழியாத செல்வம். கல்வி கற்க வயது ஒரு தடையல்ல.

வாழ்நாள் முழுவதும் கற்றுகொண்டே இருக்கலாம். இதையே வள்ளுவரும், “தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்கு கற்றனைத்தூறும் அறிவு” என தெரிவித்துள்ளார். “ஆளும் வளரணும்,அறிவும் வளரணும்” அதுதான் வளர்ச்சி. ஒருவேலை செய்ய வேண்டும் என்றால் அதற்கு சக்தி தேவை. அந்தவேலையை வெற்றிகரமாக செய்யவேண்டுமென்றால் அறிவுதேவை. அறிவு வளர அன்றாடம் நல்லபுத்தகங்களைவாசிக்க வேண்டும். ஒருமனிதன் ஆண்டுக்கு 2 ஆயிரம் பக்கங்களை படித்தால்தான் உலக நடப்புகளை ஓரளவுக்கு அறிந்த மனிதனாக (Informative man) கருதப்படுவதாக யுனெஸ்கோ கூறியுள்ளது. விஞ்ஞான உலகில் இன்று மாணவர்களிடமும்,மக்களிடமும் வாசிக்கும் பழக்கம் குறைந்துள்ளது. செய்தித்தாள்களை கூட தலைப்பை மட்டுமே பார்க்கின்றனர்.

இன்று அனைவரும் “நேரமில்லை” என்பதை காரணமாக கூறு கின்றனர். நேரத்தை திட்டமிட்டு நாள்தோறும் நூல்களை படிக்க வேண்டும். அறிவை விதைக்கும் களமாக பள்ளியும், அறிவை செம்மைப்படுத்தும் களமாக நூலகமும் விளங்குகிறது. நகமும், சதையும் போன்று இணை பிரியாதது நூலகமும் பள்ளியும்.

ஒரு நூலகம் கட்டுதல் என்பது காடமைப்பதற்கு சமம். காடு தோறும் வளர்ந்த மரங்களைப் போல் நூலகம் நிறைந்த புத்தகங்கள் ஒவ்வொன்றும் ஆயிரமாயிரம் சிந்தனையின் விதைகளைத் தாங்கிக் கொண்டுள்ளதை படிக்கப் படிக்கவே உணரமுடியும். படித்தலில் கிடைக்கும் அறிவு சாதுர்யமிக்கது. படித்தலில் வரும் தெளிவு வாழ்வை மிளிரவைக்கத்தக்கது. படிப்பவரால் தான் மனதுள் ஊக்கத்தை விதைத்துக் கொள்ளமுடிகிறது. அதிகம் புரிந்து, ஆழ்ந்து சிந்தித்து, சட்டென தெளிய, படிப்போரால் முடி



கிறது.

நடுத்தரத்தன்மையை மனதுள் நிலைக்கச் செய்தல் என்பது படித்தலால் கைவரப்படுவதை தொடர்ந்து படிப்போரால் அறியமுடிகிறது. விதைத்தால் விளையும் நிலம் போலபடிப்பினால் உதிக்கும் ஞானம் வெளியெங்கும் நன்மையின் வெளிச்சத்தைப் பரவச்செய்யும். மகிழ்ச்சியை எதுவென்று அறியக்கூடிய அறிவுக் கூர்மையை படிப்பு மேம்படுத்தும். அதன்பொருட்டாக நம்மவர் தாள், புத்தகங்களை கண்டறியும் முன்னரே ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாக சிந்தித்து ஓலையில் எழுதத் தொடங்கிய நமது முன்னோர்களையும் நாம் எடுத்துணரவேண்டும்.

படித்தலின் இன்றியமையாமையை பின்னோர் அறிய ஓலையிலேனும் எழுதிவைத்துச்சென்ற நமது முன்னோர்களின் பிரயத்தனத்திற்கு முன் புத்தகங்களை அடுக்கிவைத்துக்கொண்டு அதைப் பிரிக்காமலே கடந்து சென்றுவிடும் நாம், நம் நிகழ்கால நன்மையினை தொலைப்பதோடு மட்டுமில்லாது எதிர்கால சந்ததியினரின் வாழ்வியலையும் மாற்றியமைக்கின்றோம். படிப்பு என்பது வெறும் புத்தகத்தில் படிப்பதில் மட்டுமில்லை வாழ்க்கையின் சிறப்புகளை மனிதர்களின் மூலமும்,நன்மைதீமை விளைவுகளை அளவிட்டுப் பார்ப்பதிலும், நடப்புகளை அதனதன் போக்கில் கவனித்து வருவதன் மூலமும், இயற்கையை அகக்கண் திறந்து பார்ப்பதிலும், உள்ளே உற்று நோக்கி வெளியை இயக்கப் பழகுவதிலுமென, படிப்பென்பது அசைவதிலும்அசையாததிலுமாய்ஏகமாக இருந்தாலும், அந்த மொத்த படிப்பினைக்கான முதலுரத்தை இடுவது புத்தகங்களே.

புத்தர் வாசித்த ரிக் வேதத்திலிருந்து தான்,காற்று வழி உள்ளே பயணித்து கல்லுக்குள்ளும் இருக்கப்பெறும் கடவுளின் சக்தியை அறியமுடிந்தது. ஆராய்ந்து ஆராய்ந்து அறிவதற்கான முதல் புள்ளி புத்தகங்களிலிருந்து நமக்கு எளிதாக கிடைத்துவிடுகிறது. உலகம் முழுதும் சுற்றிவந்து எல்லா ஊரிலும் மண்ணெடுத்து அதை மொத்தமாக கலந்து அதிலிருந்து ஒரு பிடி மண்ணெடுத்து அந்த ஒரு பிடிக்குள் இந்த ஒய்யார உலகத்தைப் பார்க்கக் கிடைப்பதற்குச் சமம் தான்: சங்கிலி வழியாக வந்த உலகளாவிய மொத்த அறிவும் ஏதோ ஒரு புத்தகத்தினுள் அடங்கிப் போதலும் அத்தகைய புத்தங்களை அடுக்கி வைத்திருக்கும் ஒவ்வொரு அகமும் அறிவு விளக்கேற்றும் கோவிலின்றி வேறில்லை. நூலகத்திலிருந்து உருவான நிறைய மேதைகள் நம் நாட்டிலுண்டு,வெளிநாடுகளிலும் உண்டு.



வானத்தை பார்த்துக் கொண்டே இருக்கிறோம்.அதன் எல்லையை அறிய முடியவில்லையே? பூமியை சுற்றிச் சுற்றிவருகிறோம் அதன் மொத்தத்தையும் காணவில்லையே? அதெல்லாம் ஏன் அத்தனை கோடான கோடிமர்மங்களும், வியப்புகளும்,நடப்புகளுமென எல்லாம் சூழ்ந்துள்ள இப்பிரபஞ்சத்தின் ஒரு சிறிய புள்ளிதான் நாம். நாம் அவ்வளவையும் ஒருகையில் அடக்கிக் கொள்ளும் முடிச்சுகளின் மூலத்தை அறிவதெனில் நம்கையினுள்ள பல புத்தகங்களை படித்துணருவதால் தான் முடியும்.

நூலகங்களைப் பயன்படுத்தப் பழகுங்கள். தெருவின் ஓரத்தில் ஒருமாமரம் வளர்ந்து நான்கு மாங்கனி கைக்கெட்டும் தூரத்தில் தொங்கினால் பறித்துண்ணவும், எட்டாத உயரத்தில் இருந்தால் கல்லெறியவும் அறிவிருக்கும் நமக்கு கால்நடக்கும் தூரத்திலுள்ள அறிவுக் கோயில்களான நூலகங்களை அவ்வப்பொழுது அணுகி பயன்படுத்திக் கொள்ளும் எண்ணம் ஏன் வருவதில்லை?

சினிமாவிற்குப் போகவும், பூங்காவிற்கு சென்று விளையாடவும், மாலை நேரத்தில் சிற்றுண்டிக் கடைகளுக்குச் சென்றுசெலவிடவும் முடிகிற நாம் நம் பிள்ளைகளுக்கு இலவசமாக திறந்து வைத்துள்ள நூலகத்திற்குச் செல்வதையும் இன்றியமையாததாக எண்ணி பழக்கவேண்டும். புத்தகத்தின் வழியே படிப்பதை நம் பிள்ளைகளுக்கு நாம் சிறு வயதிலிருந்தே பழக்கித் தரவேண்டும். புத்தகம் என்பது அலுமாரியில் வைத்துக்கொள்ள பிறரால் தரப்படும் பரிசுப்பொருளாக மட்டும் பிள்ளைகள் அறிந்து வைத்துக் கொள்ளாதிருக்க, அவைகளை படித்துணரும் பழக்கத்தையூட்டி, இலக்கிய அறிவை பெருக்கி, கலை, கலாசாரத்தின் சாரம்சங்களை முன்னெடுத்து, நாளைய தலைமுறையின் இன்றைய முன்னுதாரண பிறப்புகளாகவே நாம் வாழயிருக்கிறோம் என்பதை உணர்த்த வேண்டும்.

எதையும் கற்று அலசி ஆராய்ந்து உலகின் நன்மைக்கென ஆலோசித்து சிறந்ததை ஏற்று வருத்தத்தையும் இன்னலையும் தீர்க்கத்தக ஆற்றலை, படிப்பதன் மூலமும் வளர்த்துக்கொள்ள முடிவதை ஒவ்வொரு வளர்ச்சியின் இடையிலும் புகட்டி பிள்ளைகளை நாம் நடைமுறை அறிவோடு வளர்க்க வேண்டும். நேற்றைய வரலாற்றைக் கண்டு இன்றைய காலத்து வாழ்க்கையை நிமிர்த்திக்கொள்ள புத்தகங்கள் உதவும் என்பதை அறியத்தரும் முதல்புள்ளியானது நமது வளர்ப்பிலும் வார்த்தையிலுமேயுள்ளது.

அரிசி விளையும் ஒவ்வொரு விளைநிலத்தின் ஈரத்திலும் ஒரு விவசாயியின் வியர்வையினுடைய ஈரம் மட்டுமல்ல,கண்ணீரும்கூட சுடச்சுட இருக்கிறது. இனிக்கும் பழங்களுக்குள்ளே அந்தத் தோட்டமுதலாளியின் சிரிப்பும் வேலைக்காரனின் அழுகையும் ஏக்கமும் நிறைந்து கிடக்கிறது. விண்ணளந்து நிற்கும் அத்தனை கட்டடங்கள்,அழகியவீடுகள் என ஒவ்வொரு கல்லுக்குள்ளும் ஒரு கதை கொட்டி அடைக்கப்பட்டிருக்கிறது. அதுபோல் கோடானகோடி கேள்வியும் பதிலுமாய் அடுக்கப்பட்டிருக்கும் புத்தகங்களுக்குப் பின்னேயும் ஒரு படைப்பாளியின் கண்ணீரும் கவலையும் அழுகையும் ஏக்கமும் வலியும் உறுத்தலும் நிராசையாய் உறைந்துப் போயுள்ளது. அவைகளையெல்லாம் துடைப்பதற்கு நாம் படிக்க வேண்டும். இதோ உன் அழுகை எனது சிரிப்பிற்கானபாதையைக் காட்டியுள்ளது பாரென்று அவர்களுக்குக் காட்டவேண்டும். நீவிர் செலவிட்ட நேரத்தில் நான் எனது அறிவுக்கண்ணை திறந்து கொண்டேன் என்று நம்பிக்கையூட்ட வேண்டும்.

“ஒவ்வொரு நூலகத்திற்குள்ளும் ஆயிரமாயிரம் மனிதர்களின் கதையும் வாழ்வும் ஏக்கமும் இழப்பின் சுவடுகளும் கொட்டிக்கிடக்கிறதென்பதை நம் பிள்ளைகளுக்கு எடுத்துச் சொல்லிபழக்கிவிட்டால், அடுத்தநாள் நூலகம் தேடி அவர்களாகவே போவார்கள்”

புத்தகங்களை அடுக்கியுள்ள நூலகத்திற்கு ஆயுத பூசையன்று பொட்டுவைப்பதோடு நில்லாமல் அவைகளின் கனம் உணராமலிருப்பவர்களுக்கு, அறிவு நோக்கி ஒரு செல்லக் குட்டுவைத்துக் கொள்வோம். குட்டுவலித்த இடத்திலிருந்து இனி நூலகத்திற்கான கதவுகள் வெகுவாய் திறக்கட்டும். புத்தகங்களின் ரசிக்கத்தக்க உட்பக்க நறுமணத்தைப் போல நம் வாழ்க்கையும் செம்மையுற்று நல்லெண்ணத்தின் மணம் இனி உலகெங்கும் பரவலாய் வீசட்டும்.

புத்தகங்கள் வாழ்க.. அச்சிடுவோர் வாழ்க.. எழுதுவோர் வாழ்க.. எழுதியதை எடுத்தடுக்கி காத்து நூலகமமைத்துத் தருவோர் வாழ்க.. படிப்போரும் படிக்க பள்ளிக்கூடம் அமைத்தோரும் வாழ்க.. எல்லோரும் படித்து,விடுதலையை பெற்றுத்தரும் அறிவோடு இருந்து ஒவ்வொரு உயிரும் சிறந்தோங்கி நன்னிலந்தோறும் நலமேவாழப் பெறுக.

எனவே வெற்றிகளின் மூலத்தை, தோல்வியில் தாங்கும் பக்குவத்தை, தோல்வியை வென்றெடுக்கும் தந்திரத்தை,வெற்றி தோல்வியின் சரிசமத்தை இப்படி அனைத்தையும் கொஞ்சம் கொஞ்சமாக வாழ்வின் நகர்விற்கேற்ப படித்தறிய நம்மால் இயலுமெனில் அதற்கு பேருதவியாய் அமைவதே நூலகங்கள்.

காலிங்கராசா
ஹரிச்சந்திரா
தொழில்நுட்ப
அலுவலர்,
மீன்பிடியியல்
விஞ்ஞானத்துறை,
விஞ்ஞானபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

### வாரத்திற்கு ஒரு புதிர்! 193

யாருடைய கண்டுபிடிப்பின் பின் நவீன விஞ்ஞானம் தோற்றம் பெற்றது?

புதிர் 193 இற்கான விடைகளை 25.09.2017 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

கலாநிதி. (செல்வி) ஷிவதர்ஷினி இராசலிங்கம்
ஆசிரியர்,
யாழ்ப்பாண விஞ்ஞான
சங்கம்-பிரிவு A,
84, கல்லூரி வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 500/- பணப்பரிசு வழங்கப்படும்.
இப் பணப்பரிசினை யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பிரிவு A ஆசிரியரிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

புதிர் 192க்கான 500/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி

கு.உமாகாந்த்
793, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

**புதிர் 192க்கான கேள்வியும் விடையும்:**

மனித அபிவிருத்திச் சுட்டியை அறிமுகப்படுத்திய நிறுவனம் எது?

UNDP

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 193**

சரியான விடை:-..............................
முழுப்பெயர்:-..............................
முகவரி:-..............................
தொ.பே. இல:..............................
கையொப்பம்:..............................

கல்வியில் சிறந்த மனிதன் என்று பேர் வாங்குவதை விட ஒழுக்கத்தில் சிறந்த மனிதன் என்று பேர் வாங்க வேண்டும். – காந்திஜி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சிவபூமியில் சைவசமயத்தை பாதுகாக்க தமிழ் இளைஞர்கள் தயாராக வேண்டும்

இலங்கையை சிவபூமி என்று போற்றியவர் திருமூலர். பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை சிவபூமி என்று சான்றுப்படுத்தப்பட்டுள்ளமைக்கு இஃது தக்க ஆதாரமாகும்.

இராவணேஸ்வரன் ஆண்ட நாடு. மிகச் சிறந்த சிவபக்தனாகிய இராவணேஸ்வரன் இலங்கையில் ஆட்சி செய்தான் எனும் போது இலங்கை சைவத்திரு நாடாக இருந்துள்ளது என்பது உறுதியாகிறது.

ஆம், இராவணனின் மேலது நீறு என்ற தேவாரப் பதிகம் சிவசின்னமாகிய திருநீற்றை இராவணன் அணிந்து கொண்டு ஆட்சி செய்தான் என்பதனூடு புலப்படும்.

இவ்வாறு சிவசின்னமாகிய திருநீற்றை அணிந்து கொண்டு இராவணன் இலங்கையை ஆட்சி செய்ததன் காரணமாகவும் பாடல்பெற்ற பழம்பெரும் சிவாலயங்கள் இலங்கையில் இருந்துள்ளமையாலும் இலங்கை சிவபூமி என்று போற்றப்பட்டது எனலாம்.

இந்திய தேசத்தைப் பொறுத்தவரை அங்கு அறுவகைச் சமயங்களும் பரந்து விரிந்து பக்தி செய்தன.

ஆனால் ஈழநாடு சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சைவ சமயத்தை மட்டும் தன்னகத்தே கொண்டிருந்தது.

இதன்காரணமாக இலங்கையை சிவபூமி என்று விழித்துக் கூறுவது பொருத்துடையது என திருமூலர் எண்ணினார்.

ஆனால் இன்று நிலைமை வேறாக உள்ளது. இலங்கை பௌத்த சிங்கள நாடு என்று சொல்லப்படும் அளவில் பௌத்த ஆதிக்கம் மேலோங்கிற்று.

உண்மையில் இத்தகையதோர் நிலைமை ஏற்படுவதற்கு நாமே காரணம் எனலாம்.

இந்திய தேசத்தில் இந்து சமயத்தைப் பாதுகாக்க, சைவத்தை நிலைநிறுத்த, வைணவத்தை தக்கவைக்க ஒருபுறம் நாயன்மார்களும் மறுபுறம் ஆழ்வார்களும் பக்தி இயக்கம் அமைத்து இந்து சமயத்தின் நிலைபேற்றுக்குப் பெருந்துணை புரிந்தனர்.

ஆனால் இலங்கையில் பக்தி இயக்கம் உருவாகவில்லை. மாறாக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சேர்.பொன்.இராமநாதன் போன்ற சைவப் பெருவள்ளல்கள் தங்களைத் தியாகம் செய்து தங்களை உருக்கி சைவத்தையும் தமிழையும் காப்பாற்ற கடும் பாடுபட்டனர்.

எனினும் அந்நியராட்சியின் கடும்பிடியும் அதன்பின்பாக நாட்டின் அதிகாரம் கையளிக்கப்பட்ட முறைமையும் சைவத்துக்கு பாதகமாயிற்று.

இருந்தும் இலங்கை சிவபூமி என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை என்பதால் எங்கள் இளைஞர் சைவ சமயத்தை மீண்டும் இந்த மண்ணில் எழுகை பெற முன்வர வேண்டும்.

இதற்கு இன்று ஆரம்பமாகும் சைவபரிபாலன சபையின் சைவ மாநாடு பூர்வாங்கமாக அமையட்டும்.

கொழும்பு கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை பௌத்தத்தை ஆதரிப்பது போல, எங்கள் கத்தோலிக்க மதகுருமாரும் சைவம் வாழ அதன் வழி தமிழ் எழுகை பெற குரல் கொடுக்கட்டும்.

## பாடசாலை சென்ற சிறுவன் மோ.சைக்கிள் மோதி காயம்

(யாழ்ப்பாணம்)

வீதியைக் கடக்க முற்பட்ட சிறுவனை எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் சிறுவன் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நேற்றுக்காலை 7.30 மணியளவில் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்துக்கு முன்னால் வீதியைக் கடக்க முற்பட்ட பாடசாலைச் சிறுவனை எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் கொழும்புத்துறையைச் சேர்ந்த ஆனந்தராசா ஆனந்த் (வயது-10) என்ற சிறுவனே படுகாயமடைந்தவராவார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (மு-10,30)

## கண்காட்சியும் தொழிற்சந்தையும் இரு தினங்கள் கிளிநொச்சியில்

(கிளிநொச்சி)

வடமாகாணக் கல்வித் திணைக்களம், உளசமூக வள நிலையத்தின் ஊடாக நடத்துகின்ற உயர்கல்வி மற்றும் தொழில் வழிகாட்டல் கண் காட்சியும் தொழிற் சந்தையும் -2017 நாளை 16 ஆம் திகதி சனிக் கிழமையும் நாளை மறுதினம் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் காலை 8.30 மணியிலிருந்து பிற்பகல் 4.30 மணி வரையும் கிளி/ கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண கல்விப் பணிப் பாளர் செல்லத்துரை உதயகுமார் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இதேவேளை இளைஞர், யுவதிகளுக்கான வேலை வாய்ப்பினை வழங்க கூடிய தொழில் வழங்கு முகவர்களையும் எமது காட்சிக் கூடத்தில் பங்குபற்றுவதற்கு அழைப்பு விடுவிக்க வேண்டியுள்ளதாக வடக்கு மாகாண உள சமூக வள நிலைய உதவி முகாமையாளர் சி. உதயகலா தெரிவித்துள்ளார். ஆதலால் வடக்கு மாகாணத்தின் இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பை உடன் வழங்கக்கூடிய தொழில் வழங்கு முகவர்களும் இக்கண்காட் சியில் பங்கு கொண்டு தமது சேவையை வழங்க வேண்டுமென எதிர்பார்க்கப் படுவதனால் தகுதிக் கேற்ற வேலைவாய்ப்பை உடன் வழங்கக்கூடியதும் தேவையுள்ளது மான நிறுவனங்கள் குறித்த காலப் பகுதி யில் இக் கண்காட்சியில் காட்சிப் படுத்தல்களை மேற் கொள்ள முடியும்.

எனவே இணைந்து கொள்ள விரும்புகின்ற நிறுவனங்கள் நாளை 12 ஆம் திகதிக்கு முன்னர் 076 666 3371 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தங்களது வரவை உறுதிப்படுத்திப் பதிவு செய்து கொள்வதோடு தொடர்புடைய விபரங்களையும் பெற்றுக் கொள்ள முடி யும் என அவர் அறிவித்துள்ளார். (2)

## கற்கைநெறிகள் 20ம் திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கலைப்பீடத்தின் முழுநேர பட்டப்பின் கல்வி டிப்ளோமாவிற்கான கற்கை நெறிகள் எதிர்வரும் 20 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகும் என பதிவாளர் அறிவித்துள்ளார். (இ



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### காலத்தைக் கடந்த தெய்வீகம்

அறிவீனமுள்ளவன் யாரையாவது நம்புகிறான், அல்லது நம்புவதில்லை. விவேகமுள்ளவன் யாரையும் நம்பவதுமில்லை, நம்பாமலிருப்பதுமில்லை. அவனுடைய நம்பிக்கை காலத்தில் உள்ளது.

காலம் சரியாக இருந்தால், பகைவன்கூட நண்பன் போன்று நடந்து கொள்வான். காலம் சரியில்லை என்றால் நண்பன்கூட பகைவன் போன்று நடந்து கொள்வான். விவேகமுடையவன் மகா காலனை (பெரும் காலம் அல்லத சிவன்)- நம்புகிறான்- காலத்தைக் கடந்த தெய்வீகம்.

கால ஓட்டத்தில் எப்போதும் முன்னேற்றத்திற்கு இடம் உண்டு. எப்போதும் முழுமையாக இருப்பது இறைவன் மாத்திரமே. இறைவனில் அடைக்கலம் கொண்டு அதிலிருந்து மாறாமல் இரு.

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை யாழ்.பிரதேசத்தில மானிப்பாய் ஒரு பகுதி, கரம்பைக்குறிச்சி ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் கோணாவில், யூனியன்குளம், கன்னிகா புரம், ஸ்கந்தபுரம், விநாயகர் குடியிருப்பு, அக்கராயன் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில வேளாங்குளம், மடுக்குளம், வேளாங்குளம் விமானப்படை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## இந். வியாபாரிக்கு விளக்கமறியல்

சட்டவிரோதமான முறையில் புடைவை வியாபாரத்தில் ஈடுபட்ட இந்திய வியாபாரி ஒருவரை தெல்லிப் பழை பொலிஸார் கடந்த 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கைது செய்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து சுன்னாகம் டச்சு வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற வேளை மோட்டார் சைக்கிளுடன் குறித்த வியாபாரியை பொலிஸார் கைது செய்தனர்.

தமிழக திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த 53 வயதான குறித்த வியாபாரியே இவ்வாறு கைது செய்யப் பட்டுள்ளார்.

இவர் நேற்று முன்தினம் புதன்கிழமை மல்லாகம் நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டார்.

குறித்த நபர் இன்றுவரை விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3-104)

## அனுஷ்டிக்கக் கோரிக்கை

இந்திய ஆதிக்கத்தை எதிர்த்து அஹிம்சை வழியில் உண்ணாநோன்பிருந்து உயிர் துறந்த தியாக தீபம் திலீபனின் நினைவு நாட்களில் கேளிக்கை நிகழ்வுகளை தவிர்த்து உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்குமாறு ஜனநாயக போராளிகள் கட்சியினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அந்தவகையில் ஜனநாயக போராளிகள் கட்சியினராகிய நாம் திலீபன் உண்ணாநோன்பிருந்த நல்லூரிலேயே அனுஷ்டிக்க ஏற்பாடு செய்துளளோம். அந்தவகையில் இன்று காலை 10.10 மணிக்கு நல்லூரில் அஞ்சலி நிகழ்வு நடைபெறவுள்ளது. (மு-9)

## நினைவுப் பேருரை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

மனிதநேய அமைப்புக்கள் ஒழுங்கமைத்து நடத்தும் மனிதநேய வேர்கள் நிகழ்வில் யு.என்.எச்.சி.ஆர் அமைப்பின் முன்னாள் பணிப்பாளர் அமரர் பொன்னுத்துரை பாலகிருஸ்ணனின் ஞாபகார்த்த நினைவுப் பேருரை நிகழ்வுகள் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.நாவலர் வீதி தியாகி அறக்கொடை நிலைய சொர்ணாம்பிகை மண்டபத்தில் இடம் பெறும். (இ-7)



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### உங்கள் வீட்டில் தங்கமழை கொட்டணுமா?

நம் வீட்டில் உள்ள தங்கள் மற்றும் ஆடைகளின் எண்ணிக்கை அதிகரிக்க நடைமுறையில் பின்பற்றப்படும் பல சாஸ்திரங்கள் இதோ,

தங்கம் அதிகரிக்க என்ன செய்ய வேண்டும்?

❖ புத்தாடைகளை அணியும் போது, அதன் ஓரங்களில் மஞ்சள் தடவிய பின் அணிய வேண்டும். ஏனெனில் அதனால் தோஷம் நீங்குவதுடன், ஆடைகளின் எண்ணிக்கை அதிகமாகும்.

❖ சுபநிகழ்ச்சியின் போது எப்போதும் தென் திசையை பார்த்தபடி அமரக் கூடாது. ஏனெனில் தென் திசை யமனுக்கு உகந்தது.

❖ தினமும் இறவில் உறங்கும் போது கிழக்கு, அல்லது தெற்கு திசையில் தலை வைத்து உறங்குவதே மிக்வும் சிறந்தது. (தொடரும்)



## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### கூட்டாக சேர்ந்து வாழ்வோம்

✦ வாங்கும்போதும், விற்கும்போதும் சாந்த குணத்தைக் கடைப்பிடிப்போர் மீது இறைவனின் கருணை உண்டாகட்டும்.

✦ குடும்பத்தைக் காப்பாற்ற உழைத்துப் பொருள் சம்பாதிப்பவர்கள் மறுமையில் ஒளி நிறைந்த முகத்துடன் விளங்குவார்கள்.

✦ பாவங்களைச் செய்வதற்கு தூண்டுகோலாக இருப்பது பேராசையே. பேராசையை விட்டும் உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

✦ ஒருவர் செய்த உதவிக்கு கைமாறு செய்வது அவசியம். அவ்வாறு செய்ய முடியாவிட்டால் உதவி செய்தவரைப் புகழ்ந்து கொண்டே இருக்கவேண்டும்.

✦ பெருஞ்செல்வந்தனாக வேண்டும் என்று பேராசை கொள்ளாதீர்கள். அது உங்களை நேர்மையை விட்டும் தூரமாக்கிவிடும்.

✦ உலகம் ஒரு பாலம். அதைக் கடந்து செல்ல முயற்சி செய்யுங்கள். அந்த பாலத்திலேயே கட்டடம் கட்டித் தங்குவதற்குச் சிந்தனை செய்யாதீர்கள்.

✦ கூட்டாக சேர்ந்து வாழுங்கள். பிரிந்து செல்லாதீர்கள். சொர்க்கத்தை விரும்புபவர்கள் ஒற்றுமையை கடைபிடியுங்கள்.

# தீவக ரீதியிலான உதைபந்தாட்டம் துறையூர் ஐயனார் சம்பியன்



புங்குடுதீவு சித்தி விநாயகர் சன சமூகத்தினதும், சனஸ்ரார் விளையாட்டுக்கழகத்தினதும் 50 ஆவது ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு அண்மையில் தீவகரீதியில் நடைபெற்ற உதைபந்தாட்ட தொடரில் துறையூர் ஐயனார் அணி 25 கோல்களை போட்டு முதலாமிடத்தினை பெற்றதுடன், 15000 ரூபா பெறுமதியான பணப்பரிசிலும், வெற்றிக்கேடயமும் பெற்றுக் கொண்டது.

முதலாவது போட்டியில் வயலூர் முருகன் அணியினை எதிர்த்து துறையூர் ஐயனார் அணி மோதியது. இதில் துறையூர் ஐயனார் அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இரண்டாவது போட்டியில் புங்குடுதீவு பாரதி அணியுடன் துறையூர் ஐயனார் அணி மோதியது. இதில் துறையூர் ஐயனார் அணி 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மூன்றாம் சுற்றுப்போட்டியில் புங்குடுதீவு நசரத் அணியுடன் மோதியது. இதில் துறையூர் ஐயனார் அணி 1:0 என்ற கோல் கணக்கில் புங்.நசரத் அணியை வெற்றி பெற்று அரையிறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது.

அரையிறுதியில் புங்குடுதீவு சென்.சேவியர் அணியுடன் மோதியதில் 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது.

(10.09.2017) அன்று நடைபெற்ற இறுதிப்போட்டியில் ஊர்காவற்றுறை சென்.ஜேம்ஸ் அணியுடன் மோதியது. இதில் 8:1 என்ற கோல் கணக்கில் துறையூர் ஐயனார் அணி வெற்றிபெற்றது.

சிறந்த விளையாட்டு வீரனாக ஐயனார் விளையாட்டுக்கழக வீரன் வ.கோகுலனும், சிறந்த கோல் காப்பாளராக ஐயனார் விளையாட்டுக்கழக வீரன் ஜாந்துவும் தெரிவு செய்யப்பட்டனர். தீவகத்தில் அதிகூடிய கோல்களை போட்டு முதலிடம் பெற்ற அணியாக மீண்டும் பதிவு செய்தது துறையூர் ஐயனார் அணி. (க)

# சுலக்சன் ஹெற்றிக் கோல்
## அடுத்த சுற்றுக்கு முன்னேறியது இமையாணன் மத்திய வி.கழகம்



சுலக்சனின் அதிரடி ஹெற்றிக் கோல்கள் மூலம் சக்கோட்டை சென் சேவியர் அணியை 05:03 அடிப்படையில் வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது இமையாணன் மத்தி விளையாட்டுக்கழகம். மைக்கல் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட தொடரில் (13.09.2017) அன்று இரவு நடைபெற்ற போட்டியில் சென்சேவியர் அணியை எதிர்த்து விளையாடிய இமையாணன் மத்தி அணி சுலக்சன்-03, சாரு-01, தாஸ்-01 என அதிரடி கோல்களை போட்டு போட்டி முடிவில் 05:03 வெற்றியீட்டியது இமையாணன் மத்தி விளையாட்டுக்கழகம். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# வத்திராயன் உதயசூரியன் வி.கழகம் நடத்திய மென்பந்தாட்ட சுற்றுப்போட்டி
## வெள்ளி நிலா சம்பியன்

வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக் கழகம் நடத்தி வருகின்ற மென்பந்தாட்டத்தில் வெள்ளிநிலா வி.கழகம் வெற்றி பெற்று சம்பியனாகியது.

13.09.2017 அன்று இடம் பெற்ற இறுதிப் போட்டியில் கேவில் வெள்ளிநிலா வி.க மற்றும் நாகர் கோவில் இளம்பிறை வி.க ஆகியன மோதின.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற வெள்ளி நிலா வி.க. தலைவர் முதலில் களத்தடுப்பில் ஈடுபடத்தீர்மானித்தார். ஆகவே முதலில் துடுப்பெடுத்தாடிய இளம்பிறை வி.க 12 ஓவர்கள் நிறைவில் 09 இலக்குகளை இழந்து 82 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தது.

அணிசார்பாக தேவலிங்கம் 36 ஓட்டங்களையும் வசந்தறாஜ் 18 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் வெள்ளிநிலா வி.க வீரர் றஞ்சித் மூன்று ஓவர் பந்து வீசி 11 ஓட்டங்களுக்கு 4 இலக்கினை கைப்பற்றி இருந்தார்.

பின்னர் 83 என்ற வெற்றி இலக்குடன் களம் புகுந்த வெள்ளி நிலா வி.க. 10.1 ஓவர்களில் 5 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கினை அடைந்தனர். அணி சார்பாக உலகநாதன் 39 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார்.





இப்போட்டியில் வெள்ளிநிலா வி.க 5 இலக்குகளால் வெற்றி பெற்று 2017 ஆம் ஆண்டுக்கான உதய சூரியன் வி.க. வெற்றி நாயகர்களாக தெரிவுசெய்யப்பட்டது. (க)

# நிதர்சன் அபாரம் சரஸ்வதியை வென்றது சிவானந்தா K.K.S. அணி





மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் சுனாமியால் இறந்தவர்களினதும் கழகத்தின் மறைந்த வீரர்களினதும் நினைவாக நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் (13.09.2017) அன்று நடைபெற்ற இரண்டாவது போட்டியில் புத்தூர் கிழக்கு சரஸ்வதி அணியை எதிர்த்து சிவானந்தா K.K.S. அணி மோதிய ஆட்டத்தில் 2-1 என்ற கோல்கணக்கில் சிவானந்தா K.K.S. அணி வெற்றி பெற்றது.

புத்தூர் கிழக்கு சரஸ்வதி அணி சார்பாக பார்த்தீபன் -1 கோல் போட்டார். சிவானந்தா K.K.S. அணி சார்பாக நிதர்சன -2 கோல் போட்டார்.

போட்டியின் ஆட்டநாயகனாக சிவானந்தா K.K.S. அணி வீரர் நிதர்சன் தெரிவு செய்யப்பட்டார். (க)

# யங்கம்பன்ஸ் வெற்றி




மணற்காடு சென் அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் சுனாமியால் இறந்தவர்களினதும் கழகத்தின் மறைந்த வீரர்களினதும் நினைவாக நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் (13.09.2017) அன்று முதலாவதுபோட்டியாக யங்கமபன்ஸை எதிர்த்து விக்னேஸ்வரா அணி மோத விருந்தது. போட்டியில் விக்னேஸ்வரா வராத காரணத்தால் யங்கம்பன்ஸ்அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது. (க)

# சென்.அன்ரனிஸ் உதைபந்தாட்டத்தொடர்; கிளிநொச்சி உதயதாரகை வெற்றி

மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் சுனாமியால் இறந்தவர்களினதும் கழகத்தின் மறைந்த வீரர்களினதும் நினைவாக நடத்தும் உதைபந் தாட்ட சுற்றுப்போட்டியின் (13.09.2017) அன்று நடைபெற்ற மூன்றாவது போட்டியில் கிளி உதயதாரகை அணியை எதிர்த்து மாவத்தை அணி மோதியது. போட்டியில் கிளிநொச்சி உதய தாரகை அணி 4-1 கோல் கணக்கில் வெற்றி பெற்றது. கிளிநொச்சி உதயதாரகை அணி சார்பில் செயறூபன் - 3 கோலினையும் சுபாஸ் -1 கோலினையும் போட்டனர். போட்டியின் ஆட்டநாயகனாக கிளிநொச்சி உதயதாரகை அணியை சேர்ந்த செயறூபன் தெரிவு செய்யப்பட்டார். (க)





## 11 மாத குழந்தை...

வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளது.

யாழ் நகர் பகுதியை சேர்ந்த கனிஸ்ரன் எஸ்தர் என்ற பதினொரு மாதங்களேயான பெண் குழந்தை ஒன்றே மேற்படி உயிரிழந்துள்ளது.

குறித்த குழந்தை மிகவும் ஆரோக்கியமாக இருந்துள்ளது. திடீரென நேற்று அதிகாலை காய்ச்சல் ஏற்பட்டபோது பனடோல் சிறப் கொடுத்துள்ளனர். சற்று நேரத்தின் பின்னர் காய்ச்சல் குறைந்துள்ளது.

பின்னர் நேற்று மாலை மீண்டும் காய்ச்சல் ஏற்படவே மீண்டும் பனடோல் சிறப் கொடுத்துள்ளார்கள். அதற்கு குணமடையாததால் இரவு 7.30 மணியளவில் யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர். அப்போது குழந்தை மயக்கமடைந்துள்ளது. வைத்தியர்களால் சிகிச்சை அளிக்கப்பட்ட போதும் சிகிச்சை பலனின்றி குழந்தை ஒரு மணித்தியாலத்தில் உயிரிழந்துள்ளது.

இந்த மரண விசாரணையை யாழ் போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டதுடன், சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (மு-9.30)

## யாழ்ப்பாணப் பல்...

கொள்ளப்பட்டு வந்தது.

இந்த நிலையில் சந்தேக நபர்கள் சார்பாக கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் யாழ் மேல் நீதிமன்றில் பிணை விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டது. குறித்த பிணை விண்ணப்பம் தொடர்பான வழக்கு விசாரணை நேற்றைய தினம் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்ட போதே மேற்படி பிணை வழங்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களான ஐந்து பொலிஸார் மீதான விசாரணைகள் நிறைவடைந்துள்ள நிலையில் அவர்களை பிணையில் விடுவிக்க அரச தரப்பு சட்டத்தரணி ஆட்சேபனை தெரிவிக்காததை அடுத்து கடுமையான பிணை நிபந்தனைகளுடன் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அத்ாவது, குறித்த சந்தேகநபர்கள் ஒவ்வொருவரும் தலா 50 ஆயிரம் ரூபா காசு பிணை, நீதவானால் ஏற்றுக்கொள்ளப்பட்ட 2 லட்சம் ரூபா பெறுமதியான 2 ஆட்பிணை ஒப்புவிக்கவேண்டும்

அத்துடன் தத்தமது கடவுச்சீட்டுக்களை நீதிமன்ற பதிவாளரிடம் ஒப்படைக்க வேண்டும். வெளிநாடுகளுக்கு செல்ல தடை விதிக்கப்பட்டதுடன் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை ஒன்பது மணி தொடக்கம் நண்பகல் பன்னிரண்டு மணிக்குள் கொழும்பு, குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் கையெழுத்து இடவேண்டும் என்ற நிபந்தனைகளுடன் மேற்படி சந்தேக நபர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். (மு-9.4)

## கொழும்பில் அம்மன்...



டிருந்ததனைச் சாதகமாகப் பயன்படுத்தி இச் சிலை உடைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இச் சிலையின் கைப்பகுதியே உடைந்து தேசமாகியுள்ளது. (மு-60)

## காணாமல்போனோர்...

ஸ்தாபிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தல் கடந்த 12ஆம் திகதி நள்ளிரவு வெளியிடப்பட்டுள்ளது. (மு-11)

## தேர்வான தொண்...

களிற்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுத் தொடர்பில் கருத்து தெரிவித்த அதிகாரியே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் குறித்த அதிகாரி மேலும் தெரிவிக்கையில்,

வட மாகாண தொண்டர் ஆசிரியர்களிற்கு இடம்பெற்ற நேர்முகத் தேர்வின் அடிப்படையில் தேர்வானவர்களின் பட்டியல் விபரம் ஒக்டோபர் முதலாம் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்கப்படும் என மத்திய கல்வி அமைச்சர் வட மாகாண அதிகாரிகளிடம் உறுதியளித்தார். அதன் பிரகாரம் பட்டியல் கிடைத்ததும் பட்டியலில் உள்ளவர்களிற்கு நியமனம் வழங்க முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேநேரம் வடக்கு மாகாணப் பாடசாலைகளில் தொண்டராசிரியர்களாக பணியாற்றிய 1079 தொண்டர்களிற்கு கடந்த யூன் மாதம் 28,29,30 ஆகிய மூன்று தினங்களும் வட மாகாண கல்வி அமைச்சில் மத்திய கல்வி அமைச்சின் அதிகாரிகளினால் இடம்பெற்ற நேர்முகத் தேர்வுகளில் தகுதியின் அடிப்படையில் தேர்வானவர்களின் பட்டியல் பூர்த்திசெய்யப்பட்டு இறுதி அனுமதிகளிற்காக பாரப்படுத்தப்பட்டுள்ளது என்றார்.

இதேநேரம் நடத்தப்பட்ட நேர்முகத் தேர்வில் தோற்றியிருந்த தொண்டராசிரியர்களில் நேர்முகத் தேர்வின் பெறுபேற்றின் அடிப்படையில் வர்த்தமானியில் கோரப்பட்ட ஆவணங்களை சமர்ப்பித்தவர்களை மட்டுமே தகுதியானவர்கள் என தம்மால் சிபார்சு செய்ய முடியும் எனவும் ஆவணங்கள் இல்லாதவர்களை சிபார்சு செய்யும் உரிமை சட்டப்படி தமக்கும் இல்லை என்பதனையும் சுட்டிக்காட்டியதாக மாகாண அதிகாரி தெரிவித்தார். இவ்வாறு சட்டப்படி கோரிய ஆவணமாக சம்பவத் திரட்டுப் புத்தகத்தின் பிரதியே கோரப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.(மு-89)

## கிழக்கில் விளக்கா...

தனியார் போக்குவரத்து சங்கங்களினூடான சந்திப்பொன்று நேற்றைய தினம் கைதடியில் அமைந்துள்ள முதலமைச்சர் செயலகத்தில் நடைபெற்றது. இந்த சந்திப்பின் முடிவில் ஊடகவியலாளர்களால் தொடுக்கப்பட்ட வினாவிற்கு பதில் தெரிவிக்கும் போதே அவர மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

20ஆவது திருத்தச் சட்டம் மாகாண சபைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டு ஒப்புதல் கோரப்பட்டிருந்தது. எனினும் வடக்கு மாகாண சபை ஒப்புதல் வழங்க்வில்லை. எனினும் கிழக்கு மாகாண சபை ஒப்புதல் வழங்கியுள்ளது. எனினும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்பட்ட நிலையிலேதான் தாம் ஆதரவு வழங்கியதாக கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் சிலர் ஊடகங்களில் தெரிவித்துள்ளனர். அவர்கள் தெரியாமல் ஆதரவு வழங்கிவிட்டதாகவும் கூறியுள்ளனர்.

இந்த நிலையில் 20ஆவது திருந்த சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக எந்த அறிவித்தல்களும் எமக்கு உத்தியோக பூர்வமாக கிடைக்கவில்லை. இந்த நிலையில் எமது திருத்தங்கள் உள்வாங்கப்படாமல் அந்த சட்டமூலத்துக்கு வடக்கு மாகாண சபை அங்கீகாரம் வழங்காது என்றார் முதலமைச்சர்.

இதேவேளை குறித்த சட்டமூலத்திற்கு கூட்டமைப்பு ஆதரவு வழங்கும் என குறித்த சட்டமூலத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவதற்கு முன்னதாகவே கூட்டமைப்பின் ஊடக பேச்சாளர் சுமந்திரன் கூறியிருந்தார். எனினும் இந்த செயல் மாகாண சபைகளுக்கு இருக்கும் சொற்ப அதிகாரங்களையும் தாரை வார்த்துக் கொடுக்கும் செயல் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் சாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (மு-4)

# தற்கொலை செய்த பெண் குறித்து கணவன் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

மாதகல் பகுதியில் கடந்த யூலை மாதம் 28ஆம் திகதி தற்கொலை செய்து இறந்த பெண், ஒரு குழந்தையின் தாய் என்பது தவறான செய்தி எனவும் அவருக்கு குழந்தை இல்லை எனவும் பிரஸ்தாப பெண்ணின் கணவர் சி.நிறஞ்சன் தெரிவித்துள்ளார்.

தனது மனைவியின் தற்கொலைச் சம்பவம் குறித்து வெளியான செய்தியில் தெரிவிக்கப்பட்டது போல தான் வெளிநாட்டுக்கு தொழில் நிமிர்த்தம் செல்லவில்லை, மாறாக சுற்றுலா நிமிர்த்தமே சென்றிருந்தேன்.

சம்பவம் நடந்த தினத்தன்று தனக்கும் மனைவிக்கும் இடையில் தொலைபேசியில் வாக்குவாதம் இடம்பெறவில்லை என்பதுடன் காணொளியில் பார்க்கக் கூடியதாக தற்கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என வெளியான செய்தியும் தவறு எனவும் அந்தப் பெண்ணின் கணவர் தெரிவித்துள்ளார்.(ந)

# வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம் மேற்கொண்ட வேலைநிறுத்தப் போராட்டம் நேற்றுமுதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அச் சங்கம் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது. (மு)

# என் உயிருக்கு அச்சுறுத்தல் வெலிக்கடை சாட்சியாளர்

(கொழும்பு)

தனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக 2012ஆம் ஆண்டு வெலிக்கடை சிறைக் கைதிகளின் கொலை தொடர்பான சம்பவத்தின் பிரதான சாட்சியாளரான சுதேஷ் நந்திமால் டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர் அண்மையில் தான் தங்கியிருந்த மொரட்டுவ பகுதியில் அமைந்துள்ள வீடொன்றின் மீது சிலர் துப்பாக்கிச் சூடு நடத்தியதாகத் தெரிவித்தார்.

இதுகுறித்து பொலிஸாரிடம் புகார் செய்துள்ள போதிலும் நம்பிக்கை வாய்ந்த விசாரணையொன்றை நடத்த பொலிஸார் இது வரை தவறியுள்ளதாக நந்திமால் டி சில்வா குற்றம்சாட்டினார்.

அதேபோன்று உயிர் அச்சுறுத்தல்களுக்கு முகம் கொடுத்துள்ள தனக்கு போதிய பாதுகாப்பை வழங்க அரசாங்கம் தவறியுள்ளதாகவும்,

வெலிக்கடை சிறைக் கைதிகளின் கொலையுடன் சம்பந்தப்பட்ட நபர்கள் அதன் சாட்சிகளை அழிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாக குற்றம் சாட்டிய அவர், அரசாங்கம் இதனைக் கவனத்திற்கு எடுத்து சாட்சியாளர்களைப் பாதுகாக்க தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மேலும் தெரிவித்தார்.

ஆனால் இந்தக் குற்றச்சாட்டுக்களை நிராகரித்த பொலிஸ் திணைக்களத்தின் பெயர் குறிப்பிட விரும்பாத உயரதிகாரி ஒருவர், இந்தத் துப்பாக்கிச் சூடு சம்பந்தமாக தாங்கள் முறையான விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்தார்.

2012-ம் ஆண்டு வெலிக்கடை சிறைச்சாலைக்குள் அரச பாதுகாப்பு படையினர் மேற்கொண்ட தேடுதலின்போது ஏற்பட்ட மோதல்களின்போது 27 சிறைக் கைதிகள் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (மு-11)

## தியாக தீபம்...

நாளாகும். 15ஆம் திகதி ஆரம்பித்த உண்ணா விரதம் 26ஆம் திகதி அவரது மரணத்துடன் முடிவுக்கு வந்தது. இந்திய அரசாங்கம் திலீபனது கோரிக்கைகளை நிறைவேற்றவில்லை.

உலக தமிழ் இளைஞர்களுக்கு அகிம்சை போராட்டத்திற்கு எடுத்துக்காட்டாக உள்ள திலீபனின் உண்ணாவிரத ஆரம்ப தினமான இன்று தமிழர் தாயகமெங்கும் நினைவு கூரப்படவுள்ளது.

திலீபன் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒரு ஆரம்பக்கால உறுப்பினரும் முக்கிய உறுப்பினராகவும் இருந்தவர். யாழ்ப்பாணம், ஊரெழுவை சேர்ந்த இவரது இயற் பெயர் இராசையா பார்த்தீபன். இவரின் மறைவின் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினால் லெப்டினன்ட் கேணல் திலீபன் எனும் நிலை வழங்கப்பட்டது.

இந்திய அமைதிப் படையினரிடம் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து அகிம்சை வழியில் சொட்டு நீரும் அருந்தா உண்ணா விரதம் இருந்து, அக்கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத நிலையில் உறுதியுடன் அவ் உண்ணாவிரதத்தில் உயிர் துறந்தவர். இவரை இந்திய அரசு இறக்க விட்டது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இந்திய இராணுவத்துக்குமிடையே பின்னர் ஏற்பட்ட போருக்கு இது ஒரு முக்கிய காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது. (மு-4,250)

(மேலும் 10ஆம் பக்கம் பார்க்க)

## தென்அமெரிக்கா...

நாடு ஜகத் ஜயசூரியவை கையளிக்குமாறு கோரினால், அவரை அந்த நாட்டிடம் கையளிக்க இலங்கை சட்டரீதியாக கட்டுப்பட்டுள்ளதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ கூறியுள்ளார்.

கட்சித் தலைமையகத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதன்போது மேலும் கூறியுள்ள அவர்,

பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு பாதுகாப்பளிப்பது தொடர்பான சர்வதேச பிரகடனத்தில் இலங்கை சார்பில் வெளிவிவகார அமைச்சராக இருந்த மங்கள சமரவீர நாட்டுக்கே தெரியாமல் கைச்சாத்திட்டிருந்தார்.

இந்தப் பிரகடனத்தில் அமெரிக்கா, பிரிட்டன உள்ளிட்ட உலகின் முக்கிய நாடுகள் கைச்சாத்திடவில்லை.

இந்தியா இந்தப் பிரகடனத்தில் கைச்சாத்திட்டுள்ளபோதும், அதை நாட்டுக்குள் சட்டத்தை நடைமுறைப்படுத்த இணங்கவில்லை.

இந்த நிலையில், தேசத்துரோகமான முறையில் மங்கள சமரவீர அதில் கைச்சாத்திட்டுள்ளார். இந்தப் பிரகடனத்தில் கைச்சாத்திடப்பட்டதற்கமைய, அதனை அங்கீகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தப் பிரகடனத்தை அங்கீகரிப்பது தொடர்பான பிரேரணை மீதான விவாதம் எதிர் வரும் 21ஆம் திகதி நாடாளுமன்றில் இடம் பெறவுள்ளது.

அன்றைய தினமே அதனை நிறைவேற்ற நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் உள்வாங்கப்பட்டுள்ளதாக விமல் வீரவன்ஸ கூறியுள்ளார். (மு-11)

## சட்டமா அதிபருக்கு...

றும் இலங்கை தொலைத்தொடர்பாடல் ஆணைக்குழுவின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் அனுஷ பலப்பிட்ட ஆகியோர் சார்பில், அவர்களின் சட்டத்தரணிகளால் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனு நேற்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போதே சட்டமா அதிபருக்கு மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்கவினால் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது, இலங்கை தொலைத்தொடர்பாடல் ஆணைக்குழுவின் 600 மில்லியன் ரூபா நிதியைப் பயன்படுத்தி சில் துணி விநியோகித்தமை தொடர்பான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து, கடந்த 7ஆம் திகதி லலித் வீரதுங்க மற்றும் அனுஷ பலப்பிட்ட ஆகியோர் கைது செய்யப்பட்டு, கொழும்பு மேல் நீதிமன்றத்தால் அவர்களுக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (மு-11)

## விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

UK - 550/= (C-9578)

கப்பல் மூலம் கனடாவிற்குப்பொதிகள் அனுப்ப
**CANADA - 400/=** மட்டுமே
(நிபந்தனைக்குட்பட்டது)

**V2 TRAVELS-0768226240**

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி
- சாவகச்சேரி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

## அண்ணா வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

EXPRESS Courier Services

அண்ணா பொதிகள் சேவை

976, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணம்

021 221 5656 | 070 330 5500

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.

யாழ்ப்பாணம் | ஊர்காவத்துறை | சாவகச்சேரி | கிளிநொச்சி | முல்லைத்தீவு | மல்லாவி | வவுனியா | திருகோணமலை

(C-9624)

## தேவை

யாழ்நகரில் இயங்கும் மருந்தகம் ஒன்றிற்கு சுத்திகரிப்புத் தொழிலாளி தேவை.

தொடர்புகளுக்கு :-
077 734 7578,
076 882 8220

[365]

## வாடகைக்கு

யாழ்.ஓட்டுமடம் பகுதியில் வீடு, அலுவலகம் வாடகைக்கு.

தொடர்புகளுக்கு :-
0779384243, 0770098336

[370]

## நடமாடும் மிருகவைத்திய சேவை

சுன்னாகத்துக்கு அண்மையில் மிருக வைத்திய தேவைகளுக்கு தொடர்பு கொள்ளவும்.

Dr.K.கிருபாகரன்
0779738802
முருகேச பண்டிதர் வீதி, சுன்னாகம்.

(368)

உ
சிவமயம்
ஓம் நமசிவாய

# சைவ பரிபாலன சபையின் சைவமாநாடு

நாவலர் கண்ட இறுதிக் கனவான தனக்குப்பின் சைவத்தை காக்க எவரும் வரார், என்று வருந்திய அவர் கனவை நனவாக்க நீண்டகாலத்தின் பின் சைவ மாநாடு மாபெரும் எழுச்சியுடன் நடைபெறுவதையிட்டு பெரு மகிழ் வெய்துகிறோம். மிக நேர்த்தியான முறையில் திட்டமிட்டு துறைசார்ந்த நிபுணர்களை தெரிவு செய்து தற்காலத்திற்கு பொருந்தக்கூடிய தலைப்புக்களில் உரையரங்குகளையும், சிந்தனையரங்குகளையும் ஏற்பாடு செய்திருக்கும் சபையின் பணி பாராட்டுக்குரியதாகும்.

மாநாடு வெற்றிபெறவும் சைவ சமயம் எழுச்சி பெறவும், இறையாசி வேண்டி ஈழத்துத் தில்லைக் கூத்தன் திருவடிகளை பிரார்த்திக்கின்றோம்.

**போற்றி ஓம் நமச்சிவாய புயங்கனே மயங்குகின்றேன்**
**போற்றி ஓம் நமச்சிவாய புகலிடம் பிறிது ஒன்றுமில்லை**
**போற்றி ஓம் நமச்சிவாய புறமெனைப்போக்கல் கண்டாய்**
**போற்றி ஓம் நமச்சிவாய சயசய போற்றி போற்றி**

**க.கு.க.சிவபாலன் - காப்பாளர்**
**ஈழத்துச்சிதம்பரம் மாணிக்கவாசகர் மடாலயம், காரைநகர்.**

(C-9649)

## TECHNO WORLD

A/L தொழில் நுட்பப்பிரிவு
A/L 2017 மாணவர்களுக்குரிய செயல்முறை பரீட்சை கருத்தரங்கு

இடம் : Jaffna Town, வெலிங்டன் சந்தி
16,17,18,19/09/2017
நேரம் : 9.00 am - 2.00 pm

பொறியியல் தொழில்நுட்பம்

உயிர்முறைமைகள் தொழில்நுட்பம்

குறிப்பு : தொழில்நுட்ப பீட மாணவர்களின் கருத்தரங்கு இடம்பெறும்.

தொடர்பு : 077 017 5346

(C-9648)

## உடனடி வேலை வாய்ப்பு
## V2 TRAVELS

UK-550/=Kg

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை

நீண்ட காலமாக வேலை தேடுபவரா?
எமது அலுவலகத்திலேயே இலவசமாக கற்பித்து வேலையும் கொடுக்கின்றோம்
5,000/= (பயிற்சியின் போது) //15,000/= (பயிற்சியின் பின்னர்)
நேர்முகத் தேர்வின் ஊடாகத் தெரிவு செய்யப்படும்
இதுவரை சரியான வாய்ப்புக்கள் மற்றும் தொழில் அனுபவங்கள் கிடைக்காத வாழ்க்கையில் முன்னேற துடிக்கும் கடின உழைப்பாளிகளை எதிர்பார்க்கின்றோம்.
தகுதி:- 30 வயதிற்குட்பட்டோர் (இருபாலரும்)

49A சப்பல்லேன், யாழ்ப்பாணம் (யாழ் பொது நூலகம் முன்னால்)
0768226241

(C-9623)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## நிரந்தர வேலைவாய்ப்பு

இல :- 28, 3ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்கிவரும் எமது **Everest** நிறுவனத்திற்கு விற்பனைப் பிரதிநிதிகள் தேவை.

- வயது எல்லை இல்லை
- ஆண்/பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்
- 30000 ரூபாவிற்கு மேற்பட்ட வருமானத்தினைப் பெற முடியும்.

தொடர்புகளுக்கு :- 0779856671, 0779660885, 0771717278

(373)

## போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்

வடமாகாண ஆசிரியர் தெரிவுக்கு
சனி, ஞாயிறு
காலை 10.00 - 2.00

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
சனி 10.00 - 2.00

கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்
ஞாயிறு 10.00 - 3.00

SLAS Ltd
ஞாயிறு 9.00 - 4.00

0766883394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு யாழ்நகர்.

(C-9651)

# BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

எமது கற்கைநெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.

## Excellent Teachers' Panel & Individual Attention

### Diploma / Advanced Diploma in English

ஓரளவு ஆங்கில அறிவு உள்ளவர்கள் மேலும் அறிவை விருத்தி செய்ய சிறப்பாக அமைக்கப்பட்ட கற்கைநெறி. ஆங்கில அறிவு, இலக்கணம், இலக்கியம் என விரிவாகக் கற்பிக்கப்படும்.

### IELTS Life Skills A1 Exam - Sponsor / Settlement Visa

மூலம் UK செல்பவர்களுக்கு British High Commission னால் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை

### Spoken Sinhala

சிங்களத்தில் சரளமாகக் கதைக்க விரும்புபவர்களுக்கு உகந்த முறையில் கற்பிக்கப்படும். மாணவர்கள், தொழில் புரிவோர், சிங்களம் கற்க விரும்புவோர் அனைவருக்கும்

### Diploma in Sinhala

ஓரளவு சிங்கள அறிவு உள்ளவர்கள் மேலும் சிங்கள அறிவை விருத்தி செய்ய, சிங்களத்தினை மேலும் விரிவாகக் கற்றுக் கொள்ள விரும்புவோர்களின் தெரிவு.

### Spoken English With Grammar - Quick Learning Course

குறுகிய காலத்தில் ஆங்கிலத்தில் புலமை பெற விரும்புபவர்களுக்கு இது பொருத்தமானதாகும். பாடசாலை மாணவர்கள், தொழில்புரிவோர், ஆங்கிலம் கற்க விரும்புவோருக்கு உகந்தது.

### IELTS (Academic / General) Student Migration Visa

மூலம் செல்பவர்களது Approved Centre for Registering Online (ORS) Candidates

### வகுப்புக்கள் ஆரம்பம்

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

### Young Learners English (YLE)

வயதெல்லை 7 - 15 உட்பட்ட மாணவர்களுக்கான சர்வதேசப் பரீட்சை உடன் University of Cambridge இனால் சான்றிதழ் வழங்கப்படும்.

**Jaffna Branch :**
No.15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna.
Tel : 021 222 4550 | 076 3166 060

(C-9629)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.09.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.